Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් நவ.25-டிச.01, 2001

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 435

## எதிரணி எடுத்துள்ள புதிய வியூகம்


## அதிகரிக்கும் தேர்தல்கால அராஜகங்கள்



## ரஜினி விடுக்கும் எச்சரிக்கை

## ஸ்நேகாவால் சிக்கல்

# ஆன்மீகம்



## பூஜையின் நிம்மதி

பூஜை என்னும் சொல்லுக்கு கடவுள் ஆராதனை, அல்லது கடவுளை போற்றுதல் என்பதே அர்த்தமாகும். பலர் அறிவினால் இறைவனையும் இறை தத்துவத்தையும் அறியக்கூடிய அளவுக்கு இன்று தெளிவான சிந்தனையில் வாழ்ந்தாலும், இவர்களின் உள்ளமோ நாகரீக உலகில் தாண்டவம் ஆடுவதால், அறிவினால் இறைவனை அறிந்தும் ஆத்மீக அனுபவம் இல்லாதவர்களாக வாழ்கின்றனர். இவர்களை படிப்படியாக ஆத்மீக வழியில் உயர்த்துவதற்கு உற்ற பூர்வமான விஞ்ஞான செயற்பாடே பூஜையாகும்.

ஆதலால் பூஜையானது மூட நம்பிக்கையுடன் கூடிய அர்த்த மற்ற செயல் அல்ல. அன்று ரிஷிகளும் முனிவர்களும் பூஜை செய்து பல்வேறு சித்திகளைப் பெற்றனர்.

நாம் வீட்டிலே பூஜை செய்யும் போது அறைக் கதவை மூடிக் கொள்ள வேண்டும். பூஜை அறைக்குள் சென்றதும் எமது கண்கள் நல்லதைப் பார்க்க வேண்டும். காது நல்லதைக் கேட்க வேண்டும். வாய் நல்லதைப் பேச வேண்டும். மனம் நல்லதை நாடவேண்டும். கைகள் நல்ல செயல்களை செய்ய வேண்டும். ஆதலினால்தான் பூஜை அறையில் பக்தனின் சிந்தனை ஈஸ்வரன் மீதும், ஜெபிப்பது அவனது நாமத்தையும், கைகள் தீபாராதனையையும், என்றிருக்க வேண்டும் என சமயப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

மரணத்திற்கு எப்போதும் தயார். அது வரை இறைவா எனக்கு அமைதியைக் கொடு என கேளுங்கள். வடிவேலறிய வஞ்சகமில்லை என சத்தியம் செய்யுங்கள். நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும் வேண்டி பிரார்த்தியுங்கள். இறுதியாக பூஜையில் இறைவனிடம் கையேந்தி பிச்சை கேளுங்கள். அவன் இல்லை என்று சொல்லுவதில்லை. அப்போது பக்தனுக்கு பூஜையில் நிம்மதி பிறக்கும்.

க.பொ.புஷ்பராஜா–சிலாபம்.

## தொழுகையின் சிறப்பு

ஐந்து காரியங்கள் மீது இஸ்லாம் அமைக்கப்பட்டுள்ளது. முதலாவது, லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி-அதாவது வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வேயன்றி வேறு யாருமில்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும், திருத்தூதருமாவார் என்று சாட்சி கூறுவது, அடுத்து தொழுகையை நிலை நிறுத்துவது, ஸகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது, ரமழான் மாதம் நோன்பு நோற்பது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- இப்னு உமர் (ரலி)

ஒரு முஸ்லிம், தான் ஒரு முஸ்லிம் என்ற வகையில் இந்த ஐந்தையுமே ஒழுங்காக நிறைவேற்றுவது மிக முக்கியமாகும். ஈமானிற்கு அடுத்து எல்லாவற்றிலும் முக்கியதும், முக்கியமானதும் தொழுகையே யாகும். தொழுவதனால் பாவங்கள் அழிந்து விடுகின்றன. தொழுகைக்காக ஒழுச் செய்யும்போது உறுப்புக்களிலிருந்து பாவங்கள் போய் விடுகின்றன. துன்பங்கள் நீங்குவதற்கும் தொழுகை வழி செய்கின்றது.

'ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் குளிர்காலத்தில் வெளியே வந்தார்கள். மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன. நபி (ஸல்) அவர்கள் ஒரு கிளையைப் பிடித்தார்கள். அதிலிருந்து மேலும் இலைகள் உதிர ஆரம்பித்தன. அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் 'ஒரு முஸ்லிமான அடியார் அல்லாஹ்வின் அன்பைப் பெற நாடி (இஹ்லாஸுடன்) தொழுவாராயின், இந்த மரத்திலிருந்து இலைகள் உதிர்ந்தது போல் அவருடைய பாவங்கள் உதிர்ந்து விடுகின்றன' என்று கூறினார்.

ஓ.ஸப்றன் ஜெலீலா–தம்பாளை.

## பழிவாங்கல்

நான் உனக்கு உதவி செய்வேன், ஒத்தாசையாக இருப்பேன், நான் சொல்வதையெல்லாம் நீ செய்ய வேண்டும், நான் சொல்வதையெல்லாம் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டும், என்று; தன்னுடைய பழி வாங்கும் திட்டத்திற்கு ஆசை வார்த்தை கூறி, ஆட்களை திரட்டி அதிலே வெற்றியும் பெற்று திருப்தி காணுகின்ற மனிதர்களை சமூகத்திலே காணுகின்றோம்.

இவர்கள்; இவனும் நம்முடைய நிலைக்கு வந்து விடுவான், சம அந்தஸ்து பெற்று விடுவான், நம்மைப் போல் தராதரமுள்ளவனாக ஆகிவிடுவான் என்ற எரிச்சலினாலே இப்படியான இழிவான காரியங்களில் இறங்கி விடுகிறார்கள்.

துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். (நீதி: 17:15)

எனவே; அறிவையும் ஆற்றலையும் அதிகாரத்தையும் தவறாகவே பாவிக்கும் போலி ஆசாமிகளின் போர்வைகள் நிச்சயம் ஒரு நாள் கிழிக்கப்படும் என்பதை உணர்ந்து மற்றவர்களின் வாழ்க்கைக்கு அநீதி இழைக்காமல் ஆண்டவர் இயேசுவின் முன்மாதிரிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன்–துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.435



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 01.12.2001

கவிதைப் போட்டி இல.435
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.432

**பரிசுக்குரிய கவிதை**

### மாயாரோ

உயிருள்ளார் பெட்டி இட்டால்
ஒற்றர் புலன் ஆராய்வார்!
உயிரற்றார் வைக்குங்கால்
ஒளித்தோடி மாயாரோ?

செல்வன் அ.கலைமாறன்–கிண்ணியா.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### தேர்தல் காலமிது

உனக்கு வாய்க்கரிசி
போட்டபின்னும்
உன் வாக்குச்சீட்டு
அரசியல்வாதி வாய்க்கு
அரிசிதான்
உரிமைக்கேட்டு
ஓடாய் போனவுன்
ஓட்டுக்கு உயிருண்டு
ஏனெனில் இது
தேர்தல் காலம்.

ரெணா–கொழும்பு–13.

### அரசியல் வாதியல்ல!

பெட்டி பெட்டியாய்
பணம் கொடுத்து
விலைக்கு வாங்கிட
நான் ஒன்றும்
போலி அரசியல்வாதியல்ல.

ஆ.யாழினி–மட்டக்களப்பு.

### உயர்வு!

உயர்ந்த விலையில்
உரிந்த நுகர்வோன்!

இரா.இராமகிருஷ்ணன்–பொகவந்தலாவ.

### என்புக்கூடு....

பொருளாதாரம்
ஆடும் ஆட்டத்தில்
நாளை-இதுதான்
மனித நடமாட்டம்...!?

எஸ்.பி.பாலமுருகன்–பதுளை.

### இன்று

போரின் பாதையில் ஓடுகின்ற
வாழ்க்கைச் சக்கரத்தில்
நிலவறை கண்ட நியமங்கள்
கல்லறையாகும் நியமனங்களோ!

தெ.லோஜனா–கொழும்பு–06.



### அந்திரெக்ஸ் கடிதம்

ஆப்கானில் இருந்துவந்த
அந்திரெக்ஸ் கடிதம் கொண்டு
செம்மணித் தம்பி இன்று
செல்கிறார் ஆய்வுகூடம்.

வரதராஜன் பாலமுரளி–கொக்குவில்.

### எப்போது...?

என் உணர்வுகளுக்கு விலையாக
நீ கேட்ட சீதனமெல்லாம்.
கொண்டு வந்திருக்கிறேன்.
எண்ணிப் பார்ப்பதற்கு
எப்போது வரப்போகின்றாய்...?

த.கிருஷ்ணவேணி–பண்டாரவளை

### வினாக்கள்...

உறவுகளைத் தேடினேன்-என்
உணர்வுகளைத் தேடினேன் இறந்த
உயிரைத் தேடினேன்
உடம்பையும் தேடுகிறேன்
எல்லாம் தொடர்கின்றன.
விடையில்லா வினாக்கள் என்பதால்!

நாகவாணி–பெயாவெல்.

### எழுந்தனரே...!

நெல்மணிகள் நிமிர்ந்து நின்ற
செம்மணியில்
கண்மணிகள் புதைந்து கொண்ட
மாயமென்ன
அம்மணிகள் அழுது கதறிடவும்
எம் மணிகள் எலும்பாய்
எழுந்தனரே!

சுந்தரி பூபாலசிங்கம்– பாண்டிருப்பு.

### இதுவல்ல!

பதுங்கிப் பதுங்கி நீ மாற்றி வைக்கத்
துடிக்கும் வாக்குப் பெட்டி இதுவல்ல!
அது அந்தப் பக்கமாக இருக்கிறது!

என்.வி. மூர்த்தி–மாபேரியதென்ன.

### பிண(ஜன)நாயகம்

மரித்தோரெல்லாம்
டிசம்பர் ஐந்தில்
உயிர்த்தெழுவர்;
புள்ளடி போட்டு
வாக்குப் பெட்டிகள்
நிரப்ப!

அ.சந்தியாகோ–கண்டி.

# வாசக[ர்] சாலை

இதயம் கவர் என் இனிய முரசே!

நீ தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம், பிரமாதம். தேர்தல் காலம் என்றால் உன்வருகையை வழிமேல் விழி வைத்து காத்திருந்து பெற்றுக்கொள்வது எமக்கு அதில் ஓர் இன்பம், ஏன்? என்றால் தினமுரசு கூறும் தீர்க்கதரிசனம் என்றும் பொய்த்ததில்லை அல்லவா?

க.சுதர்சன்–செங்கலடி.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,


முரசு 432ல் இடம்பெற்ற அம்சங்கள் யாவும் சிறப்பாக இருந்தன. குறிப்பாக, லேடீஸ் ஸ்பெஷலை அலங்கரித்த அம்சங்கள் பெண்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருந்தன. மேலும், 'ஆக்கபூர்வமான உணர்வு' ஆக்கம் சிறப்பாக இருந்தன. மற்றும் அமானுல்லாஹ் ஏ.மஜீத் எழுதிய 'ரசிகன்' சிறுகதை நன்றாக இருந்தது. பாராட்டுக்கள். நன்றி.

மங்களா வாமதேவன்–தங்களா வாமதேவன்–மட்டக்களப்பு.

என் இனிய முரசே

நீ வாராவாரம் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை! அதிலும் எனக்கு மிகவும் பிடித்தவை 'கவிதைப் போட்டி', 'தேன் கிண்ணம்', 'பாப்பா முரசு' எழுத்தாளர் சுஜாதாவின் 'அனிதாவின் காதல்கள்', 'அரசியல் கட்டுரைகள்' யாவும் நான் விரும்பி படிப்பேன். அறிவினை வளர்த்து சிந்தைக்கு விருந்து கொடுக்கும் முரசே வையகத்தில் நீ வாழ்க வளம் பெற!

ஆர்.செல்வா–மடுக்கோவில்.



புதிய சகத்திரத்தை புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல செய்திகளையும், சூடான தகவல்களையும் வழங்கும் தினமுரசே! உன்னை காண நான் ஒவ்வொரு வாரமும் தவமிருக்கிறேன். உன் வாசகங்கள்தான் என் சுவாசம். மேலும், உண்மையை உண்மையாய் 'நடுநிலமையோடு' அரங்கேற்றும் உன்பணிக்கு நிகர் நீயே. நீ நீடூழி வாழ உனை வாழ்த்தும்.

பி.ஹ.அ.ஷிப்லி–நிந்தவூர்–18.

உலகெங்கும் உலாவரும் தமிழ் பேசும் மக்களின் இதயம் கவர் இதழாம் இனிய தினமுரசே! உலகெங்கும் நடக்கும் அரசியல் சம்பவங்களைத் தெளிவுபடுத்தும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', கற்பனை நயத்துடன் சுவைக்க வைக்கும் 'கவிதைகள்', விறுவிறுப்பூட்டும் 'தொடர்கதைகள்', வாசகர்களின் உள்ள குறை நிறைகளை சுட்டிக்காட்ட புதிதாக புகுத்தப்பட்ட 'உங்கள் பக்கம்' ஆகியவை அற்புதம். உன் சேவை தொடர்ந்திட என்னவனின் பாராட்டு.

எட்வேட்–பெரியநீலாவணை–01.

என் இனியமுரசே!

உன் ஆக்கங்கள் அத்தனையும் சூப்பர். கவிதைப் போட்டி சினிவிசிட், தேன்கிண்ணம், லேடீஸ் ஸ்பெஷல் போன்றவை இனிமையிலும் இனிமை. நீ கொண்டு வரும் அம்சங்கள் அத்தனையும் என்னை வியக்க வைக்கிறது. உன் சேவை இன்னும் சுவையுடன் தொடர வாழ்த்தும்,

திருமதி றசீனாசலீம்–சாய்ந்தமருது–14.

கடைசியாக என் கரம் கிட்டிய முரசு... 431 தாங்கி வந்த அத்தனை அம்சங்களும் அற்புதமாகத்தான் இருக்கிறது.

அதில் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அரசியல் அலசல்', தண்டாயுதன் தரும் 'மூண்டது போர்', அத்தனையும்.. அருமையாக இருந்தது.

'தகவல் பெட்டி' தாங்கி வந்த தகவல்களில் டெண்டுல்கரின் நகல்கள், அமெரிக்க கட்-அவுட், வைரங்களாலான நெக்லஸ், படிக்கத் தடையில்லை. போன்ற தகவல்கள் தரமானதாக ஜொலித்தன.

அது போல.. முரசின் 'சிறுகதைகளும்', 'தேன் கிண்ணம்' கொண்டு வந்த கவிதைகளும் பிரமாதமாகவே இருந்தது. பாராட்டுக்கள்.

புதிய காத்தான்குடி–முஸம்மில்–குவைத்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

என்றும் என் இதயத்தில் குடியிருக்கும் முரசே! நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் மிக மிக நன்று. ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று மிஞ்சும் வண்ணமுள்ளன. முரசுக்கு நிகர் முரசே தான். உனது பணி மேலும் சிறப்புற்று விளங்க என் இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்.

எஸ்.மாலா–ஜோர்டான்.

# உங்கள் பக்கம்

## பரிசு கிடைக்காதவர்களுக்கு பேராசிரியர் விளக்கம்

2000 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை எழுத்தாளர்களின் சிறந்த தமிழ் நூல்களுக்குரிய அரச இலக்கிய விருதுபற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பரிசுபெறாத சில எழுத்தாளர்கள் புனைப் பெயரிலும் வேறு பெயர்களிலும் பரிசுத்தேர்வு பற்றியும், நடுவர்கள் பற்றியும், இலக்கியக் குழு உறுப்பினர்கள் பற்றியும் சில பத்திரிகைகளில் உண்மைக்குப் புறம்பான, அவதூறான முறையில் தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களது பொய்யான குற்றச் சாட்டுக்களுக்கு விளக்கம் கூற வேண்டிய அவசியம் இல்லை எனினும், பரிசுத்தேர்வு நடைமுறைபற்றி எழுத்தாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெளிவுபடுத்துவதற்காகத் தமிழ் இலக்கியக் குழு இவ்வறிக்கையை வெளியிடுகின்றது.

2000 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களே பரிசுத் தேர்வுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. தேர்வு விதிகளுக்குப் புறம்பான நூல்கள் நிராகரிக்கப்பட்டு, தேர்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்கள் வழக்கம்போல் அவ்வவ் துறையில் தேர்ச்சியும் அனுபவமும் உடைய மும்மூன்று நடுவர்களுக்கு அனுப்பப்பட்டன. நடுவர்களின் அறிக்கைகள் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னர் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே பரிசுக்குரிய நூல்கள் இலக்கியக் குழுவினால் ஏகமானதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இம்முறை நடுவர்களாகப் பணியாற்றியவர்களின் அறிவிலும் அனுபவத்திலும் நடுநிலைமையிலும் இலக்கியக் குழுவுக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

தேர்வுக்கு அனுப்பப்படும் எல்லா நூல்களும் பரிசு பெறுவதில்லை. சிறந்த நூல்களே தெரிவு செய்யப்படுகின்றன. ஒருதுறையில் தரமான நூல்கள் எவையும் இல்லையென்றால் அத்துறைக்குப் பரிசு வழங்குவதில்லை என்பது இலக்கியக் குழுவின் தீர்மானம். தரமற்ற நூலுக்குப் பரிசு வழங்கிப் பரிசின் தரத்தைக் குறைக்கக் கூடாது என்பதில் சுயகௌரவமுள்ள எழுத்தாளர்கள் உடன்படுவார்கள் என்றே இலக்கியக் குழு நம்புகின்றது. தரத்தைத் தீர்மானிப்பது நூலாசிரியரா, நடுவர்களா என்பதே பிரச்சனை. தன் நூல் மிகச் சிறந்தது என்று கருதும் உரிமை நூலாசிரியருக்கு உண்டு. நடுவர்களும் அவ்வாறே கருதவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கக் கூடாது. தன் நூலை விருதுக்குத் தேர்ந்தெடுக்காமைக்காக நடுவர்களைப் பழிதூற்றுவது எழுத்தாளருக்குக் கௌரவமாகாது. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்பது எல்லாப் போட்டிகளுக்கும் உரிய ஒரு பொது விதியாகும்.

நமது எழுத்தாளர்கள் சிலர் பரிசு பெறுவதற்காக எத்தகைய முறைகேடான வழிமுறைகளைக் கையாள்வதற்கும் தயங்குவதில்லை என்பது கவலைக்குரியது. இத்தகைய முறைகேடுகள் பல கடந்த ஆண்டுகளிலும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இம்முறையும் முகப்புப்பக்கத்தில் முதற்பதிப்பு 2000 என்று அச்சிடப்பட்ட ஒரு சிரேஷ்ட எழுத்தாளரின் பதினொரு சிறுகதைகளைக் கொண்ட ஒரு தொகுதியில் 2001 ஆம் ஆண்டு வெளிவந்த ஐந்து சிறுகதைகள் வெளியீட்டுத் திகதியுடன் இடம் பெற்றிருந்தன. 2001 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட சிறுகதைகள் 2000 ஆம் ஆண்டில் வெளிவந்த நூலில் இடம்பெற்ற மர்மம் அந்த எழுத்தாளருக்கே வெளிச்சம்.

இத்தகைய மோசடிகளையும், எழுத்துத் திருட்டுக்களையும் பத்திரிகையாளர்கள் அம்பலப் படுத்துவார்களாயின் அது எமது இலக்கிய வளர்ச்சிக்கு உபகாரமாகும். பொறுப்புணர்வுள்ள பத்திரிகையாளர்கள் வயிற்றெரிச்சல்கள் இல்லாதவர்களாகவும், உண்மைகளைத் தேடி வெளியிடுபவர்களாகவும், தகவல்களைத் திரட்டுமிடத்து நம்பத் தகுந்தவர்களையும் தக்க மூலாதாரங்களையும் நாடித் தமது பத்திரிகையின் நம்பகத் தன்மையைப் பேண விழைபவர்களாகவுமே இருப்பர் என்று கருதுகிறோம்.

பரிசுத் தேர்வு விவரங்கள் முறைப்படி அறிவிக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டும் அறியாமையின் விளைவானதே. சிங்கள, தமிழ், ஆங்கில நூல்களுக்குரிய பரிசு விவரங்கள் ஒரே தினத்தில் அவ்வவ் குழுத் தலைவர்களினால் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அறிவிக்கப்பட்டன. தொலைக் காட்சியிலும் வானொலியிலும் அவை அறிவிக்கப்பட்டன. தமிழ்ப் பத்திரிகைகள் சில உரிய காலத்தில் இதனை வெளியிடவில்லை என்பதற்காக இலக்கியக் குழுவைக் குற்றம் சாட்டுவது முறையல்ல.

இல்க்கியக் குழுச் செயலாளர் கொச்சையாகத் தமிழ் பேசும் ஒரு சிங்களப் பெண் என்றும் அநாகரிகமான இனத்துவேச நோக்கில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. திருமதி அசோகா ஜெயலத் நன்கு தமிழ் பேசத் தெரிந்தவர். அவரது பணிகளையிட்டு இலக்கியக் குழு மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறது. 1970 களில் கே.ஜி. அமரதாச என்ற தமிழ் அறிந்த சிங்களவரே தமிழ் இலக்கியக் குழுவுக்கும் செயலாளராக வெகு சிறப்பாகப் பணியாற்றினார் என்பதையும் நாம் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

பரிசு பெறாத எழுத்தாளர் சிலரின் குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை என்பதை தமிழ் இலக்கியக் குழு மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றது.

பேராசிரியர். எஸ். தில்லைநாதன்
தலைவர், தமிழ் இலக்கியக்குழு
இலங்கைக் கலைக் கழகம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):–074-513266

# வன்முறைகளை கட்டுப்படுத்தத் தவறும் பொலிஸ் அதிகாரிகள்

## பதவி நீக்கப்படுவார்களென பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

**அ**திகரித்து வரும் தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்தினுடையது என்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாளுக்கு நாள் அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் தத்தமது பிரதேசங்களில் தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்தத் தவறும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் பதவி பறிக்கப்படும் என்று பொலிஸ் மாஅதிபர் லகி கொடித்துவக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வன்முறைகள் தீவிரமடையாத வகையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதும் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதும் பொலிஸ் அதிகாரிகள் அனைவரதும் கடமையாகும் என்று தெரிவித்த லக்கி கொடித்துவக்கு வன்முறைகளைத் தூண்டுவோருக்கு எதிராகப் பக்கச் சார்பின்றி நடவடிக்கை எடுக்க பொலிஸ் அதிகாரிகள் தயங்கக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான இறுதிக் கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பொலிஸ்மா அதிபர் லக்கி கொடிதுவக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாநாடொன்றை நடத்தினார்.

சகல பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர்களும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றுகையிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் தேர்தல் வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவது குறித்தும் அதனைக் கட்டுப்படுத்தும் வழிவகைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தேர்தல் தினத்தன்று மேற்கொள்ளப்பட வேண்டிய பதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைகள் குறித்தும் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதியான நேர்மையான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ் மா அதிபர் சகல தரப்பினரையும் கேட்டுக் கொண்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தேர்தல் கண்காணிப்புக்காக இலங்கை வந்திருக்கும் பொது நலவாய நாடுகளைச் சேர்ந்த அவதானிப்பாளர்கள் அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

## மட்டு நகரில் புலிகளின் பிரசுரம்

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடுள்ள பிரதேசங்களில் புலிகளினால் பரவலாகத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தமிழ் இளைஞர் யுவதிகள் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்து கொண்டு ஸ்ரீலங்காப் படையினருக்கெதிராகப் போராட வருமாறு அந்தத் துண்டுப் பிரசுரத்தில் அறை கூவல் விடுக்கப்பட்டுள்ளது. புலிகளுடன் இணைந்து கொள்ள முன்வராத தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு அந்தத் துண்டுப் பிரசுரத்தில் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இத்தகைய துண்டுப்பிரசுரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## படையினர் அனுமதி

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உழவு இயந்திரங்கள் எடுத்துச் செல்வதற்கு படையினரால் விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இது பெரும்போக நெற்செய்கைக்குரிய காலமாகையால் விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க படையினர் கடந்த திங்கள் முதல் இந்த அனுமதியை வழங்கியுள்ளனர்.

உழவு இயந்திரங்கள் கொண்டு செல்வதற்கு மாத்திரமே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. உழவு இயந்திர இழுவைப் பெட்டிகளைப் புலிகளின் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கான தடை தொடர்ந்து அமுலில் இருக்கிறது.

## விசேட பேட்டி

**பொதுத்தேர்தல் மற்றும் தற்கால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய பேட்டி**

**17ம் பக்கத்தில் பிரசுரமாகின்றது.**

## சடலங்கள் கையளிப்பு

**வி**டுதலைப் புலிகளின் ஐந்து சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குருநகர் கடலேரி வழியாக வள்ளங்களில் எடுத்துச்சென்று பாசிக்குடாவில் வைத்து விடுதலைப்புலிகளிடம் கையளித்துள்ளது.

இச்சடலங்களில் ஒன்று கொழும்புத்துறை கடற்கரையில் ஒதுங்கியதும், மற்றைய நான்கு சடலங்களும் கைதடிப் பகுதியில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்ட போது குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டவையுமாகும்.

இச்சடலங்கள் ஒருவார காலமாக யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. திங்கட்கிழமை பகல் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளால் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வத்தளை துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் பலி

## பொது மக்கள் தாக்கி 8 பொலிஸார் படுகாயம்

**வ**த்தளை கெரவலப்பிட்டிய பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றை கலைக்க பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டதுடன், நான்கு பொலிஸார் உட்பட 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய தாக்குதலிலேயே நான்கு பொலிஸார் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வத்தளை ஹெந்தளைப் பகுதியிலுள்ள கெரவலப்பிட்டி உவர் நிலப்பகுதி அபிவிருத்திப் பணிக்குக் கடலிலிருந்து குழாய்கள் மூலம் மணல் நிரப்பும் வேலையில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் 'கடல் மண் அகழும்' நடவடிக்கையால் தங்கள் மீன்பிடித் தொழில் கடுமையாகப் பாதிப்படைவதாகக் கூறி அப்பகுதி மீனவ மக்கள் மேற்படி நிறுவனத்திடம் நஷ்ட ஈடு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 8 பொலிஸார் காயமடைந்தனர்.

## வாகரை பிரதேச செயலாளர் புலிகளால் கடத்தல்

**ம**ட்டக்களப்பு-வாகரைப்பிரதேச செயலாளர் பாலசுப்பிரமணியம் புலிகளால் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் ஸ்ரோன்ஸ் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்திலிருந்த வேளையிலேயே பிரதேச செயலாளரின் பாவனைக்கென வழங்கப்பட்டிருந்த டபள் கப் வாகனத்துடனேயே அவர் கடத்தப்பட்டுள்ளார்.

கடந்த 15ம் திகதி இரவு 11.15 மணியளவில் பிரதேச செயலாளரின் வீட்டிற்குள் புகுந்த நபர்கள் வாகனத்துடன் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

பிரதேச செயலாளரும், அவரது வாகனமும் கடத்தப்பட்டிருப்பது தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மட்டக்களப்பு இராணுவ தலைமையகத்துக்கு அறிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு வடக்கே உள்ள வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவு மட்டக்களப்பு பொலன்னறுவை திருக்கோணமலை மாவட்டங்களின் எல்லையிலுள்ள பகுதியாகும். வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவின் பெரும்பகுதி புலிகளின் ஆளுகையின் கீழ் உள்ளது.

## ஏறாவூரில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் நால்வர் பலி!

**ஏ**றாவூர் நாலாம், ஐந்தாம் குறிச்சிப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இரவு பொலிஸார் நடத்திய ஷெல் வீச்சில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 6பேர் படுகாயமடைந்துள்ளனர். இரவு 8 மணிமுதல் 8.30 மணிவரை இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டே தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அரைமணி நேரத்தில் பொலிஸார் மேற்கொண்ட 50 இற்கும் மேற்பட்ட ஷெல் வீச்சுக்களில் இந்த அநர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு கிலோ மீட்டர் தூர இடைவெளியிலுள்ள ஏறாவூர் பிரதான பொலிஸ் நிலையம் மற்றும் செங்கலடி பொலிஸ் நிலையங்களிலிருந்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களினால் ஏறாவூர் நாலாம் குறிச்சி காளி கோயில் வீதி மற்றும் ஐந்தாம் குறிச்சி பெரிய தம்பிரான் கோயில் வீதிகளில் உள்ள வீடுகள் மீது குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதனால் பெரிய தம்பிரான் கோயில் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்தம்பியும் (வயது 60), அவரது மனைவியும் உயிரிழந்துள்ளனர். இதேநேரம், காளி கோயில் வீதியில் பத்மநாதன் சுரேஸ்ும் (வயது 11), அவரது தாயாரும் இறந்துள்ளனர்.

இதேவேளை வவுனியா-மதவாச்சி வீதியில் பூனாவ பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பொலிஸ் அதிகாரியொருவர் உட்பட மூன்று பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிரிவின் கராஜ் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் பீ.கே.நோனிஸ் உட்பட மூவர் காலை 9.30 மணியளவில், அநுராதபுரம் சென்றுவிட்டு இந்த வீதியூடாகத் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே பூனாவப் பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூனாவ பொது மயானத்திற்கும் அவ் வீதியிலுள்ள கடற்படை முகாமுக்குமிடையிலேயே சிங்கள மக்கள் வாழும் பகுதியில் இந்த சக்திமிக்க கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## அடுத்து அமையப்போவது தேசிய நல்லிணக்க அரசு என்கிறார் ஜி.எல்.பீரிஸ்

**எ**திர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைக்க அழைப்பு விடுவார் என கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய வர்த்தக சம்மேளனத்தில் 43 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பேராசிரியர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெறும் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு. இவ்வாறானதோர் சூழ்நிலையில் அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன் தேசிய நல்லெண்ண அரசொன்றை அமைப்பதற்கான அழைப்பு விடுக்கப்படும். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இதுவே நாட்டிற்கு மிகவும் அவசியமாகவுள்ளது. இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அதிகப்படியான ஆசனங்களுடன் வெற்றி பெற்றாலும், நாம் தேசிய நல்லிணக்க அரசொன்றையே அமைக்கவுள்ளோம். அனைவரது எண்ணமும் இதுவாகவே இருப்பதால் இதற்கான அழைப்பை ரணில் விக்கிரமசிங்க விடுப்பார்.

தற்போதைய நிலையில் நாடு மிகவும் மோசமான பொருளாதார நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அந்நிலையிலிருந்து நாட்டை மீட்பதானால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தோற்கடிக்கப்பட வேண்டும். இதன் மூலம் மட்டுமே நாட்டை அழிவுப் பாதையில் இருந்து காப்பாற்ற முடியும்.

நாம் வெற்றிபெறும் பட்சத்தில் இந்த யுத்தத்திற்கு சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காண முற்படுவோம். அதற்காக எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த அரசு பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் சமாதானத்தைக் காணத் தவறிவிட்டதெனவும் தெரிவித்தார்.

## மகனை புலிகளிடம் ஒப்படைத்த பின்னர் தபாலதிபருக்கு விடுதலை

**த**மது மூன்று பிள்ளைகளில் ஒருவரை புலிகள் இயக்கத்துக்கு வழங்கிய பின்னர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட மட்டக்களப்பு தபால் அதிபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டுவாரங்களுக்கு முன்னர் இந்த தபால் அதிபர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டார். இவரது பிள்ளைகளில் ஒருவரை இயக்கத்தில் சேர்க்க வேண்டும் என மனைவிக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் 18 வயது மகன் கொக்கட்டிச் சோலையில் உள்ள புலிகளின் முகாமில் சரணடைந்ததையடுத்து இவர் விடுவிக்கப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வாழைச்சேனையில் கிராம சேவகர் ஒருவரும் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இரண்டு பிரதான கட்சிகளும் பொது மக்களின் சுதந்திரத்தை பறித்ததாகக்கூறி உரிமை மீறல் மனு!

**எ**திர்வரும் பொதுத்தேர்தலில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியும் போட்டியிடுவதைத் தடை செய்யக்கோரி கொழும்பு உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை இவ்விரு கட்சிகளும் மீறிவிட்டதால் இவை எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையை இழந்துவிட்டதாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டொன் றொபேட் கீகனகே என்ற பொது மகனே இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்விரு கட்சிகளும் முன்னர் ஆட்சியில் இருந்த காலத்தில் பொதுமக்களின் சுதந்திரத்தைப் பறித்தன.

அவர்களை மிக மோசமாகச் சித்திரவதைகளுக்குட்படுத்தின. சட்டரீதியாகவும், சட்டவிரோதமாகவும் பொதுமக்களைக் கைது செய்து அவர்களுக்கான சம உரிமைகளை மறுத்தது உட்பட பல்வேறு அடிப்படை உரிமைகளையும் மீறியுள்ளன. என அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனது இந்த மனுவை நீதிமன்றத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பியுள்ள இவர், மேற்படி காரணங்களுக்காக இவ்விரு கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுவதைத் தடைசெய்யுமாறும், கோரியுள்ளார்.

இதில் பிரதிவாதிகளாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபரைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவும் விசாரணைக்கு எடுக்கப்படும் மனுக்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள அதேநேரம் இது எப்போது விசாரணைக்கு எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படவில்லை.

## தமிழ் பயணிகளிடம் பணம் பறிப்பு

**கொ**ழும்பு மத்திய பஸ்தரிப்பு நிலைய பாதுகாப்பு ஊழியர்கள் தமிழ்ப் பயணிகளை அச்சுறுத்தி பலவந்தமாகப் பணம் பறித்து வருவதாகப் பயணிகளிடமிருந்து பல முறைப்பாடுகள் தினமும் கிடைத்துவருவதாக மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் மன்னார் வங்காலை வாசியான அ.தேவகுமாரன் பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடன் இயந்திரப்படகுக்கான மோட்டார் இயந்திரமொன்றினை மன்னார் பஸ்ஸில் எடுத்துச்செல்ல முற்பட்டபோது பஸ்தரிப்பு நிலையத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு ஊழியர்களினால் மிரட்டப்பட்டு ஆயிரம் ரூபா பணம் பெறப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவினர் விசாரணை நடத்தியதில் பாதுகாப்பு ஊழியர்கள் ஆயிரம் ரூபாவை மிரட்டிப் பெற்றது உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரஜைகள் குழுவின் செயலாளர் என்.ஜெயபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பை விவாதத்திற்கு அழைக்கிறது புதிய ஜனநாயகக் கட்சி

**தா**யகம் காப்போம், தமிழராட்சி மீட்போம் என்னும் முழக்கத்துடன் தமிழர் கூட்டணி தேர்தல் களத்தில் குதித்துள்ளது. அப்படியானால் 1976 இல் பெரும் ஆரவாரத்துடன் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு முன்னைய தேர்தல்களில் முழங்கி வாக்குகளை வாங்கிய தமிழீழக் கோரிக்கைக்கு என்ன நடந்து விட்டது. அதனை எங்கே புதைத்துவிட்டு இன்று வந்து புது வேடம் போட்டு தமிழர் கூட்டணியினர் வாக்குகள் கேட்கிறார்கள் என்று புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்தும் போது தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கு சாவல் விடுத்தார்.

அன்று தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தபோது எமது கட்சி அதனைச் சாத்தியமற்றதும் தூரநோக்கற்றதும் என்று கூறி விமர்சனம் செய்தது மட்டுமன்றி அதன் மூலம் வரக்கூடிய எதிர் விளைவுகள், அழிவுகள் பற்றி எடுத்துக் கூறியது.

மறைந்த தோழர் சண்முகதாசனும் நானும் பொது மக்கள் மத்தியில் பல விவாதங்களில் கலந்து கொண்டதை மக்கள் இன்றும் நினைவில் வைத்திருப்பார்கள். இன்றும்கூட கூட்டணியின் நிலைப்பாடு பற்றி அதன் தலைவர்கள் எவருக்கும் அரசியல் நேர்மையும் துணிவும் இருந்தால் எமது கட்சி பகிரங்க விவாதம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கின்றது. அவர்கள் அத்தகைய அரசியல் விவாதத்துக்கு பொது மக்கள் முன்னிலையில் வருவார்களா? அல்லது தமிழர் ஐக்கியம் என்னும் பெயரில் கூட்டணியைக் கொலுவேற்ற நிற்கும் எத்தகைய பொது அமைப்புகள் ஏதாவது இப்படியான ஒரு விவாதத்திற்கு ஒழுங்கு செய்ய முன்வருவார்களா? என்று செந்திவேல் சவால் விடுத்தார்.

## புலி உறுப்பினர் சுட்டுக்கொலை

**ம**ட்டக்களப்பு-பட்டிருப்புப் பாலத்தடிச் சோதனைச் சாவடியில் புலி உறுப்பினர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

படையினர் பஸ்ஸில் வந்த பயணிகளைச் சோதனையிட்டுக் கொண்டிருந்த போது கையில் குண்டுடன் காணப்பட்ட புலி உறுப்பினர் பொது மக்களுக்குள் மறைந்து நழுவிச் செல்ல முற்பட்டபோது படையினர் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த புலி உறுப்பினரின் சடலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு ஊடாகப் புலிகளிடம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் திங்கள் காலை 10 மணிக்கு நடந்தது. கொல்லப்பட்டவரிடமிருந்து குண்டு மீட்கப்பட்டது. கொல்லப்பட்டவர் ஞானசேகரன்-குமரன் எனும் புலி உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# முரசம்

## "அழைத்தாலும் போகமாட்டோம்"

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

இனப்பிரச்சனைத்தீர்வு தொடர்பாக எதிர்காலத்தில் நடைபெறும் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் தாம் பங்கெடுக்கப் போவதில்லை என்று தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

'அழைத்தாலும் போகமாட்டோம்' என்று கூறி வருகிறார்கள்.

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதாலேயே இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக தமிழ்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தமிழ் மக்களை கவருவதற்காக கூறப்படும் ஒரு பொறுப்பற்ற கருத்து என்பதை மற்றனைவரை விடவும் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினர் நன்கறிவர்.

ஏனெனில் போதியளவு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமாயின் புலிகள் உள்ளிட்ட சகல தரப்புக்களுடனும் பேச வேண்டும் என்பதே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அபிப்பிராயம்.

இந்தப் பிரச்சனையில் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்ட லியாம் பொக்ஸ் முதல் எரிக் சொல்ஹெய்ம் வரை சகலரும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர்.

இவை அனைத்தையும் நிராகரிக்கும் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு 'அழைத்தாலும் போகமாட்டோம்' என்று கூறுவது, பிரச்சனை தீருவதை நாம் விரும்பவில்லை என்று இன்னொரு வகையில் சொல்வதாகத்தான் கருத வேண்டியுள்ளது.

யுத்தம் நிறுத்தப்படுவது தொடர்பில் புலிகளும் அரசாங்கமும் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்தினால் போதும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு என்று வரும் போது இவ்விரு தரப்பையும் தாண்டி அந்த ஏற்பாடு அமைய வேண்டும். இல்லாதுபோனால் அது அர்த்தமுடையதாக இருக்காது.

இந்த உண்மை தமிழ்க்கட்சித் தலைவர்களுக்கு பரியவில்லை என்று நினைக்கத் தேவையில்லை. இருபக்க அழுத்தத்துக்குள் தவிக்கும் அவர்களுக்கு புலிகளையும் ஏமாற்றி மக்களையும் ஏமாற்ற இனப்பிரச்சனையை ஒரு ஆயுதமாக பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

இது குறித்து கவலைப்படாமல் இருந்துவிடலாம்! ஆனால் துரதிஷ்டவசமாக இத்தகைய நிலைப்பாடுகளினால் தமிழ் மக்களின் பிரச்சனைகள் சர்வதேச அரங்கில் குறைத்து மதிப்பிடப்படும் அபாயம் இருக்கிறது.

புலிகளின் போராட்டத்தை தமது சுகபோக வாழ்வுக்காக அடவு வைக்கும் தமிழ்க்கட்சிகள், இருப்பதையும் கெடுத்து குட்டிச் சுவராக்குவதிலேயே குறியாக இருக்கின்றன.

'தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதை நிராகரிக்கிறார்கள்' என்ற விடயம் மக்கள் நலனை பொறுத்த வரையில் பாரதூரமான பிரதிகூலத்தை தோற்றுவிக்கக்கூடியது.

உண்மையிலே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக புலிகளை ஏற்பதாயின் தேர்தலில் இருந்து விலகிக்கொள்வதே தமிழ்க்கட்சித் தலைவர்கள் மக்களுக்கும், புலிகளுக்கும் செய்யும் நன்மையாக இருக்கும்!

அதை விடுத்து கவர்ச்சிகரமான வார்த்தை ஜாலங்களால் மக்களை ஏமாற்ற எடுக்கும் முயற்சிகள் தீர்வு தொடர்பில் இன்னுமின்னும் பின்னடைவை தோற்றுவிக்காது இருக்க வேண்டும்! ▬ ▬

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# அதிகரிக்கும் தேர்தல்கால அராஜகங்கள்

தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் ஆயிரத்தை எட்டியுள்ளன. இதே வேகத்தில் வன்முறைகள் அதிகரிக்கும் பட்சத்தில் டிசம்பர் ஐந்தாம் திகதியாகும்போது இந்த நாட்டின் தேர்தல் வரலாற்றில் அதிகப்படியான வன்முறை தினமாக அது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தினசரி 70-90 வரையிலான வன் முறைச்சம்பவங்கள் குறித்து முறையிடப்படுகின்றது. இவற்றில் மிகப்பெரும்பாலானவை குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மாத்திரமே நடைபெறுகின்றன. சிலாபம், ஆனைமடுவை அனுராதபுரம், கேகாலை, கண்டி, ஹம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய இடங்களே முன்னணி வகிக்கின்றன. அத்துடன் கடந்த தேர்தல்களில் வன்முறைகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படாத பலர்மீதும் இம்முறை விரல் நீட்டப்படுகின்றது. குறிப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியில் புத்தளம் மாவட்ட வேட்பாளர்கள் மீதும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

எவ்வாறெனினும் தற்போது பதிவாகியுள்ள வன்முறைகளின் அளவையும் அவற்றின் தன்மையையும் நோக்குமிடத்து அடுத்து வரும் நாட்கள் இதைவிட மோசமாக இருக்கப் போகின்றன என்பதை மட்டும் தெளிவாக உணரலாம்.

தேர்தல் வன்முறைகள் பொதுஜன ஐக்கிய முன்னணியினரால் மாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சியினாலும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை ஏற்கக் கூடிய போதிய ஆதாரங்கள் சுயாதீன கண்காணிப்புப் பிரிவுகளினால் முன்வைக்கப்படுகின்றது. வன்முறைக்கு, வன்முறை யூடாகவே பதிலளிக்க வேண்டும் என்று சில ஐ.தே.க. தலைவர்கள் பகிரங்கமாகவே கூறி வருகின்றனர். குறைந்த பட்சம், மாத்தறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், அம்பாறை ஆகிய இடங்களில் ஐ.தே.க. துப்பாக்கிகளும் வெடித்துள்ளன என்பதற்கான போதிய சான்றுகள் இருக்கின்றன.

தேர்தல் காலத்திலும் சரி, ஏனைய காலங்களிலும் சரி வன் செயல்கள் நடைபெற்றால் அவற்றை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும், அதன் பொலிஸ் பிரிவுக்குமே உண்டென்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

தனக்கு உத்தரவிடும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்குக்கிடையாது என்று முழங்கிய பொலிஸ்மா அதிபரினால் தினசரி எத்தனை வன்முறைகள் நடைபெற்றுள்ளன என்று பட்டியல் வெளியிடுவதைத்தவிர வேறு எதனையும் செய்ய முடியாதுள்ளது.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக பொது மக்களும் சிவில் அமைப்புக்களும் உரத்துக்குரல் கொடுப்பதற்குக் காரணம் வன்முறைகள் ஐ.தே.க.வுக்கு எதிராக நடைபெறுகின்றன என்பதற்காக அல்ல. நீதியான, நேர்மையான தேர்தல் ஒன்றுக்கான சாத்தியக்கூறு வன்முறையினால் இல்லாமல் ஆக்கப்படுகின்றது என்பதனால்தான். கொலை செய்வதற்கான ஒரு வாய்ப்பாக தேர்தல் மாறி வருகின்றது என்பதனால்தான்.

கடந்த காலங்களிலும் தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றதாகக்கூறும் குருட்டுத்தனமான ஒப்பீடுகளால் தற்போதைய நிலவரத்தை நியாயப்படுத்த நினைப்பது ஆபத்தானது.

தேர்தல் வன்முறை எனும் போது அது இரத்தம் சிந்தும் செயற்பாட்டை மாத்திரம் குறிப்பதில்லை. நீதியான, நியாயமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தடையாக அமையும் சகல அம்சங்களையும் வன்முறை பட்டியலிலே சேர்த்தாக வேண்டும். அந்த வகையில் பார்த்தால் முறையற்ற விதத்தில் பொதுச் சொத்துக்கள் கையாடப்படுவதும் சிவில் சட்ட விதிகளை மீறுவதும் கூட வன்முறையாகவே கணிக்கப்பட வேண்டும்.

சகல விடயங்களுக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவப் போவதாகக் கூறி 17 ஆவது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதனூடான ஆணைக் குழுக்களை அமைக்கும் பணி நிறைவடையும் முன்னரே அரசாங்கம் கவிழ்ந்தது என்பது உண்மையாக இருப்பினும் அந்த 17 ஆவது திருத்தத்தின் குறிக்கோள், அதாவது தேர்தல், நீதி, பொலிஸ், பொதுச்சேவை என்பன சுயாதீனமாக நடைபெறவேண்டும் என்பதை சகல அரசியல் கட்சிகளும் மாற்றுக் கருத்தின்றி கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் ரிமோட் கொன்ட்ரோலாக இருந்து 17 ஆவது திருத்த சட்டத்தை கொண்டுவரச் செய்த ஜே.வி.பி.யோ அதனை கொண்டு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியோ அதற்கு ஆதரவு வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சியோ அந்த சட்டமூலத்தின் கோட்பாட்டை அர்த்தப்படுத்துவதாகத் தெரியவில்லை.

அதிகரித்துச் செல்லும் வன்முறைகளுக்கு மத்தியில் தேர்தல் ஆணையாளரும் பொலிஸ்மா அதிபரும் தத்தமது அதிகாரங்கள் தொடர்பில் முரண்பட்டு நிற்கின்றார்கள். இது சட்டத்தை மீறுபவர்களுக்கு மேலும் சாதகமான நிலைமையை தோற்றுவித்துள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் திணைக்கள இடமாற்றங்களை இரத்துச் செய்யுமாறு முன்னதாக தேர்தல் ஆணையாளரினால் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது. பொலிஸாரை இடமாற்றம் செய்வது தன்னுடைய வேலை என்றும் அதில் தலையிட வேண்டாம் எனவும் பொலிஸ்மா அதிபர் லகி கொடிதுவக்கு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயகவுக்கு பதிலளித்திருந்தார். இவர்கள் இருவருக்கும் இடையிலான கயிறிழுப்பின் இரண்டாவது சுற்றும் ஆரம்பமாகியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் சுமார் 400 அரசாங்க வாகனங்களை கைப்பற்றுமாறு கடந்த வாரம் பொலிஸ்மா அதிபருக்கு இரண்டாவது தடவையாகவும் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டார். அந்த உத்தரவை செயற்படுத்தாமல் விட்டதன் மூலம் அதனையும் நிராகரித்திருக்கிறார் பொலிஸ்மா அதிபர்.

தேர்தல் ஆணையாளர் தனக்குள்ள அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு ஒரு புறமிருக்க அவரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு கட்டுப்படாமல் இருக்கும் நிலையும் தோன்றியுள்ளது. வன்முறைகள் அல்லது சட்ட விரோத செயற்பாடுகள் மூலம் தமக்கும் ஏதாவது இலாபம் கிடைக்கும் என்று சகல தரப்பினரும் நம்பத் தொடங்கியுள்ளனர்.

தாமே கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறி அனுதாபத்தை திரட்டும் நோக்கில் ஐ.தே.க. கூடுதலான முறைப்பாடுகளை செய்து வருகின்றது. முறைத்துப் பார்த்ததாகக் கூட தேர்தல் வன்முறை புகார் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசுத்த அரசியலின் காவலர்கள் என்று தம்மைத்தாமே அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பி.யினர் கூட தமது ஆதரவாளர்கள் தாக்கப்படும்போது மாத்திரம்தான் வன்முறையைக் கண்டிக்கிறார்களே தவிர மற்றப்படி மௌனமாகவே இருக்கிறார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணி வழமைபோலவே அனைத்துக்கும் ஐ.தே.க.மீது விரல் நீட்டிவிட்டு தங்களை நியாயப்படுத்திக் கொள்கிறது.

எவ்வாறாக இருந்தாலும் இந்த நிலைமை தொடரும் பட்சத்தில் எதிர்வரும் டிசம்பர் 5ம் திகதியும், 1982ம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு மாதிரியோ, அல்லது 1998ம் ஆண்டின் வடமேல் மாகாண தேர்தல் போலவோ அமைந்துவிடலாம் என்ற அச்சம்தான் ஜனநாயக விரும்பிகளை சிந்திக்க வைத்துள்ளது.

மறுபுறத்தில் கிழக்கில் பல பகுதிகளில் தேர்தல் குழறுபடிகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி புலிகளும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். மட்டக்களப்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடந்த வாரங்களில் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவற்றுள் கடந்த வாரம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இராணு புலனாய்வுப் பிரிவின் தமிழ் புலனாய்வாளர் ஒருவரும் அவரது சகாக்கள் இருவரும் மட்டக்களப்பு நகரில் வைத்து கொல்லப்பட்ட சம்பவம் குறிப்பிடத்தக்கது. இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுபவர்களுள் முதல் வேட்பாளர் கொலையும் கிழக்கில்தான் இடம் பெற்றது. ஐ.தே.க. மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தம்பிராஜா ஜெயக்குமார் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது கொலை தொடர்பில் புலிகள் மீது நேரடியாக குற்றம் சுமத்தப்படாத போதும் இதனை புலிகள் செய்திருப்பதற்கான சாத்தியக் கூறுகளை நிராகரிக்க முடியாதுள்ளது. தம்பிராஜா ஜெயக்குமார் முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆவார்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எதிரணி எடுத்துள்ள புதிய வியூகம்

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் மேற்கொண்டு வரும் தீவிர பிரசாரத்தை சிங்கள மக்கள் நம்பவில்லை என்று ஐ.தே.க. தலைவர்கள் வெளியில் சொல்லி வந்தாலும் இந்தப் பிரசாரம் அவர்களை அச்சமூட்டியிருப்பதை மாத்திரம் தெளிவாக உணர முடிகிறது. சிறுபான்மை மக்களின் ஆதரவை திரட்ட வேண்டும் என்பதற்காக தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புடன் ஐ.தே.க. புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுகின்றது. இதனை புலிகளுடனான புரிந்துணர்வு எனக்காண்பிக்க ஆளுந்தரப்பு எடுக்கும் முயற்சிக்கு சிங்கள சமூகத்துக்கு மத்தியில் ஓரளவு பிரதிபலிப்பு தெரிகிறது. குறிப்பாக படைவீரர்களை இழந்த குடும்பங்கள், தீவிர சிங்கள பௌத்த ஆதரவாளர்கள் என்று சில பிரிவுகள் தமிழ்க்கட்சிகளை அரவணைக்கும் போக்கினால் ஐ.தே.க.வை விட்டு தூரமாகும் நிலை தோன்றியுள்ளது. ஆரம்பத்தில் இது குறித்து அலட்டிக்கொள்ளாமல் இருந்த ஐ.தே.க. தலைமை இந்த பிரச்சனையை 'சீரியஸாக' எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இதற்காக வேண்டி புதிய உபாயம் ஒன்றை கையாளும் வழிமுறையில் அது இறங்கியிருக்கிறது.

இதற்காகவேண்டி ஐ.தே.க. கையில் எடுத்த ஆயுதம் ஈ.பி.டி.பி.யின் தேர்தல் விஞ்ஞாபனம். ஈ.பி.டி.பி. தேர்தல் விஞ்ஞாபனத்தில் எக்காலத்திலும் பிரிக்க முடியாத வடக்கு கிழக்கை "ஈழ மாநிலம்" என்ற பதப்பிரயோகத்தால் அழைக்கப்பட்டுள்ளது. அந்த ஈழ மாநிலத்திற்கு இருக்க வேண்டிய சுயநிர்ணய உரிமைகளாக சில விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் தனி நாடாக பிரிந்து செல்வதைத் தவிர்த்து ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் தன்னாதிக்க உரிமையை நிலைநாட்டும் பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இதனை தூக்கிப் பிடித்து ஐக்கிய தேசியக்கட்சி "ஈ.பி.டி.பி.யும் ஈழம் கேட்கிறது" என்ற வகையிலான பிரசாரம் ஒன்றை முடுக்கிவிட முயற்சித்தது. ஐ.தே.க.சார்பான பத்திரிகைகள் அவற்றின் ஞாயிறு வெளியீடுகளில் இந்த செய்திக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. சண்டே டைம்ஸ் பத்திரிகை அதன் தலைப்புச் செய்தி



யாக இதனை பிரசுரித்திருந்தது. மலையகத்தின் சிங்களப் பகுதிகளில் நடந்த கூட்டங்களில் ஐ.தே.க. தலைவர்கள் இதனை பிரசாரம் செய்தனர்.

இதன் மூலமாக ஐ.தே.க.-புலி கூட்டு குறித்த பிரசாரத்தின் காரத்தை தணிக்க முடியும் என்ற நம்பிக்கையிலேயே ஐ.தே.க. இந்த வழிமுறையை கையாண்டு பார்த்திருக்கிறது.

அதாவது "தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் "ஈழமாநிலம்" என்ற சொல்லை பயன்படுத்தியிருக்கும் ஈ.பி.டி.பி.யை சந்திரிக்கா அரசாங்க அமைச்சரவையில் வைத்திருக்க முடியுமென்றால் நாம் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புடன் இணைந்திருந்தால் என்ன?" என்ற கேள்வியை சிங்கள மக்கள் மத்திக்கு கொண்டு செல்ல ஐ.தே.க. திட்டமிடுகிறது.

இறுதியில் 'ஈழ மாநிலம்'என்ற சொல்லுக்கு பூரண விளக்கமளிக்க வேண்டிய நிலைக்கு ஈ.பி.டி.பி. தள்ளப்பட்டது. இந்த மாநிலத்தின் தன்மை எவ்வாறாக இருக்கும் என்ற ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் பேச்சாளர் டாக்டர் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு தகவல் வழங்கினார்.

புலிகளால் பயன்படுத்தப்படும் "தனித்தமிழீழம்" என்ற சொல்லுக்கும் "ஈழம்" என்ற சொல்லுக்கும் இடையிலான வேறுபாட்டை பெரும்பான்மையான சிங்கள மக்கள் அறிந்திருப்பதில்லை. இலங்கை என்ற பதத்துக்குப் பதிலாக காலாகாலமாக ஈழம் என்ற பதம் பயன்பட்டு வந்திருப்பதை அறியாத மக்கள் "ஈழம்" என்றவுடன் அது புலிகள் சண்டை பிடிக்கும் நிலப்பரப்பு என்ற சிந்தனைக்குள் தள்ளப்படுகின்றார்கள். சிங்கள மக்களின் இந்த தெளிவின்மையை பயன்படுத்தி விளையாட்டுக் காண்பிக்கவே ரணில் முயற்சி செய்ததாகத் தெரிகிறது. சாதாரண சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல பிரபல சிங்கள பத்திரிகையாளர் பலருக்கும்கூட இது விடயத்தில் போதிய தெளிவு கிடையாது.

ஒரு முறை பாலர் வகுப்பு புத்தகம் ஒன்றில் 'ஈழம்' என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளதாகவும் இது சிறு வயதிலேயே 'ஈழ' உணர்வை ஊட்டும் செயலெனவும் தமிழ் கல்வி அதிகாரிகளை குற்றஞ்சாட்டி பிரபலசிங்களப் பத்திரிகை ஒன்று அதன் ஞாயிறு பதிப்பில் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

எவ்வாறெனினும் ஐ.தே.க.வின் இந்த புதிய உத்தி சிங்கள மக்கள் மத்தியில் எந்தளவு தூரம் செல்வாக்குச் செலுத்தும் என்று உடனடியாக கூற முடியாது. ஆனாலும் யானை-புலி கூட்டு குறித்த பிரசாரத்தை முறியடிக்க ஐ.தே.க.வுக்கு மாற்று வழி கிடையாது என்பதையே இந்த புதிய புரளி காண்பிக்கின்றது.

**எம்.பி.எம். பர்ஸான்**

வடக்குக் கிழக்குக்கு இடைக்கால நிருவாகம் ஒன்றை வழங்கப்போவதாகக் கூறி கடந்த தேர்தலிலும் சர்ச்சையில் சிக்கிக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க இம்முறையும் அதே கருத்தை தெரிவித்து சங்கடத்தில் வீழ்ந்துள்ளார்.

இடைக்கால நிருவாகம் என்றால் யாரிடம் வழங்குவது? எவ்வளவு காலத்துக்கு? பிரபாகரனுக்கா வழங்கப் போகிறார்? என்றெல்லாம் ஆளுந்தரப்பு கேள்வி மேல் கேள்வி கேட்டு வருகிறது. உண்மையில் ஐ.தே.க. இடைக்கால நிருவாகத்தை பிரபாகரனுக்கு வழங்கப்போவதில்லை. ஆனால் யாருக்கு வழங்கப் போகிறீர்கள் என்ற கேள்விக்கு உண்மையில் தற்போதைக்கு ரணில் விக்கிரமசிங்கவிடம்கூட பதில் இருக்குமா என்பது சந்தேகமே! ஏதோ ஒரு பேச்சுக்கு அவர் சொல்லி விட்டார். அதை பிடித்துக் கொண்டு ஆளுந்தரப்பு வெழுத்துவாங்குகிறது.

மறுபுறத்தில் ஐ.தே.க. பேச்சாளர் கருணாசேன கொடிதுவக்கு, புலிகளை பலவீனப்படுத்தியே பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்போம் என்று சொல்கிறார். ▬

# தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படக் கூடாது!

மலையக மக்கள்மீது சகல தரப்பிலிருந்தும் அளவற்ற கரிசனை காட்டப்படுகின்றது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுந்தரப்பு கூறுகின்றது. தோட்டப்புற மாணவர்களுக்கு நவீன உலகின் வாயிற்கதவுகளை திறந்து விடப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார். இவை எதுவும் கூடாத விடயங் களல்ல. சம்பளம் அதிகரிக்கப்படத்தான் வேண்டும், மலையக மாணவர்களுக்கு நவீன கல்வி வசதிகள் கிடைக்கப்பெறவும் வேண் டும். ஆனால் துரதிஷ்டவசமாக இவை எதுவும் தேர்தல் 'குண்டு'களாக மாத்திரம் இருந்துவிடக்கூடாது என்பதே அனைவரதும் விருப்பம். ஏனெனில் இந்த நாட்டில் ஏமாற்றப்பட்ட சமூகங்களின் வகைப்படுத்தலில் தோட்டத்தொழிலாளர்கள்தான் முதலிடம் பெறுவார்கள் என்பதில் விவாதத்திற்கே இடமிருக்காது.

கொத்தடிமைகளாக இந்த நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட தோட்டத்தொழிலாளர்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அனுபவிக்கும் துன்பங்கள் இலேசானவையல்ல. அமரர் தொண்டமானின் பேரம் பேசும் அரசியல் பலத்தின் பயனால் படிப்படியாக சில முன்னேற்றங்களை கண்டு வந்த மலையக மக்கள் நாட்டின் ஏனைய பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு தம்மை ஒப்பிட்டளவில் உயர்த்திக் கொள்ள இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது.

சின்னஞ்சிறிய லயன் அறைகளின் தமது வாழ்நாள் முழுவதையும் கழித்துவிட்ட பல தலைமுறைகளுக்குப்பின் அண்மைக்காலமாக வீடுகள் நிர்மானித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அதுகூட அனைவருக்குமல்ல. இன்னமும் பல இலட்சம் பேர் அதே லயன் அறைகளில் வாழ்கின்றனர். இத்தனைக்கும் நாட்டின் பொருளாதாரத்தின் உயிர்நாடி, முதுகெலும்பு என்றெல்லாம் தேயிலைச் செடிகளைத்தான் வர்ணிக்கின்றார்கள்.

தோட்டத்தொழிலாளர்களை அரை நூற்றாண்டுக்கு முந்திய நிலையில் இருந்து வேறுபடுத்திப்பார்க்க எமது அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும் 'பம்மாத்து' அரசியலால் மாத்திரம் மலையகத்தை மேய்ந்துவிடலாம் என்ற எண்ணக்கரு முதலில் விடுபடவேண்டும். தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட சில முடிவுகளுக்கு முன்னர் சற்று தூரநோக்குடனும், சமூக நலனுடனும் சிந்திக்கப்பட்டிருக்குமாயின் அம்மக்களின் வாழ்க்கைத்தரம் இன்றுள்ளதை விட கணிசமான மாற்றத்தை கண்டிருக்க வாய்ப்புண்டு. உண்மையில் தோட்டத்தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பல உரிமைகள், சலுகைகள் என்ற பெயரிலேயே அவர்களுக்கு வழங்கப்பட்டன. ஒரு மனிதனின் அடிப்படை உரிமையான கல்வி, உறையுள் வசதி கூட 'தொழிற்சங்கத்தலைவர்களின் பிச்சையாகவே' வந்து விழுந்தன.

இவற்றுக்கு மத்தியில் மலையக மக்கள் விழித்துக் கொள்ளக் கூடாது என்பதில் தலைமைகள் மிகக் கவனமாக இருந்தன. தொழிலாளர் போராட்டங்கள் திட்டமிட்டே திசை திருப்பப்பட்டன. எங்கள் சங்கத்தில் இணைந்தால்தான் இதுவெல்லாம் கிட்டும் என்ற பசப்பு வார்த்தைகளால் உரிமைகள் மழுங்கடிக்கப்பட்டன.

இவ்வாறான மலையக மக்களுக்கு வார்த்தை ஜாலங்களில் சொர்க்கத்தைக் காண்பிக்கும் நாடகமாக இந்தத் தேர்தலும் அமைந்துவிடக்கூடாது. நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலவரத்தினால் அதிகரிக்கும் கெடுபிடிகள், வேலையில்லாத்திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு பிரச்சனை என்று ஏராளமான நெருக்கடிகளை சந்திக்கும் தோட்டப்புற இளைஞர் சமுதாயம் வன்முறையின்பால் தள்ளப்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தலைவர்களுக்கு இருக்கின்றது.

வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றதும் தமதிஷ்டப்படி தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவும், ஒப்பந்தம் செய்யவும் முடியாதபடி "என்ன நடக்கிறது?" என்பதை தொழிலாளர்களுக்கு விளங்க வைக்கக் கூடிய பலம் வாய்ந்த சிவில் அமைப்புக்களின் தேவை மலையகத்தில் உணரப்படுகின்றது.

பேரினவாத அரசியல் கட்சிகளை எதிர்த்தும் ஆதரித்தும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு விதமாகப் பேசும் தலைமைகளுக்கு நிகராக அரசியல் இலாபம் கருதாத பொதுநல அமைப்புக்களால் மலையக மக்களுக்காக ஏராளமான பணிகளை ஆற்ற முடியும். அரசியல் வாதிகள் வாக்குக் கேட்பது ஏதோ ஒரு பெரும்பான்மைக் கட்சிக்கு அடகு வைக்கத் தான் என்பது யாவரும் அறிந்த உண்மை. தற்போதைய அரசியல் யதார்த்தத்தில் அது தவிர்க்க முடியாததும்தான். ஆனால் அந்த வாக்குச் சீட்டுக்களுக்கான உச்சகட்ட பலன் அப்பாவித் தொழிலாளர்களுக்கு கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

தேர்தலில் வெற்றி பெறுவதோடு மலையகம் மீதான தமது கடப்பாடு முடிந்து விட்டதாகக் கருத இடமளிக்கக்கூடாது. வாக்குக்கேட்கும் போது என்னென்ன வாக்குறுதிகளை அள்ளி வீசினார்களோ அவற்றின் பாதியையாவது நிறைவேற்றும்படி மலையகத்தலைமைகளுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய பலமான பொது அமைப்புக்கள் உருவாகவேண்டும்.

கடந்த காலங்களின் தோட்டபுற அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப் பணம் பயன்படுத்தப்படாததால் மீண்டும் திறைசேரிக்கே திரும்பியதாக தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்திருக்கும் சதாசிவம் குழுவினர் ஆறுமுகன் தொண்டமான் மீது குற்றஞ் சாட்டுகின்றனர். ஆறுமுகன் அந்தக் குற்றச் சாட்டை திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறார். எது எப்படியிருந்தாலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழவே கூடாது. யானைப் பசிக்கு சோழப்பொரி போல்தான் தோட்டத் தொழிலாளர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் அமைகின்றன. அவற்றில் இருந்து திறைசேரிக்கு மீளத்திரும்ப பணம் உண்டென்றால் அது நிச்சயம் தலைமைத்துவத்தின் கவனயீனமாகத்தான் இருக்க வேண்டும். சதாசிவம் கூறுவது உண்மைதானா என நிச்சயமாகத் தெரியவில்லை. இதனை தெளிவுபடுத்த வேண்டிய கடமை ஒரு பொறுப்புள்ள தலைவர் என்ற வகையில் ஆறுமுகன் தொண்டமானுக்கு இருக்கின்றது.

எது எப்படியிருந்தாலும் இம்முறை பொதுத்தேர்தலுக்காக வேண்டி அனைத்துத் தரப்புக்களாலும் தோட்டத்தொழிலாளர்களை மையமாக வைத்து கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றை சீர்தூக்கிப் பார்க்கும் அதே நேரம் கடந்த காலங்களில் தமக்கும் தமது சமூகத்துக்கும் யார் யார் என்ன செய்தார்கள் என்பதை மலையக மக்கள் அறிவார்கள். பழக்கதோஷத்துக்கு வாக்களிக்கும் நிலையினின்றும் விடுபட்டு சிந்தனைக்கு இடம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றனர்.



# பேச்சுவார்த்தை முறியாது என்று யார் உத்தரவாதமளிப்பது?

பாராளுமன்றத்தில் எவராவது இனப்பிரச்சனையைப்பற்றி பேச அழைத்தால் அந்தப்பக்கம் தலை வைத்துப் படுக்கமாட்டோம் என்று பகிரங்கமாக சபதமிட்டிருக்கிறார்கள் தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். அதாகப்பட்டது தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் நாம் வாய் திறக்கமாட்டோம் என்று தேர்தலுக்கு முன்னதாகவே கூறி வைத்துள்ளார்கள். அப்படியாயின் இவர்கள் ஏன் பாராளுமன்றம் போக வேண்டும்?

அரசங்கமும் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதற்காக இனப்பிரச்சனை குறித்து வாய் திறக்காத ஒரு கூட்டத்தை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதால் சாதாரண தமிழ் மக்களுக்கு எந்தவித பிரயோசனமும் கிடைக்கப்போவதில்லை. இனப்பிரச்சனை தீர்வுக்காக அரசாங்கம், புலிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகலருடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தொடர்ந்தும் போரை முன்னெடுத்து செல்ல முடியாத அளவில் பொருளாதார சமூக நெருக்கடிகள் உள்நாட்டிலும் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் பதவிக்கு வரும் எந்த அரசாங்கத்தாலும் புலிகளை மறந்திருக்க முடியாது என்பதே உண்மை. மறுபுறத்தில் சர்வதேச ரீதியில் பயங்கரவாத்திற்கு எதிரான அலையொன்று வேகமாக வீசி வருகின்றது. இதுவரை காலமும் ஆயுதம் தாங்கிய இயக்கங்களை செல்லப் பிள்ளைகளாக கருதி வந்த பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் வரிசையாக புலித்தடை போட்டு வருகின்றன. அதனால் போர் முனை வெற்றிகளை மாத்திரம் நம்பி அரசியல் செயல்முறைகளில் இருந்து ஒதுங்கியிருக்க எதிர்காலத்தில் புலிகளாலும் முடியாது. ஆதலால் விரும்பியோ விரும்பாமலோ இரண்டு தரப்பினரும் தமது போர் முழக்கங்களை அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப் படுவார்கள். இந்த யதார்த்தத்தைப் பிரிந்து தாம் பாராளுமன்றம் போய் பஜரோ வாங்கினால்தான் இனப்பிரச்சனையை தீர்க்கலாம் என்பதுபோல தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு கூறிவருகின்றது. மற்றொரு உண்மையையும் நாம் கருத்தில் கொண்டாக வேண்டும்.

முதலாவதாக பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்வு காணலாம் என்னும் முடிவுக்கு வருவதாயின் தனித் தமிழீழம் என்பதைப் பேச்சுக்கள் மூலமாகப் பெற முடியாது என்பதை உணர வேண்டும். எனவே தனித்தமிழீழம் தான் இனப் பிரச்சனைக்கு இறுதியும் உறுதியுமான தீர்வு என்ற எண்ணக் கருத்துடன் பேச்சுவார்த்தை மேசைக்கு போவதில் எந்தப் பயனும் இல்லை. ஆனால் 1977ல் உதயசூரியனுக்கு வாக்களித்து தனித் தமிழீழக் கோரிக்கைக்கு ஆணையிட்ட மக்கள் கடந்த 23 வருடங்களில் பெற்ற படிப்பினைகள் ஒரு புறம். 1989ன் ஜனாதிபதி தேர்தல். 1989ன் பாராளுமன்றத் தேர்தல். 1994ன் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல். 1999ன் ஜனாதிபதித் தேர்தல் 2000ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் எனப் பல்வேறு தேர்தல்களில் வாக்களித்தமை மூலமாக தமிழீழ ஆணையை மீளப் பெற்றுவிட்ட சூழல் மறுபுறம். இந்த நிலையில் இப்போதும் தமிழீழம் தான் மக்களின் முடிந்த முடிபு என்பது எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது. இதனாலேயே தமிழீழக் கோரிக்கையையும் அதற்கான போரையும் இடை நிறுத்தினாலேயே பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட முடியும் என்பது நியாய பூர்வமானதாக ஆகிறது.

புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என தமிழ்க்கட்சிகள் வாதிட்டு வருகின்றன.

இந்தியப் படையினரை வெளியேற்றுவதை மட்டுமே ஒரே நோக்கமாகக் கொண்டு புலிகள் 1990ல் கொழும்பில் பிரேமதாசா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமாராக ஏகப் பிரதிநிதிகள் போலவே அப்போதும் புலிகள் நடத்தப்பட்டனர்.

ஆனால் பதின்னான்கு மாதங்கள் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் மீண்டும் மோதலே வெடித்தது.

1994ல் சந்திரிகா பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து மீண்டும் பேச்சுவார்த்தைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின சந்திரிகா பதவிக்கு வந்த பத்து நாட்களில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகள் 1995ன் ஏப்ரலுக்குப் பின்னர் நீடிக்க இயலவில்லை.

மறுபுறம் புலிகளுடன் கரம் கோர்த்துச் செயற்பட்டவர்களான சிறீசபாரத்தினம் பத்மநாபா போன்றவர்களுக்கு புலிகள் வழங்கிய பரிசு என்ன என்பது மக்களுக்குத் தெரியும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ராஜீவ் காந்திக்கும், பிரேமதாசாவுக்கும், சந்திரிக்காவுக்கும் கூட புலிகள் படிப்பித்த பாடங்கள் என்ன? வழங்கிய தண்டனைகள் என்ன? என்பது மக்களுக்குப் புரியும்.

அடுத்து மண் மீட்புக்கே யுத்தம் நடத்துவதாக சொல்லப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களின் வாழ்வே இங்கு பலியிடப்படுகிறது. யுத்தத்தின் மூலமாக மண் மீட்கப்படுகிறது என்பது உண்மையா? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு சில விடயங்களை இங்கு சுட்டிக் காட்டுதல் பொருந்தும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகை 1971ல் பதினொரு இலட்சத்தையும் கடந்திருந்தது. ஆனால் இப்போது இது எவ்வளவுக்குக் குறுகியிருக்கிறது என்பது சகலருக்கும் தெரியும். எழுபதுகளில் கந்தளாய் கல்லோயா போன்ற எல்லைப்புற சிங்களக் குடியேற்றங்கள் பற்றித்தான் பேசப்பட்டது. ஆனால் காங்கேசன் துறைக்கு மீளக் குடியமரச் செல்ல முடியாத நிலமை. நிதியாகவும், ஆயுதமாகவும் அள்ளித் தந்த நாடுகள் பலவும் இன்று பயங்கரவாதப் பட்டம் சூட்டி நிற்கிறது. செயற்பாடுகளைத் தடை செய்ய விழைகிறது.

எனவே இந்தக் கட்டத்திலாவது தவறு எங்கோ நிகழ்ந்திருக்கிறது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டுதானாக வேண்டும் அப்போது தான் தொடரும் தோல்விகளிலிருந்து மீண்டு கொள்ள முடியும்.

# கிணறு வெட்டப் போய் பூதம் கிளம்பிய கதையாக முடிந்த தமிழ்க் கட்சிகளின் செய்தியாளர் மாநாடு!

மட்டக்களப்பில் தமிழர் கூட்டமைப்பு தேர்தல் நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்த மூன்றாம் நாள் கூட்டமைப்பின் சகல வேட்பாளர்களும், தங்கள் தலைமை வேட்பாளரும் ஜோசப் பரராசசிங்கம் தலைமையில் பத்திரிகையாளர் மகா நாடு நடத்தினார்கள்.

"தமிழர் இக்கால கட்டத்தில் ஒன்று பட்டு உழைப்பதன் மூலம் மட்டுமே தமிழர் தம் கோரிக்கைகளை வென்று எடுக்கமுடியும். அதற்காகவே நான்கு கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழர் கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது." என ஜோசப் பரராசசிங்கம் கூறினார். அதைத் தொடர்ந்து கற்குடாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர்-முன்னாள் எம்.பி.பொன்.செல்வராசாவை நோக்கி "தாங்கள் கற்குடாவக்கு எம்.பி. ஆகி ஒருவருடம் பூர்த்தியாகிவிட்டது. இந்த ஒரு வருட காலத்திற்குள் எத்தனை முறை கற்குடாவுக்கு விஜயம் செய்திருக்கிறீர்கள்? மக்கள் குறைகளை கேட்டறிந்தீர்களா?" எனக் கேட்டார். அதற்கு செல்வராசா "நான் செல்லவில்லை-கற்குடாத் தொகுதி மக்கள் என்னைச் சந்தித்து-உதவிகள் பெற்றுள்ளார்கள்." என்றார்.


அதை நான் கேட்கவில்லை. கற்குடாவுக்கு ஏன் நீங்கள் வரவில்லை" என மீண்டும் கேள்வியை வீசினார் ஊடகவியலாளர். அதற்கு செல்வராசா." நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் எனக்குப் பாதுகாப்பில்லை இதனால் நான் வரவில்லை" என்றார். ஊடகவியலாளரும் விடுவதாயில்லை. "அலிசார் மௌலானா வந்தாறுமூலைக்கு வந்து விருந்து உண்டு செல்ல முடியுமானால் உங்களால் ஏன் முடியாது" என்றார். அதற்குச் செல்வராசா சென்ற பாராளுமன்றக் காலத்தில் நான் வந்தாறுமூலைக்குப் பணம் ஒதுக்கிப் பல அபிவிருத்திப்பணிகளைச் செய்தேன். இருந்தும் ஏதோ காரணத்தால் மக்கள் மௌலானாவை ஆதரிக்கிறார்கள் என்றார். விவாதம் சூடு ஏறுவதை உணர்ந்த சிலர் ஊடகவியலாளரை சமாதானப்படுத்தினார்கள்.

அடுத்துப் பேசிய தமிழர் கூட்டமைப்பின் தமிழர் காங்கிரஸ் வேட்பாளரான ஞா.கிருஷ்ணபிள்ளை "தேர்தல் காலத்தில் கஷ்டப்பட்டு கல்லடி சொல்லடி பட்டு எம்.பி. களை உருவாக்கிறவர்கள் அன்றாட வாழ்க்கைக்குத் திண்டாடும் சுப்பனும்-சுப்புலெட்களும் இந்த நிலையை அடைந்ததும் பாராளுமன்றப் பிரதிநிதிக்கு பாடுபட்ட பாட்டாளி கண்ணுக்குத் தெரிவதில்லை. இந்த பகல் வேசக்காரர்களே பங்காளராக பக்கத்துவீட்டுக்காரராகி விடுவார். இது தான் அண்ணர் ஜோசப் பரராசசிங்கம் கடைப்பிடித்து வருகிறமுறை. அவர் காலத்தில் சொந்தக் காரர்கட்கும்-பந்தக் காரர்கட்கும் பதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது. கதிரவெளியிலிருந்து துறை நீலாவணை வரையுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில்-எத்தனையோ இளைஞர்கள் தொழிலின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அண்ணன் ஜோசப் ஒரு குடும்பத்தில் ஐந்து பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தது நியாயமா? இவ்வாறான செயல்களால் தமிழ் மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். இத்தேர்தலில் நாங்கள் வென்றால் இச் செயல்கட்கு முற்றுப் புள்ளி வைப்போம்" என்றார்.

நீங்கள் இருவரும் வந்தாறுமூலை வரக்கூடாது என்று கூட்டத்தில் இருந்தோர் முந்நாள் பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பார்த்துக் கூறினார்கள். இந்த பத்திரிகையாளர் மகாநாடு கிணறுவெட்டப்போகப் பூதம் வெளிக்கிட்ட கதையாகிவிட்டது. தமிழர் கூட்டமைப்புக்கு இந்த வைபவத்தில் ஊடகத்துறையைச் சேர்ந்த சகல தேசிய பத்திரிகைகளின் நிருபர்களும் சமூகம் கொடுத்திருந்தார்கள். இருந்தும் இந்த உண்மைகளை வேண்டும் என்றே மூடி மறைத்து விட்டார்கள். இதுதான் மட்டக்களப்பு பத்திரிகை நிருபர்கள் கையாளும் பத்திரிகைத் தருமமாகும். ஊடக சுதந்திரம், பத்திரிகைத் தர்மம் பற்றியெல்லாம் ஊருக்கும் உலகுக்கும் வாய் கிழியக் கத்தும் மழைக்காலத் தவளைகட்கு நடந்து முடிந்த பத்திரிகை மகாநாட்டில் தங்கள் எஜமானர்கள் பாதிக்கப்பட்டதும் அதை மக்கள் அறியாது மூடி மறைப்பதுதான் பத்திரிகைத் தர்மம் போலும் இதற்கு என்ன விளக்கம் தரப்போகிறார், பூனை கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடித்துவிட்டு தன்னை யாரும் காணவில்லை என்று எண்ணிக் கொள்ளுமாம்!

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
30 - 03 - 1975



விண்ணில்
23 - 11 - 1996

**கனகரட்ணம் துஷ்யந்தன்**

அப்பாவுக்கு அருமையான மகன் அல்லவோ!
அம்மாவுக்குப் பிரியமான பிள்ளையல்லவோ!
உன்மீது கொண்ட நேசம் கொஞ்சமாமோ!
உலகமே கிடைத்தாலும் தனியமாமோ!
எந் நாவில் வருவதெல்லாம் உன்பெயர்தான்.
எம் செவிகள் கேட்பதெல்லாம் உன் புகழ்தான்.
எம் நெஞ்சம் சுமப்பதெல்லாம் உன் நினைவுதான்.

வாடும் அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை.
தகவல்: ம.மஹவதி, திருக்கோணமலை.

# 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
14 - 04 - 1948



உதிர்வு
25 - 11 - 2000

முல்லை-துணுக்காயைப் பிறப்பிடமாகவும் மன்-வெள்ளாங் குளத்தை வசிப்பிடமாகவும் கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் ஐயம்பிள்ளை கமலநாதன்** அவர்கள்

**திதி: 14.12.2001**

கமலமென உதித்து கருணைமழை பொழிந்தவரே.
காசினியார் போற்ற கண்ணியமாய் வளர்த்தவரே.
கிள்ளை மொழி பேசி எம்மை கிறங்க வைத்தவரே.
கீர்த்திகள் நாம் பெற கீதைதனை உணர்த்தியவரே.
குற்றங்கள் செய்த நாம் குழைந்து நின்ற வேளைதனில்,
கூவி அழைத்தெம்மை கூறிவைத்தீர் நல்வழிகள்.
கெட்டார் என்றும் கெடுவதில்லை என்றுரைத்தீர்.
கேடு வந்தோர்க்கு கேட்டவற்றை உவந்தளித்தீர்.
கொடுத்தார்க்கு குறையெதுமில்லையென்றே கொள்கை கொண்டீர்.
கோபமே கொள்ளாக் கோத்திரம் காத்த கோமகனே!
கௌரவமாய் நாம் வாழ வழிவகுத்துத் தெய்வமானீரோ!
ஓராண்டென்ன ஒரு நூற்றாண்டு
கடந்தாலும் எம் குடும்பத் தெய்வமாக
வணங்கும்:-
தாய், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: மனைவி தங்கமலர் கமலநாதன்.
360/1B, அளுத்மாவத்தை றோட், கொழும்பு-15.

# விளம்பரப் பகுதி


## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

கண்டியிலும் சந்திக்கலாம்

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடிமனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புகள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் நவம்பர் 18-24 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கண்டியில் நவம்பர் 25-26 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய றோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் டிசம்பர் 08, 09 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் டிசம்பர் 15, 16 திகதிகளில்**

(தவ்வ செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


# ஈ.பி.டி.பி. வரி அறவிட்டதாக எவராலும் கூறமுடியுமா என்று கேட்கிறார் தவராசா

தீவுப் பகுதி மக்களை ஈ.பி.டி.பி. யிலிருந்து பிரித்தெடுக்க முடியாது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அநாதைகளாக கைவிடப்பட்ட தீவக மக்களுக்கு உண்ண உணவும் உறங்க வீடுகளையும் ஈ.பி.டி.பி. யினரே வழங்கினர். மற்றும் தமிழ்க் கட்சி எதுவும் அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவர்கள் மக்களைப் பயமுறுத்தி கப்பம் வாங்குவதிலேயே ஊக்கம் கொண்டு தம்மை வளர்த்துக்கொண்டனர். ஈ.பி.டி.பி.யினருக்கு வளர்ந்துவரும் ஆதரவைக்கண்டு மாற்றுக்கட்சியினர் தடுமாறுகின்றனர். இப்பொதுத் தேர்தலின் பின்பு மக்கள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பதை வெளி உலகமும் நன்கு புரிந்துவிடும்.

இவ்வாறு ஊர்காவற்றுறைக்கு மின்சாரம் வழங்கும் வைபவத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து பேசுகையில், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான எஸ்.தவராசா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் "இன்று யாழ்ப்பாண மக்கள் பீதியின்றி சுரண்டலின்றி வாழ்வதற்கு ஈ.பி.டி.பி.யினரே காரணம். நாங்கள் எம்மை பலப்படுத்திக் கொண்டமையால் மக்களிடம் வரி அறவிட்டவர்கள் தாமாகவே தமது செயற்பாடுகளை மாற்ற வேண்டி ஏற்பட்டது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்.போன்ற இயக்கங்கள் வன்னியில் வேரூன்றி அங்குள்ள மக்களிடம் இன்னும் கப்பம் வாங்குகின்றனர். கொழும்பிலிருந்து வன்னிக்கு அனுப்பப்படும் சகல பொருட்களுக்கும் ரெலோ, புளொட், விடுதலைப்புலிகள் கிலோவொன்றுக்கு ரூபா 5 வரி அறவிடுகின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எப். ரூபா 2 அறவிடுகின்றனர். ஈ.பி.டி.பி.யினர் மக்களிடம் பணம் அறவிட்டார்கள் என எவராலும் கூறமுடியுமா?" எனக் கேட்டார்.


## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,
Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 22.11.2001 - 25.11.2001
இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.
HOTLINE : 077-602513.

## Vella Maxi Credit

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
**கந்தராஜா பிரபு**

**Vella Credit**
Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509


# 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி சிறிபாலன் நிருபனா** **26.11.2001**

புலோப்பளை கிழக்கைச் சேர்ந்த சிறிபாலன்-கலாவதி தம்பதியினரின் செல்வப் புதல்வி நிருபனா தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாட உள்ளார். இவரை லண்டனில் வசிக்கும் அப்பா, அம்மா, கொழும்பில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பருத்தித்துறையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பூட்டன், பூட்டி, மாமாமார், சித்திமார், அத்தை குடும்பத்தினர், கொழும்பில் வசிக்கும் பெரியமாமா குடும்பத்தினர், சின்னத்தை குடும்பத்தினர் மற்றும் லண்டனில் வசிக்கும் சித்தப்பா குடும்பத்தினர், அத்தை (இந்திரா) குடும்பத்தினர், அத்தை (சீதா) குடும்பத்தினர், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவரை புற்றளைப் பிள்ளையார் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: மாமா விவேகானந்தன்.
இல: 115/1 சென்ஜேம்ஸ் வீதி, மோதரை, கொழும்பு-15.


## இன்றயருள் மருந்து மந்திரயந்திரவசிய வைத்தியம்




GOVERNMENT APPROVED MEDICAL & SPIRITUAL, CHARITABLE SERVICE
முனிவர்களின் குருகுல குருசிஷ்ய பாரம்பரிய பரம்பரை
டாக்டர்-"மந்திரயோகி" (R.H.M.D-D.Acu P.I.S.M.)
குருசக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு (இலங்கை)

இலங்கையிலும் இந்தியாவிலும் மாற்று, மருத்துவக் கல்வி கற்று மருத்துவப் பட்டங்கள் பெற்று சர்வரோகங்களுக்கும் சிகிச்சை அளித்தாலும் அனைவராலும் சரியாகச் செய்ய முடியாததும். அனைவருக்கும் அவசியமாகவும், அவசரமாகவும், இரகசியமாகவும் தேவைப்படும் மந்திர வசிய விடையங்களுக்கே இவரைக் கூடியளவு மக்கள் நாடுகின்றார்கள். இறைவன் நாட்டத்தோடு மஹான்களின் மஹரிஷிகளின் ஆசீர்வாதத்தினால் அருள்வாக்கோடு செய்து கொடுக்கும் எந்தவிடையமும் உடனடியாக வெற்றியளிப்பதே இதன் காரணமாகும் விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்களை எங்கிருந்தாலும் ஒன்று சேர்ப்பது வெறுத்தவர்களை வேண்டியவர்களை உறவாக்குதல் தகாத ஆண் பெண் உறவை போதை வஸ்த்தை மறப்பித்தல். தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல்நோய் மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து எத்துன்பங்களும் அணுகாமல் உடல் வீடுவளவு, வியாபார நிலையம் வாகனங்களைக் காவல்செய்ய. மற்றும் காதல், திருமணம், கல்வி, தொழில், வியாபாரம் வெளிநாட்டுப் பிரயாணம் வேறு காரியத்தடைகளை நீக்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற, நோய் வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கற்ற தெய்வீக மருந்து. மந்திரயந்திரவசியங்கள் செய்துகொள்ள வரமுடியாதவர்கள் கடல் கடந்த வெளிநாட்டவர்கள் தபால், பெக்ஸ், தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு மனோதத்துவ மாந்திரீக, ஆண்மீக, மருத்துவ அறிவுரைகளோடு இறைபரிகாரப் பொருட்களை விஷேட தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

GURSACKTHI CENTRE
KALADY, BATTICALOA (P.O)
(SRI LANKA.)

ரெலிபோன் - பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு : 065 - 24872
காலை 8.00 மணி இருந்து இரவு 10.00 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு : 009465 - 24872

வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி - காலை 7.00 மணியிலிருந்து இரவு 11.00 வரை
வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்த விஷேட ஆகர்ஷண மாந்திரீக வசிய முறைகள்.
REGISTERED BY MINISTRY OF HEALTH & MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS
"எல்லாப்புகழும் இறைவனுக்கே"

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண வைபவங்களுக்கான சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம் தங்குமிட வசதி, தங்குமிடங்களில் சமைத்து சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: சிங்கப்பூர்
N.Thanga T.Prince,
No. 5, Starlight Road, Singapore- 217758,
Opposite Rangoon Road,
Tel: 2974924-2978619 H.P: 98501222

தொடர்பு: இலங்கை
P.Rajan
H.P: 072-840708, 348349.

# அலசுவது -இராஜதந்திரி

## வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து

# தேர்தல் விஞ்ஞாபனங்கள் வாயிலாக வெளிப்படும் பொது நிலைப்பாடு!

இலங்கையின் பன்னிரெண்டாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெறுவதற்கு இன்னும் ஓரிருவாரங்களே இருக்கின்றன.

கடந்த ஆண்டு பதினோராவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் இடம்பெற்றது. அத்தேர்தலின் பொருட்டு அரசியல் கட்சிகள் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டிருந்தன. ஆனால் ஒரு வருடகாலத்தில் மீளவும் பதிய தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரித்து வெளியிட வேண்டிய அவசியம் அரசியல் கட்சிகளுக்குத் தற்போது ஏற்பட்டுள்ளது.

அனைத்துக் கட்சிகளுமே தமது கொள்கை விளக்கத்தைக்குறிப்பிட்டுத் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன.

இக்கட்சிகளில் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜனஐக்கிய முன்னணி, மற்றும் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் என்பவற்றின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பொதுவான ஒரு விடயமாக தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைக் இயக்கம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளும் உதய சூரியன் சின்னத்தின் கீழ் ஓரணியில் போட்டியிடுகின்றன.

இந்த நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டணி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் மட்டுமே இனப்பிரச்சனைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் வடக்கு-கிழக்கில் தனது பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ள நிலையில் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச வேண்டியதன் அவசியம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர வடக்கு-கிழக்கைச் சேர்ந்த மற்றொரு தமிழ் அரசியல் கட்சியான திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண முடியும் எனத் தெரிவித்துள்ளது.

அரசியல் நடவடிக்கைகள் என்பது வானில் மிதந்து சென்று கொண்டிருக்கும் முகில் கூட்டங்களைப் போல புதுப்புது வடிவங்களைப் பெறுவதாகவே இருக்கின்றது.

அரசியலில் நட்பும், பகைமையும் நிரந்தர மானவையல்ல எனப்படுவதுண்டு.

கடந்த பொதுத்தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டு, ஒன்றையொன்று சாடிய நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் தற்போது ஓரணியில் சேர்ந்துள்ளன.

நான்கு தமிழ் அரசியல் கட்சிக் கூட்டணி தற்சமயம் ஒரேகுரலில் பொதுத் தேர்தலை எதிர்கொண்டிருக்கின்றது. ஆனால் இக்கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் கீரியும், பாயம்புமாக இருந்து அரசியல் நடத்திய காலத்தையும் மறந்துவிட முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய அரசியல் புள்ளியாகவிருந்த கலாநிதி நீலன் திருச்செல்வம், தாம் வாழ்ந்த காலப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் நிலைப்பாட்டுக்கு அமைவாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியையும் வழிநடத்தியிருந்தார்.

கலாநிதி நீலன் திருச்செல்வம் தமிழீழ விடுதலை புலிகளது நடவடிக்கைகளைச் சாடியும் வந்திருந்தார்.

அதேசமயம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராகவிருந்த குமார் பொன்னம்பலம், தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கடுமையாகவே விமர்சித்தார். அத்துடன் தம்மை ஒரு தீவிர தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளனாகவும் திரு.குமார் பொன்னம்பலம் இனங்காட்டியிருந்தார்.

ஆனால் தற்போது கலாநிதி நீலன் திருச்செல்வமோ அல்லது திரு.குமார் பொன்னம்பலமோ உயிருடனில்லை. இருவருமே மிகக் கவலைக்குரிய விதத்தில் அகால மரணத்தைத் தழுவியிருந்தனர்.

தமிழ் அரசியலில் இந்த இருவருமே எதிரும் புதிருமாக இருந்தனர். காலஞ்சென்ற நீலன் திருச்செல்வம், குமார் பொன்னம்பலம் ஆகியோருக்கிடையே நிலவிய முரண்பாடுகள் வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் கோதாவைக் கேள்விக்குறியானதாகவும் மாற்றிவிட்டிருந்தது.

ஆனால் இத்தடவைத் தேர்தலில் குதிக்கும் நான்கு தமிழ்க்கட்சிக் கூட்டணியில் கலாநிதி நீலன் திருச்செல்வம் அங்கம் வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியுடன், திரு.குமார் பொன்னம்பலம் அங்கம் பெற்றிருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி கைகோர்த்து நிற்பதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை நிலவலாம். அல்லது அவை தனித்து நிற்கலாம். ஆனால் முக்கிய விவகார மாக இருக்கும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் விடயத்தில் குறுகிய அரசியல் லாபங்களுக்கு தமிழ் கட்சிகள் இடந்தராமல் இருக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.

எனவே நான்கு தமிழ் கட்சிக்கூட்டணியாக இருக்கலாம். அல்லது தனித்துப் போட்டியிடும் வடக்கு-கிழக்கின் ஏனைய தமிழ்க் கட்சிகளாக இருக்கலாம். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை ஒரே குரலில் அந்த அமைப்புடன் பேச்சு நடத்த வேண்டுமெனத் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டிருப்பது வரவேற்புக்குரியதாகின்றது.

வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல. தென்னிலங்கையின் முக்கிய கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவையும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டியதன் அவசியத்தைத் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தியே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை இப்பெருங்கட்சிகள் கூறியிருப்பது இது முதல் தடவையல்ல.

கடந்த ஒரு தசாப்தகாலமாக நடத்தப்பட்டு வரும் அனைத்துத் தேர்தல்களிலுமே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தப்படவேண்டுமென்பதை ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவை குறிப்பிட்டு வருபவையாகவே இருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க கடந்த வாரம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தார்.

இவ்விஞ்ஞாபனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்தைகள் நடத்துவதில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆர்வங்கொண்டிருப்பதை ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இருப்பினும் புலிகள் மீதான தடைகளை நீக்குவது பற்றியும், இராணுவ நடவடிக்கைகளைக் கைவிடுவது பற்றியும் அவ்விஞ்ஞாபனத்தில் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தக்கூடியதொரு ஆரோக்கியமான சூழல் 1999ம் ஆண்டில் தோற்றம் பெற்றிருந்தது.

நோர்வே நாட்டின் அனுசரணையோடு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு சிறந்த வாய்ப்புக் கிட்டியிருந்தது. ஆனால் அந்த வாய்ப்பு உரிய விதத்தில் பயன்படுத்தப்படாது கைநழுவவிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை காத்திரமான முறையில் முன்னெடுப்பதற்கு இராணுவ ரீதியான நடவடிக்கைகள் தடையாக இருக்கலாகாது.

அரச தரப்பும், தமிழீழவிடுதலைப் புலிகளும் தம்மிடையே ஆயுத ரீதியான மோதல்களைக் குறைத்துக் கொள்ளும் பட்சத்திலேயே அரசியல் நடவடிக்கைகளில் கூடுதல் கரிசனையை வெளிப்படுத்த முடியும்.

ஆனால் துரதிஷ்ட வசமாக இருதரப்புமே இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை ஒரு விடாப்பிடியான போக்கையே கொண்டு வருகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி தனது இத்தடவை தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா புலிகள்மீதான தடை நீக்கப்படமாட்டாதெனப் பொதுக்கூட்டங்களில் பேசி வருகின்றனர்.

அதேசமயம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் காமன் வெல்த் அமைப்பு, ஐரோப்பிய யூனியன் ஆகியவையும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தடையைக் கொண்டுவர வேண்டுமென்று தனது அண்மைக்கால வெளிநாட்டு விஜயங்களின் போது குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாதத்துக்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் எதிர்ப்பு ஒரு பேரலையாக மாறிவருகின்றது. அனைத்து உலக நாடுகளுமே பயங்கரவாத நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன், பயங்கரவாத அமைப்புகள் எனக் கருதப்படுபவற்றைத் தடைசெய்தும் வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் பல்வேறு நாடுகள் பயங்கரவாத அமைப்பென்ற ரீதியில் தடைசெய்துள்ளன. இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென்பதையே இலங்கை இனப்பிரச்சனையை அறிந்து வைத்துள்ள நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை இனப்பிரச்சனை இன்று ஓர் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைவதற்கு தமது அரசியல் உரிமைகளைப் பெற ஜனநாயக வழிநின்று குரல் கொடுத்த தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனமே முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.

பிரிட்டனில் வட அயர்லாந்துப் பிரச்சனை, மத்திய கிழக்கில் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் என்பவை கூட அரசியல் உரிமைகள், மற்றும் இனரீதியான தனித்துவங்களை வலியுறுத்துபவையாகவே இருக்கின்றன.

இப் பிரச்சனைகள் கூட பயங்கரவாதம் என்றே விமர்சிக்கப்பட்டிருந்தது. ஆனால் வட அயர்லாந்துப் பிரச்சனை பாலஸ்தீனப் பிரச்சனை ஆகியன பல்வேறு குறுக்கீடுகளைச் சந்தித்த போதிலும் அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகளில் முன்னேற்றங் கண்டவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சனை விடயத்திலும் பயங்கரவாதம் என்ற கோஷத்துக்குள் வடக்கு-கிழக்கு மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை அமுக்கி விடாது தீர்வு முயற்சிகளை முன்னெடுப்பதிலேயே ஆர்வங்காட்டப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களுடன் கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்தியுள்ள அதேசமயம், தென்னிலங்கையின் பிரதான கட்சிகளும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களின் அவசியத்தைக் குறிப்பிடுபவையாகவே இருக்கின்றன.

தமிழ் அரசியல் கட்சிகளினதும் தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வாயிலாக வெளிப்பட்டுள்ள இப்பொது நிலைப்பாடு, உண்மையானவற்றை ஏற்றுக்கொண்டதாகவே இருக்கின்றது.



## அதிரடி அய்யாத்துரை



***மலையகத்தில*** நடக்குற சாவு வீடுகளில் பெரும்புள்ளிகளில் நிரம்பிக்கிடக்கினம். செத்த வீட்டுச்செலவுக்கு நாலு காசு அட்வான்சா எடுக்க மரண அவஸ்தைபட்ட தோட்டத் தொழிலாளர்களின்ர வீட்டு சாவுக்கு கூப்பிய கைகளோடு போய் நின்று அசடு வழியினம். உவையளின்ர வருகையை மட்டும் கருதிடாதேங்கோ. தலைவர்கள் வந்து போனதும் சனம் முணுமுணுக்குது. நுவரெலியாப்பகுதியில ஒரு செத்த வீட்டுக்குப்போய் செத்துப் போனவரின்ர புகழ் பாடினார் ஒரு தொழிற்சங்கத் தலைவர். 'இறந்தவருக்கும் தனக்கும் பல வருடப்பழக்கம் ஊருக்காக அரும்பணியாற்றியவர். என்றெல்லாம் சொல்லிப்போட்டார். பிறகு விசாரிச்ச போதுதான் தெரிந்ததாம் செத்துப் போனவர் பாரிசவாதம் வந்து பலவருஷம் வீட்டைவிட்டுப் வெளியில போகாதவர். அதற்கு முன்னர் இந்தியாவில இருந்தவர் என்று.

***சிறை சென்று வந்து*** வாக்குக் கேட்குறது அல்லது சிறையில இருந்து கொண்டு வோட்டுக் கேட்கிறதெல்லாம் ஓல்ட் பாஷன். இப்ப லேட்டஸ்ட் பாஷன் எது தெரியுமோ? எதிரணிக் காரரை நாலு சாத்து சாத்தி கோட்ட வரைக்கும் போய் பிணையில வெளியே வந்து அதச்சொல்லி வோட்டுக் கேக்கிறது தான். புத்தளம் மாவட்டத்தில உள்ள அபேட்சகர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பிணையில வெளியில நிக்கிறவை தான். ஜனநாயகம் படுற பாட்டை பாத்தியளே......?

***முஸ்லிம் காங்கிரஸ்*** நுஆக்காரரின்ற பரிதாபத்தப் பார்த்தியளே...... ஒற்றுமை, ஐக்கியம் என்றெல்லாம் ஊருக்கு உபதேசித்தவர்கள் கடைசியில கத்தி கம்புகளோடு 'ஐக்கியம் வளர்க்கப்' புறப்பட்டிடுட்டினம். முன்னர், வாய்த்தர்க்கம், வழக்கு கோட் என்றிருந்த இரண்டு தரப்பாரும் இப்போது கிழக்கில நேரடியாகவே ஒற்றுமையை வெளிக்காட்ட ஆரம்பிச்சிட்டினம். அரசியலில பகைமையென்றாலும் இந்த நோன்பு காலத்துல இப்படி வெட்டிக் கொத்திக்கிறது நல்ல முன்மாதிரியல்ல!

***ஆனந்த சங்கரியின்ர*** வயிற்றெறிச்சலைப் பார்த்தியளே ... யாழ்ப்பாணத்தில ஜனநாயகக் கட்சிக்காரர் புதுப்புது வாகனங்களில ஓடித்திரியினம் என்று தனக்கு நெருக்கமானவர்களிட்ட சொல்லித்திரியுறார். அவை வாகனத்தில ஓடுகினமெண்டு இப்ப என்ன செய்யுறது...? தன்ர காரை கொழும்பில விட்டுப்போட்டு யாழ்ப்பாணம் போய் முற்றும் துறந்த முனிவர் வேஷம் போடப் பாக்கிறார் அண்ணர்!

***தங்களின்ர ஆதரவில்லாமல்*** யாரும் ஆட்சியமைக்க முடியாதென்று ஒவ்வொரு சிறிய கட்சியும் பெரும் எடுப்போட உரத்த குரலில் சொல்லுகினம். ஆனால் பாருங்கோ ஒன்றை மட்டும் நிச்சயமா சொல்லாம் இவையின்ர ஆதரவு எப்படிப் போனாலும் பாதாள உலகத்தின்ர ஆதரவின்றி எந்தக் கட்சிக்கும் ஆட்சியமைக்க முடியாது போல கிடக்கு!

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடொல்வ் ஹிட்லர்

## உண்மைத் தொடர் 33

**போ**லந்து நாட்டை வெற்றி கொண்டதையடுத்து ஹிட்லர் தனது தளபதிகளுடன் விசேட கூட்டம் ஒன்றை நடத்தினான். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நிருவாகத்தை கொண்டு நடத்தும் அதேவேளை புதிய பகுதிகளை நோக்கி முன்னேறுவது தொடர்பாக ஹிட்லர் நீண்ட உரை ஆற்றினான். ஆயுதப் படைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பானவர்களை அழைத்து பலம், பலவீனங்களை தனித் தனியே கேட்டறிந்தான்.

ஹிட்லரின் படைகள் போலந்துக்குள் புகுந்து அங்கு தமது நிலைமையை பலப்படுத்த ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்தது. பல இலட்சம் யூதர்கள் ரஷ்யப் பிரதேசங்களை நோக்கி விரட்டியடிக்கப்பட்டார்கள். வார்சோவில் இருந்த சுமார் 30 இலட்சம் யூதர்கள் இவ்வாறு விரட்டப்பட்டனர். இவர்கள் ஐந்தில் ஒரு பகுதியினர் ரஷ்யாவை சென்றடையும் முன்னரே இடைவழியில் வைத்து ஜெர்மனியப் படைகளால் கொலை செய்யப்பட்டனர்.

அழகிய யூத இன யுவதிகள் ஜெர்மன் படைகளால் வெட்ட வெளிகளில் வைத்தும் கூட பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அகதிகளாக ரஷ்யாவை நோக்கிச் செல்லும் யூதக் குடும்பங்களில் இருந்து இளம் பெண்களை பிரித்தெடுப்பதற்கென தனியான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைக்கடந்து செல்லும் குடும்பங்களில் இருந்து தினசரி பல யுவதிகள் தனியாக பிரிக்கப்பட்டு ஜெர்மன் படை அதிகாரிகளின் காமப்பசிக்கு தீனியாக்கப்பட்டார்கள். தமது வெறி அடங்கிய பின்னர் சில பெண்களை அதிகாரிகள் கட்டிலிலேயே வைத்து சுட்டுக் கொன்றனர். சகல படை வீரர்களுக்கும் பயன்படட்டும் என்று பெருந்தன்மையோடு பெண்களை விடுத்த அதிகாரிகளும் இருக்கிறார்கள்.

போலந்தில் ஜெர்மனியப்படைகள் மோசமான பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதாக ஹிட்லருக்கு தெரிவிக்கப்பட்டது. "யுத்தத்தில் பிடிக்கப்பட்ட யூத... என்ன வேண்டுமானாலும் செய்யச் சொல்லுங்கள். ஆனால் அப்படி கசக்கிப் பிழிந்த ஒருத்தியை உயிருடன் விட வேண்டாம். உடம்பு சூட்டை குறைப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜெர்மன் இரத்தம், அந்த யூத...களின் இரத்தத்துடன் கலந்து விடக்கூடாது இதில் கவனமாக இருக்கவேண்டும்" என்று ஹிட்லர் பதில் கூறினான். அவன் சொன்னது போலவே போலந்து யூதப் பெண்களுடன் உறவு கொண்ட ஜெர்மன் படையினர் அந்த பெண்கள் கர்ப்பமடையலாம் என்று கருதி னால் சுட்டுக்கொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

போலந்துப் பெண்கள் தனது படைகளால் வேட்டையாடப்படுவதை ஈவா பிரௌனிடம் சொல்லிச் சிரித்தான் ஹிட்லர். போலந்தில் பணியாற்றும் ஜெர்மன் படையதிகாரிகளில் யாரெல்லாம் பெண்கள் விஷயத்தில் கில்லாடிகள் என்பதை ஈவாவிடம் வரிசையாகக் கூறினான்.

இராணுவத்துக்குள் உள்ள அழகான இளைஞர்களையே விட்டு வைக்காத அதிகாரிகள், கைப்பற்றிய நாடொன்றின் பெண்களை விடவா போகிறார்கள்?" என்று ஒரு வகை வக்கிர உணர்வோடு வாய் விட்டுச் சிரித்தான்.

ஈவாவுக்கு அவனது பேச்சு மகிழ்ச்சியைத்தரவில்லை. அவனுடன் சேர்ந்து சிரிக்க வேண்டும் என்றும் தோன்றவில்லை. மௌனமாக இருந்தாள். உட்கார்ந்திருந்த அவளை கைகளைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தான் ஹிட்லர். அவனாகவே அவளது உதடுகளை தேடிப்போய் மிக மெதுவாக முத்தமிட்டான். அது அவளுக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்று புரிந்து கொண்டவன் அவளது கழுத்து, மார்புப் பகுதி என்று முத்தமிடத் தொடங்கினான். நிலைதடுமாறிக் கொண்டே நின்றிருந்த அவள் ஹிட்லரின் தலையை கோதி இறுக்க அணைத்தாள். அவளுக்குள் இருந்து ஒரு வெப்பக்காற்று வெளிப்பட்டது. அவனது உதடு கீழ் திசையில் எல்லை மீறிக் கொண்டிருந்தது. உடைந்து விழுந்தவள் போல் முன்னோக்கி வளைந்து அவள் அவனை வெறித்தனமாக இறுக்கி அணைத்தாள்.

★★★

**போ**லாந்தில் நிலை கொண்டிருந்த ஜெர்மன் துருப்புக்கள் கிழக்குத்திசை நாக்கி விரைவாக முன்னேறத் தொடங்கின. ரஷ்யாவின் எல்லையை தொடக் கூடிய சகல பகுதிகளுக்கும் படைகளை விஸ்தரிக்க திட்டமிட்டிருந்தான் ஹிட்லர். சோவியத் யூனியனுக்குள் ஊடுருவக்கூடிய வசதியான நிலைகளை ஜெர்மன் படைகள் உருவாக்க ஆரம்பித்தன. ஹிட்லரின் நோக்கம் என்ன என்பது தெளிவாகப் புரியத் தொடங்கியது. இதனால் ரஷ்யா விழித்துக்கொண்டது விரைவாகவும், வேகமாகவும் தடுப்பு நடவடிக்கைகளில் மொஸ்கோ இறங்கியது.

உக்ரைன் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெருந்தொகையான ரஷ்ய இனத்தவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் ஜெர்மன் இராணுவத்தின் நேரடி அச்சுறுத்தலை எதிர்நோக்கிய சமயத்தில் இனிமேலும் அமைதிகாக்க முடியாது என்ற நிலையில் ரஷ்ய செஞ்சேனை மேற்கு ரஷ்யப்பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனால் ஹிட்லரின் படைகள் வேகமாக முன்னேறுவது தடுக்கப்பட்டது. சோவியத் யூனியன் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கி விட்டதால் மாற்றுத் திட்டங்கள் குறித்து சிந்திக்க ஹிட்லர் தலைப்பட்டான். அவனது மூலை வேகமாகச் சுழன்றது. தளபதிகளை அழைத்து அடிக்கடி ஆலோசனை நடத்தினான்.

அயல் நாடுகளை ஆக்கிரமிப்பது தொடர்பில் அது வரை காலமும் அமுலில் இருந்து வந்த சகல ஒப்பந்தங்களையும் காலில் போட்டு மிதித்தான் ஹி[illegible]ர். 1940ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் திகதி எவ்வித முன்னறிவிப்புமின்றி டென்மார்க்கை கைப்பற்ற உத்தரவிட்டான் ஹிட்லர். அதேநாள் நோர்வேக்குள்ளும் ஜெர்மன் படைகள் புகுந்தன. நோர்வேயில் சிறிய அளவில் எதிர்ப்பு காட்டப்பட்டாலும் பாஸிசப் படைகளின் போர் வியூகங்களுக்கு முன்னால் அவற்றினால் ஈடு கொடுக்க முடியவில்லை. நாடு முழுவதிலும் உள்ள கேந்திர நிலையங்களை ஹிட்லரின் படையணிகள் விரைவிலேயே கைப்பற்றின.

ஏப்ரல் மாத நடுப்பகுதியில் பிரிட்டிஷ், பிரான்ஸ் நாட்டு துருப்புக்கள் நோர்வேயில் தரையிறக்கப்பட்டதால் ஜெர்மன் படைகளுடன் உக்கிர மோதல் இடம் பெற்றது. சில பகுதிகளை பிரஞ்சுப் படைகள் மீளக் கைப்பற்றின. ஆனால் ஹிட்லரின் கைகளே ஓங்கியிருந்தது.

**வருவான்...**



## ஷானு

# மூண்டது போர் 7

### தருவது ~ தண்டாயுதன்



● **ஆ**ப்பானிஸ்தானில் பல முக்கிய நகரங்கள் வடக்கு கூட்டணிப் படையிடம் வீழ்ச்சி கண்டுள்ளன. தலிபான் போராளிகள் புறமுதுகுகாட்டி ஓடுகின்றனர். தமது தரப்பில் எதிர்த்து நிற்போரைச் சுட்டுத்தள்ளுகின்றனர். தலிபான் அமைப்பிலிருந்து விலகிப் பலர் வடக்கு கூட்டணிப் படையிடமும் சரணடைந்துள்ளனர். இருப்பினும் வடக்கு கூட்டணியோடு போராடுவதென்ற மன உறுதியோடும் தலிபான்களில் ஒரு சாரார் இருந்து வருகின்றனர்.

● **கா**பூல்நகரம் ஆப்கானிஸ்தானின் தலைநகராகும். இந்த நகர் கடந்த வாரம் வடக்கு கூட்டணிப்படையிடம் வீழ்ச்சிகண்டது. தற்போது காபூலில் மக்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரமான வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானில் மீண்டும் தொலைக்காட்சி, வானொலிச் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன. பெண் அறிவிப்பாளர்களே செய்திகளை அறிவித்து நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர்.

● ஒசாமா பின்லாடன் எவ்வேளையிலும் உயிருடனோ அல்லது சடலமாகவோ கைப்பற்றப்படலாம் என்று அமெரிக்கா கூறிவருகின்றது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களையும், ஒசாமா பின்லாடனின் அல்குவைதா அமைப்பையும் எதிர்த்துப் போரிடும் வடக்கு முன்னணிப்படைகள் மற்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் விசேட படையணிகள் என்பவை பின்லாடன் ஒளிந்திருக்கக்கூடிய மலைக்குகைகளைச் சுற்றி வளைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் பின்லாடன் ஆப்கானிஸ்தானுக்குள்ளிருந்து வெளியேறி பாகிஸ்தானுக்குள் புகுந்திருக்கலாம். அல்லது பரந்துவிரிந்த ஆப்கானிஸ்தானில் அவர் ஏதாவது கரடுமுரடான ஒரு பகுதியில் ஒளிந்திருக்கலாமென பாகிஸ்தான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

● ஒசாமா பின்லாடன் இடம் விட்டு இடம் நகரும் போது அவரது மூன்று மனைவிமார் மற்றும் டசின் கணக்கிலான பிள்ளைகளையும் கூடவே அழைத்துச் செல்ல வேண்டியதாகவிருக்குமென உளவுப்பிரிவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தமது விசாலமான குடும்பத்துடன் ஓடி ஒளிவதோ அல்லது இடம்விட்டு இடம் நகருவதோ அவரால் இலகுவானகாரியமாக இருக்கமுடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

● **1973ம்** ஆண்டு ஆப்கானிஸ்தானில் ஆட்சி கவிழ்க்கப்பட்ட மன்னர் ஸாஹிர் ஷாவை மீளவும் ஆப்கானிஸ்தானுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 87 வயதான மன்னர் ஷாவை மீளவும் அரியாசனம் ஏறச் செய்வதற்கான அரசியல் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் ஏராளமான இனங்கள், மற்றும் பல்வேறு மொழி பேசுவோர் இருக்கின்றனர். இதன் காரணமாகவே அங்கு பிரச்சனைகள் தீர்க்கப்படாதவையாகவும் இருக்கின்றன. வடக்குக்கூட்டணிப்படை கூட பல்வேறு இனங்களையும் சார்ந்ததாகவே இருக்கிறது. எதிர்காலத்தில் அமையக்கூடிய புதிய அரசாங்கம் அனைத்துத் தரப்பையும் திருப்திப்படுத்துமென்பது கூட சந்தேகமே எனத் தெரிவிக்கப்படுகிறது.




விமானத்தாங்கிக் கப்பலொன்றின் மீது பயிற்சியில் ஈடுபடும் அமெரிக்க விசேட படையணி வீரர்கள்.

● **ஆ**ப்கானிஸ்தானுக்குள் பிரிட்டிஷ், அமெரிக்க விசேட படையணிகள் நடமாடத் தொடங்கிவிட்டன. சோதனைச்சாவடிகள், காப்பரண்கள் என்பவை போடப்பட்டு இப்படைகள் இயங்கத் தொடங்கிவிட்டன. ஒசாமா பின்லாடன் தப்பிச் செல்லாதவாறு எல்லைப்புறங்களில் பிடி இறுக்கப்பட்டும் வருகின்றது. அத்துடன் தலிபான்கள் கெரில்லாத் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்புடனும் இந்த விசேட படையணிகள் உஷாராக இருந்து வருகின்றன.

● **கா**பூல் நகரம் உட்பட ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்கள் வடக்கு கூட்டணிப் படையிடம் வீழ்ச்சிகண்டதையடுத்து ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய மக்கள் அமைதியாக ரமழான் நோன்பை ஆரம்பித்துள்ளார்கள். யுத்தத்துக்கு மத்தியில் இந்த நோன்பு பற்றி சந்தேகமேற்பட்டிருந்தது. ஆனால் தலிபான்களின் பிடியிலிருந்து விடுபட்ட நகரங்களில் சகஜ வாழ்க்கை ஏற்பட்டு வருவதால் மக்கள் நிம்மதயோடு நோன்பை அனுஷ்டிக்கிறார்கள்.

**(தொடரும்)**




# சாதிக்கொடுமையால் மதமாற்றம்

இந்தியாவில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவுக்குச் சாதிக்கொடுமை மிக மோசமாக இருக்கிறது. தீண்டத் தகாதவர்கள் என்று கூறி இன்றும் கூட கோடிக்கணக்கானவர்கள் இம்சிக்கப்படுகின்றனர்.

தமக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகளை இனிமேலும் தாங்க முடியாது என, 'தீண்டத்தகாதவர்கள்' என்று ஒடுக்கப்பட்ட புதுடில்லியைச் சேர்ந்த மக்கள் பௌத்த மதத்தில் இணைந்துள்ளனர்.

படங்களில் புத்த பிக்குகளாக மாற மொட்டையடிக்கப்படும் இளைஞர் ஒருவரையும் பௌத்த மதத்தைத் தழுவக் காத்திருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களையும் காணலாம்.




ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா தாக்குதல் தொடுப்பதைக் கண்டித்து உலகின் பல பாகங்களிலும் ஆர்பாட்டங்கள் நடந்து வருகின்றன.

அண்மையில் ஆப்கான்மீது அமெரிக்கா தாக்குவதை நிறுத்தக்கோரி, பாகிஸ்தானின் கராச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

ஏராளமானோர் கலந்துகொண்ட இந்தப் பேரணியில் ஒரு பகுதியினர் நடுரோட்டில் தொழுகை நடத்தும் காட்சிதான் இது.

# நடுவீதியில் தொழுகை



# தகவல் பெட்டி

கடந்த வருடம் ஐரோப்பிய நாடுகளில் மாடுகளுக்கு ஏற்பட்ட நோயைத் தொடர்ந்து, ஒட்டுமொத்தமாக அவை அழிக்கப்பட்டன.

இப்போது கிட்டத்தட்ட இதே போன்றதொரு நோய் அரபு நாடுகளில் உள்ள ஆடு, மாடுகளுக்கு ஏற்பட்டுள்ளன. இந்த நோயுள்ள ஆடுமாடுகளின் இறைச்சியைச் சாப்பிட்டால் 'ரிப்வாளி' என்னும் ஒருவகைக் காய்ச்சல் ஏற்படும்.

நுளம்புகள் கடிப்பதால் ஆடு, மாடுகளுக்கு இந்த நோய் ஏற்படுவதால், அரபு நாடுகளில் உள்ள ஆடு மாடுகளுக்கு நுளம்பு ஒழிப்பு மருந்தைத் தெளித்து வருகிறார்கள்.

# ஆடுமாடுகளுக்கு நுளம்பு மருந்து





# நவீன குண்டுவீச்சு விமானம்

வௌவால் போன்று பறந்து வரும் இந்த விமானம் அமெரிக்காவில் மிக நவீன ரக விமானமான பி.2 குண்டு வீச்சு விமானம் ஆகும்.

ஆப்கானிஸ்தானிலும் இந்த வகை விமானங்கள் குண்டு வீச்சை நடத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன. படத்திலுள்ள விமானம் அமெரிக்காவில் உள்ள வைட்மன் விமானப் படைத் தளத்தில் இறங்கும் காட்சி இது.

இத்தகைய விமானங்களைத் தயாரிக்க நோர்த் குறாப் க்ரூமன் கோப்பரேஷன் என்ற நிறுவனத்திற்கு அமெரிக்கா கட்டளை பிறப்பித்துள்ளது.

# அபூர்வ வைரம் பதித்த அற்புத மோதிரம்

அழகியின் விரலில் ஜொலிக்கும் மோதிரம் வைரக்கல் பதித்தது என்பது மட்டும் விசேஷம் அல்ல. அபூர்வமான பர்மா வைரம் என்ற பெருமையைக் கொண்டது.

இப்படிப்பட்ட அபூர்வ வைரம் பதித்த இந்த மோதிரம் அண்மையில் ஹொங்கொங் நாட்டில் ஏலத்திற்கு விடப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த மோதிரம் 10.3 காரட் கொண்டது.

இந்த மோதிரம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் விடப்பட்டது. ஒரு மில்லியன் டொலர் என்றால் நம்நாட்டு மதிப்பில் சுமார் 9 கோடி ரூபாய்.



## ரிச்சா உடைகள் திருட்டு

சரண் இயக்கத்தில் வெளியீட்டிற்குத் தயாராக இருக்கும் 'அல்லி அர்ஜுனா' படத்தின் பாடல் காட்சி ஒன்று சில மாதங்களுக்கு முன் மலேசியாவில் படமாக்கப்பட்டது.

படத்தில் நாயகன் மனோஜ், நாயகி ரிச்சா பலோட் ஆகியோருடன் இயக்குநர் சரண் உட்பட பலர் மலேசியா பயணமானார்கள்.

படப்பிடிப்புத்தளத்தில் இறங்கி, பாடல் காட்சிக்கான தயார் வேலைகளில் இறங்கிய போது, ரிச்சா அணிய வேண்டிய கவர்ச்சிகரமான உடைகள் இருந்த பெட்டி காணாமல் போயிருந்தது.

பின் மலேசியாவில் ரிச்சாவுக்குத் தேவையான உடைகளை வாங்கிப் படப்பிடிப்பை நடத்தி முடித்தனர்.

## 'சாக்லெட்'டுக்குத் தடை

பிரசாந்த்-ஜெயாரே-மும்தாஜ் நடித்த 'சாக்லெட்' படம் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது. இப்போது இப்படத்துக்கு தடை செய்யவுள்ளதாகக் கூறப்படுகிறது.

வெளியீட்டிற்கு முன் தணிக்கைக் குழுவினர் பார்த்து வெட்டிய காட்சிகளை மறுபடி அவர்களின் அனுமதி இல்லாமல் சேர்த்து வெளியிட்டிருந்தனர்.

இந்த விஷயத்தை யாரோ தணிக்கைக் குழுவினருக்குத் தெரியப்படுத்திவிட, 'சாக்லெட்' படப்பிரதிகளைப் பறிமுதல் செய்து படத்தைத் தடை செய்ய சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## காதோடு சொல்லுகிறோம்

இரண்டெழுத்து 'கண்ணழகி'யுடன் கிசுகிசுக்கப்படும் 'நடனப்புயல்' நடிகர் உள்ளூரில் காதல் லீலைகளில் ஈடுபட்டால் வெளியே கசிந்து விடும் என்று வெளியூர்களில் காதலை வளர்த்து வருகிறாராம். நடிகை வெளியூர் படப்பிடிப்பு என்று வெளிமாநிலங்களுக்கு முதலில் செல்ல, நடிகரும் பின்னால் போய் விடுகிறாராம். இந்த விஷயம் வெளியே யாருக்கும் தெரியாது என்ற நினைப்பில் நடிகர் 'ஆட்டம்' போட்டு வருகிறாராம்.

'குண்டு பூ' நடிகை விரைவில் சினிமாவுக்கு முழுக்குப் போட்டு விட்டு முழுநேர அரசியல்வாதி ஆகி விடுவார் போல் தெரிகிறது. சினிமாவில் வாய்ப்புக்கள் குறைந்ததை அடுத்து தமிழக முன்னாள் முதல்வரான 'அம்மா'வின் பெயரில் இருக்கும் தொலைக்காட்சியில் தலைகாட்டி வரும் நடிகை, எந்த விழாவில் கலந்து கொண்டாலும் 'அம்மா'வைப்பற்றி நாலு வரி பேசாமல் விடமாட்டாராம். அது மட்டுமன்றி 'அம்மா'வை எப்போது வேண்டுமானாலும் சந்திக்கவும் நடிகைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாம்.

கிரிக்கெட் கப்டனுடனான காதல் 'கட்' பண்ணப்பட்டதை அடுத்து மீண்டும் ஒருமுறை தமிழ்த்திரையுலகில் புகுந்து ஒரு கலக்குக் கலக்கலாம் என்று எண்ணியிருந்த மூன்றெழுத்து 'ம' நடிகைக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இப்போது நடிகைக்கு தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் நடிக்க அழைப்பு வர மறுக்காமல் அந்த வாய்ப்பை ஏற்றுள்ளாராம்.

இனிய குரலுக்குச் சொந்தமான கருங்குயிலின் பெயர் கொண்ட முன்னாள் கவர்ச்சி நடிகை இப்போது பல தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருகிறார். சின்னத்திரையிலும் இப்போது போட்டி அதிகமாகி விட்டதால் வாய்ப்புகளைப்பெற 'தாராளமாக' நடந்து கொள்கிறாராம் அந்த நடிகை. இதனால் இவருக்கு வாய்ப்புக்கள் குறைவில்லாமல் வருகிறதாம்.



பிரியங்கா சோப்ரா
படம்: தமிழன்



## மினி சினி

- நாகார்ஜுன்-சிம்ரான் ஜோடியாக நடிக்க கே.எஸ்.ரவிக்குமார் இயக்கிய 'பாவா' என்ற தெலுங்குப்படம், இப்போது 'ஹலோ மாமா' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்படுகிறது.
- தீனி தயாரிப்பில் விஜய்-பிரியங்கா சோப்ரா ஜோடியாக நடிக்கும் 'தமிழன்' படத்திற்கு தொலைக்காட்சித் தொடர்களுக்கு இசையமைக்கும் இமான் இசையமைக்கவுள்ளார்.
- பாண்டியராஜன் ஜோடியாக 'நல்ல மனசுக்காரன்' படத்தில் அறிமுகமான ஜெயராகினி, இப்போது தனது பெயரை விலாசினி என்று மாற்றிக் கொண்டு 'லேடீஸ் அண்ட் ஜென்டில்மன்' படத்தில் நாயகியாக நடித்து வருகிறார்.
- விக்னேஷ்-மான்யா ஜோடியாக நடிக்க ஆரம்பிக்கப்பட்ட 'சூரி' படம் பணப் பிரச்சனையால் நிறுத்தப்பட்டது. இப்போது இப்பட வேலைகள் மறுபடி தொடங்கப்பட்டுள்ளன.
- தீபாவளிக்கு வெளியாகி இருக்கும் 'நந்தா' படத்தை அடுத்து இந்திப் படமொன்றை இயக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் பாலா. இப்படத்தில் அமீர்கான் நடிக்கவுள்ளார்.
- தனது அண்ணன் குமார் இயக்கத்தில் ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளார் ரோஜா. இதில் ரோஜாவே கதாநாயகியாகவும் நடிக்கவிருக்கிறார்.
- குஷ்புவின் சகோதரர் அப்துல்லா கான்-புதுமுகம் கரசி இணைந்து நடிக்கும் 'நாளை' படத்தை இயக்குபவர் ப்ரிய லோசனி என்ற தென்னாபிரிக்க நாட்டுத் தமிழ்ப் பெண்மணி.
- எஸ்.ஜே.சூர்யா முதல் முறையாகத் தயாரித்து, இயக்கும் 'நியூ' படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிப்பதாக இருந்தது. இப்போது இந்தப் படத்தில் இயக்குநர் சூர்யாவே நடிக்கவுள்ளார்.

## தமிழுக்குவரும் மலையாளக் கதைகள்

மலையாளத்தில் இருந்து தமிழுக்குத் தழுவிய 'ப்ரெண்ட்ஸ்' படம் வெள்ளிவிழா கொண்டாடியதை அடுத்து, வெற்றிபெற்ற மலையாளப் படங்களின் கதைகளைத் தமிழில் தயாரிக்க கடும் போட்டி நிலவி வருகின்றது.

மம்மூட்டி-ஷோபனா நடித்த 'ஹிட்லர்' படம் இதே பெயரில் தமிழில் தயாராகிறது. தமிழில் சத்யராஜ்-ரம்பா ஜோடியாக நடிக்கின்றனர்.

மலையாளத்தில் பெரு வெற்றி பெற்ற 'தென் காசிப்பட்டணம்' தமிழில் இதே பெயரில் தயாராகிறது. மலையாளத்தில் சுரேஷ்கோபி-லால் நடித்த வேடத்தை தமிழில் சரத்-நெப்போலியன் ஏற்று நடிக்கின்றனர்.

'ஈ பறக்கும் தளிகா' என்ற மலையாளப்படம் வெற்றி கண்டதை அடுத்து தமிழில் தயாரிக்கின்றனர். இதில் முரளி-வடிவேலு இணைந்து நடிக்கின்றனர்.

ஏற்கனவே மலையாளத்தில் வினயன் இயக்கி பரபரப்பாகப் பேசப்பட்ட 'லட்சுமி சரஸ்வதி பின்னே ஞானும்' என்ற படத்தை 'காசி' என்ற பெயரில் வினயனே இயக்கியுள்ளார். இதையடுத்து இவர் இயக்கிய 'கருமாடிக் குட்டன்' என்ற மலையாளப்படத்தைத் தமிழில் இயக்கவுள்ளார்.

'சிநேகிதியே' படத்தை இயக்கிய பிரியதர்ஷன் தான் இயக்கிய மலையாளப்படம் ஒன்றின் கதையைத் தமிழில் இயக்கப் போகிறார். இதில் '12பி' நாயகன் ஷாம் நடிக்கவுள்ளார். இது தவிர சுந்தர்.சி சொந்தமாகத் தயாரித்து இயக்க பிரசாந்த் நடிக்கும் தமிழ்ப்படமும் 'காக்கா குயில்' என்ற மலையாளப்படத்தின் கதைதான்.

## கார்த்திக்கை மிரட்டிய ரௌடி

தனது படங்களில் நடிக்கும் வில்லன்களின் மிரட்டல்களைப் பார்த்துப் பழகிய கார்த்திக் நிஜவில்லன் ஒருவர் மிரட்டிய சம்பவம் சில வாரங்களுக்கு முன் நடந்துள்ளது.

தயாரிப்பாளர் ஒருவரிடம் 35 இலட்சம் இந்திய ரூபாய்களைக் கடனாக வாங்கிய கார்த்திக்கிற்கு அப்பணத்தைக் குறிப்பிட்ட கெடுவிற்குள் கொடுக்கத் தவறியதால் 'தாதா' ஒருவரால் மிரட்டப்பட்டுள்ளார்.

கார்த்திக்கின் அலுவலகத்தில் வைத்து, அவரது சகோதரருக்கும் உதவியாளர்களுக்கும் தொலைபேசி மூலம் மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. பின், நேரடியாகக் கார்த்திக்கிடம் சென்று அவரை கண்ட துண்டமாக வெட்டி விடுவதாக மிரட்டி விட்டுச் சென்றுள்ளார் அந்தத் 'தாதா'.

இந்த விஷயம் நடிகர் சங்கத்தில் புகார் செய்யப்பட்டதை அடுத்து, நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த், கார்த்திக்கையும் குறிப்பிட்ட அந்தத் தயாரிப்பாளரையும் அழைத்துப் பேசிச் சமரசம் செய்து வைத்துள்ளார்.

## அப்பா -மகன்

பிரசாந்த் நடிக்க ஆரம்பித்ததில் இருந்து இதுவரை தனது தந்தை தியாகராஜனுடன் இணைந்து நடித்ததில்லை. இந்தக் குறை விரைவில் நீங்க இருக்கிறது.

தியாகராஜன் அப்பாவாகவும் பிரசாந்த் மகனாகவும் நடிக்க 'ஜெய்' என்ற பெயரில் படமொன்று தயாராகவுள்ளது. இப்படத்தின் கதையைத் தியாகராஜனே எழுதியுள்ளார்.

## ஒரு பாடலுக்கு நடனம்

பிரபல மற்றும் கவர்ச்சி நடிகைகளை ஒரு பாடல் காட்சியில் நடனமாட வைப்பதுதான் தற்போதைய திரையுலக வழக்கம்.

தற்போது பிரகாஷ் தயாரித்து நடித்து வரும் 'தயா' படத்தில் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரை ஒரு பாடல் காட்சியில் நடனமாட வைத்துள்ளார் படத்தில் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமாரின் சிஷ்யரான செந்தில்.

முகப்பில்

ரஜினி

ஸ்நேகா



சக்கரவர்த்தி

## ராஜசே...

தெலுங்கில் ... என்ற பெயரில் வெ... தமிழில் 'அனுசக்தி' எ... றப்பட்டு வருகிறது.

இதில் டாக்டர் ராஜசேகர்-... வர். இவர்களுடன் எஸ்.பி.பால... மனோரமா உட்பட பலர் நடித்துள்ள... வைரமுத்துவின் பாடல்களுக்கு ... வசனம்-மருதபரணி, இயக்கம்-ராஜேந்திர...


சஞ்சீவ்குமார்-அவிநாஷ்
படம்: பிரூட்டி

## பிரசாந்திற்கு சிலம்பரசன் பாடல்

ஸ்ரீ விஜய மாத்ருகா கம்பைன்ஸ் என்ற பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'என்ன விலை அழகே'. பிரசாந்த்-அமிஷா பட்டேல் நடிக்கும் இந்தப் படத்திற்காக 4 பாடல்கள் தயாராகியுள்ளன.

இதுவரை காலமும் தனது தந்தை டி.ராஜேந்தர் இசையில் மட்டுமே பாடி வந்த சிலம்பரசன் இப்படத்திற்காக தேவா இசையில் பாடல் ஒன்றைப்பாடியுள்ளார்.

'கட்ட பழம் வேணுமா
கடாத பழம் வேணுமா?'

என்று தொடங்கும் இந்தப் பாடலை சிலம்பரசன், பிரசாந்திற்காகப் பாடியுள்ளார்.

இப்படத்தை ராஜ்கபூர் இயக்கி வருகிறார்.

## தெலுங்கில் தோல்வி

சரண் இயக்கத்தில் பிரசாந்த்-சிம்ரான்-லைலா நடித்து வெற்றி பெற்ற 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தைத் தெலுங்கில் தயாரித்து வெளியிட்டார்கள். அங்கு இப்படம் தோல்வியைத் தழுவியுள்ளது.

தமிழில் சிம்ரான்-லைலா வேடங்களில் சௌந்தர்யா-ரிச்சா பலோட் ஆகியோர் தெலுங்கில் நடித்திருந்தனர்.

## பொன்னம்பலத்தின் அம்மையப்பா

'நாட்டாமை', 'முத்து' உட்பட பல படங்களில் வில்லனாக நடித்த பொன்னம்பலம் முதல் முறையாக நாயகனாக நடிக்கும் படம் 'அம்மையப்பா'.

'பாலம்' புகழ் கார்வண்ணனிடம் உதவியாளராக இருந்த வேலமுருகு என்னும் புதியவர் இயக்கும் இப்படத்தின் நாயகி ரோஷினியும் புதுமுகம்தான்.

இவர்களுடன் 'மகாநதி' சங்கர், சத்யப்பிரியா, காக்கா ராதா கிருஷ்ணன், வாசுவிக்ரம், வரலட்சுமி ஆகியோர் இணைந்து நடித்துள்ளனர்.

இப்படத்தில் 'மிஸ்டர் டூபாய்' பட்டம் பெற்ற ஆணழகர் ஒருவர் பொன்னம்பலத்துடன் மோதுகிறார்.


மந்த்ரா
படம்: ஆடி 18



## சரத்குமார்-சுரேஷ்கோபியின் "நல்லவங்க"

தற்போது 'மானஸ்தன்' படத்தில் நடித்து வரும் சரத்குமார் அடுத்து ராஜகபூர் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

இதில் சரத்குமாருடன் மலையாள நடிகர் சுரேஷ்கோபியும் நடிக்கிறார். 'தீனா' படத்திற்குப் பின்சுரேஷ் கோபி நடிக்கும் இரண்டாவது தமிழ்ப்படம் இது. இதற்கு 'நல்லவங்க' என்று பெயரிடப்பட்டுள்ளது.

சில காலத்திற்கு முன் ராஜ்கபூர் இயக்கத்தில் மம்முட்டி-பிரபு நடிப்பதாக அறிவிக்கப்பட்ட 'நல்லவங்க' படத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுப் பின கைவிடப் பட்டது என்று குறிப்பிடத் தக்கது.


சூர்யா-ராஜ்கிரண்
படம்: நந்தா

## காதலுக்குக் காணிக்கை

முற்றிலும் புதுமுகங்கள் நடிக்க 'காதலுக்குக் காணிக்கை' என்ற பெயரில் சத்தமில்லாமல் ஒரு படத்தை எடுத்து முடித்திருக்கிறார்கள்.

புதுமுகங்கள் பாலாஜி-ஷோபா இணைந்து நடித்துள்ள இப்படத்தை விசித்திர பாபு என்ற புதிய இயக்குநர் இயக்கியுள்ளார். குறைந்த செலவு- முதல் முயற்சி ஆகிய விடயங்களைக் கருத்கொண்டு இவர்களது இந்த முயற்சியைப் பாராட்டலாம்.

## சேகர்-ரம்பா நடிக்கும் 'அணு சக்தி'

...காளிக் மாமய்யா' ... வெற்றி பெற்ற படம் ... பெயரில் மொழிமாற்...

...இணைந்து நடித்துள்ள ...மணியம், ஊர்வசி, ...


... இசையமைத்துள்ளார்.

பெட்ரோலுக்கு மாற்றாக விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடிக்கும் ஒரு எரிபொருள் ஃபோர்முலாவைக் கைபற்றி வெளிநாடுகளுக்கு விற்க முயற்சிக்கிறது ஒரு கும்பல். இதை நாயகன் முறியடிப்பது தான் படத்தின் கதை.

இப்படத்தின் பாடல் காட்சிகள் யாவும் கனடா நாட்டில் உள்ள இயற்கை அழகு கொஞ்சம் இடங்களில் படமாக்கப்பட்டுள்ளன.


ஆர்.சுந்தர்ராஜன்-நளினி-விலாசினி
படம்: லேடீஸ் அன்ட் ஜென்டில்மேன்

# இவர் யார் தெரியுமா?





உலகம் முழுவதும் இன்று உச்சரிக்கும் பெயரிற்குச் சொந்தக்காரரான இவரை யார் என்று உங்களால் அடையாளங்காண முடிகிறதா?

கம்பியூட்டர் உதவியுடன் இவரது அடர்ந்த தாடியும் மீசையும் மழிக்கப்பட்டு, தலைப்பாகை அகற்றப்பட்டு டை கட்டி கோட் அணிய வைக்கப்பட்டுள்ளார்.

இப்போது கண்டுபிடித்திருப்பீர்கள் யாரென்று. ஒசாமா பின்லாடன் தான் இவர். அருகில் உள்ள சிறிய படத்தில் தாடி, மீசை, தலைப்பாகையுடன் ஒசாமா.

## ரமழான் ராணியே...!

ரமழானே
எவ்வளவு மகத்தானது
உன் வருகை!
***
மாதங்களுக்கு
நீயொரு மகாராணி!
வருடத்துக்கொரு முறை
வந்து செல்லும்
தேவதை நீ...
***
உன் வருகை
கண்டு
பூமி முழுதும்
பூபாளம் இசைத்துக் கொள்கிறது!
***
நகர வாசல்கள்
மூடிக் கொள்கின்றன...
சுவன வாசல்கள்
திறந்து கொள்கின்றன..
சாத்தான்கள் தங்களுக்கே
சாவு மணி அடித்துக்
கொள்கின்றனர்!
***
உன் வருகையை
வரவேற்க எண்ணி
பகல்கள் அனைத்தும்
பசியால் பிரகாசிக்கின்றது...
இரவுகள் அனைத்தும்
'இபாதத்'களினால்
அலங்கரிக்கப்படுகின்றது...
***
நீ முப்பது
நாட்கள்தான்
பூமியில் தரித்திருப்பாய்...
ஆனாலும்,
உன் சொற்ப வருகையால்
உள்ளங்கள் அடையும்
உவகைகளோ கோடி!
***
ரமழான் ராணியே...
நீகொண்டு வந்த
நோன்பெனும் பரிசானது,
ஆன்மாவிலுள்ள
அழுக்குகளை(ச்)
சுத்திகரிக்கப் பயன்படும்
சோப்பு!
***
நன்மைகளை
வாரி எடுக்கப் பயன்படும்
சீப்பு!
***
இருப்பவனையும்
இல்லாதவனையும்
பசியால் சமரசமாக்கி
சமாதானத்தை
சரி நிகரில் காட்டித் தருவதும்
நீயே...!!
***
உனது
இந்த வருகையிலாவது
சமாதானத்தில்
ஒரு வாழ்வு வாழ
சந்தர்ப்பமாகட்டும்
இலங்கையர்களுக்கு!!

வாழைச்சேனை-
ஷல்மானுல் ஹரீஸ்.

## அடிமைகள்

போதிக்க வந்தவர்கள்
போதனைக்குள்
தள்ளப்பட்டார்கள்!
*
அன்புக்கு அடிபணிய நினைத்து
மனையாளின்
ஆணவத்தில்-சிறைப்பட்டு
போனார்கள்!
*
புனிதமான கல்வி
ஒரு "ஹீரோ ஹொண்டா"வால்
கேவலமாய்ப் போனது!
*
சீதனத்தைக் கொடுமை
என்றவர்கள்தான்-கடைசியில்
பி.எம்.டபிள்யூ. வால்
விலைபேசப் பட்டவர்கள்.
*
சீதனப்பயணமும்
அரசாங்க சம்பளமும்
சிக்கனமாய் விளையாடும்
அயல் வீட்டு
அடுப்புகள் எரிந்து
நீண்ட நாட்களாகும்போது
*
எப்படியெல்லாம்
நினைத்திருந்தார்கள்-இறுதியில்
ஒரு ஏழைக் கன்னியின்
ஏக்கப் பெருமூச்சு
மாடிகளைக்கூட
தகர்த்து விடும் என்பதை
மறந்துதான் போனார்கள்!


ஒலுவிலூர்-ஸாலிஹ்.

## இன்னுமா..?

நெகிழ்ந்து கொண்டே
போவதுதானா
நம் வாழ்க்கை!
வளைந்து,
நெளிந்து போனாலும்
நதி
அருவியாய்
கொட்டவில்லையா!
அதிகார ஆணிகளை
அடித்துக் கொண்டேயிருக்க
நாமென்ன
மரக்கட்டைகளா!
அல்லது-இன்னும்
அவதாரமெடுத்துக் கொண்டிருக்கும்
இயேசுநாதர்களா!
பொறுமையும்
சகிப்புமே
வாழ்க்கையென்றால்...
சுகங்களும்
சுதந்திரங்களும்-வெறும்
எட்டாத பழங்களுக்கு விட்ட
கொட்டாவிகள் தான்!
உழைப்பில் நாம்
முதலாளிகள் என்றால்
நாமெல்லாம்
உண்மையான ஊதியத்திற்கும்
உரிமைகளுக்கும்
இன்னும்
இலவுகாக்கும்
கிளிகள் தானோ!
அரண்மனைகளை காவல் காக்கும்
காவலாளிகளே!
உங்களையே திருடிவிட்ட
கதை தெரியுமா
உங்களுக்கு!
சதி எது
விதி எது என்று
விளங்கிக் கொள்ள
இன்னுமா நேரமில்லை
உங்களுக்கு!

வே.கர்ணாநிதி-டயகம கிழக்கு.

# பேனா நண்பர்கள்



பெயர்:
எஸ். வினோராஜ்
வயது: 19
முகவரி: 19, சுவர்ண சைத்திய வீதி,
கிராண்ட்பாஸ்,
கொழும்பு-14.
பொழுது போக்கு:
பேனா நட்பு, ரீ.வி.



பெயர்: எஸ். லட்சுமி
வயது: 20
முகவரி:
233, கல்வல வத்த,
குருதெனிய,
கண்டி.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
ஏ. சலாகுதீன்
வயது: 20
முகவரி:
பெரிய கரிகல்,
பேசாலை, மன்னார்.
பொழுது போக்கு:
கிரிக்கெட், வானொலி.

## உத்தரவு கொடு

உன்னை காணும்
போதெல்லாம் நான்
காணாமல் போவது
ஏனடி.
***
உன் விழியும் என்
விழியும் மோதுண்டு
வெளிப்படும் ஓராயிரம்
ஒளிக்கற்றைகளில்
ஒய்யாரமாய் குளிர்காய்கிறேன்
***
என் உணர்வுக்குவியலில்
ஊஞ்சல் கட்டி உன்னை
ஆட்டுவிக்கிறேன்
***
உன் செவ்விதழில்
செர்ரி தோட்டம்
அமைக்க மனுபோட்டு
காத்திருக்கிறேன்
***
என் பூங்காவனத்தில்
பூங்காற்றாய் வீசும்
உன்னை முழுவதுமாய்
சுவாசிக்கிறேன்.
***
என்னவளே
உத்தரவு கொடு
என்னுயிரை கசக்கிப்
பிழிந்து நம் காதலுக்கு
உரமாக்குகிறேன்!

என்.கோகிலா-பெல்மோரல்.

# தேன் கிண்ணம்

## சீர் திருத்த வா(வியா)தி

தலைப் பாகையின்
தொங்கலைச் சொருகுவது
இடபுறமா?
வலபுறமா?
***
மன்னர்தான் கேட்டாலும்
உண்மைதான் சொல்வேன்
மார்தட்டி ஈரணியாய்ச் -சில
மார்கமேதைகள்
தர்க்கித்து தர்க்கித்தே
தகர்த்து விட்டார்கள்
மார்க்கத்தை!
***
மக்களும்தான் இப்போது
மணிக்கணக்காய்...
தலைப்பாகை பற்றியே
தர்க்கம் செய்கிறார்கள்
நிர்வாணமாய்
நின்று கொண்டு!
***

ஒலுவில் அரூஸ்.




உரையாடும் திறமை பெற்றிருந்தால் சூழ்நிலைக்கு ஏற்ப அறிவுடனும் ஆற்றலுடனும் கண்டிப்பாக பேசி எல்லோருடைய கவனத்தையும் மனத்தையும் கவர்ந்து விட முடியும். நாம் யாருடன் உரையாடுகிறோமோ அவரை சில நிமிடங்களில் நிதானித்து அவருக்கு ஏற்றபடி உரையாட வேண்டும். அப்பொழுதுதான்-

அடுத்தவரின் வலிமை, வலுவின்மை விருப்பு வெறுப்பு ஆகியவை எல்லாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். அதற்கு ஏற்றபடி உரையாடி நம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும்.

நாம் ஒரு செய்தியை எடுத்து உரைக்கும் போது மற்றவர்களுக்கு அது இன்பமாக இருக்கிறதா இல்லையா என்பதனை அவர்களுடைய முகத்தோற்றம் காட்டிவிடும்.

**வெ**ற்றியுடன் வியாபாரம் செய்வதற்கு அடிப்படையாக இருப்பது உரையாடல்தான். நம்முடைய உள்ளத்தில் உள்ளதை பிறருக்கு எடுத்து உரைக்க வைப்பதும் பிறர் உள்ளத்தில் இருப்பதை நாம் கேட்டு தெரிந்து கொள்ளவும் உதவுவது உரையாடல் தான்.

## நல்ல உரையாடல்

நம்முடைய உள்ளத்தில் உள்ளதை அடுத்தவருக்கு தெளிவாக விளங்கச் செய்ய வைப்பது அருமையான ஆற்றலாகும். மற்றவர்களின் மனதை கவரத்தக்க சக்தி நம்மிடம் இருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாம் எந்த வியாபாரத்தைத் தேர்ந்து எடுத்தாலும் உரையாடல் திறமை இல்லையென்றால் முன்னேற்றம் காண முடியாது. ஒரு மருத்துவர் நோயாளியிடம் பேசும் அன்பு ததும்பிய உரையாடலைப் பொறுத்ததுதான் அவருடைய தொழில் வெற்றிகரமாக அமையும்.

ஒரு வழக்கறிஞர் நீதிபதியின் உள்ளத்தைக் கவரத்தக்க வகையில் சட்ட நுணுக்கங்களைப் பேசுவதைப் பொறுத்துத்தான் அவருடைய முன்னேற்றம் இருக்கும். தட்டுத் தடுமாறி தயங்கித் தயங்கிப் பேசினால் பிறருடைய மனதில் நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் உருவாக்க முடியாது.

நமக்கு உரையாடல் திறமை இல்லை என்றால் நாம் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அதனால் நிச்சயமாக வியாபாரத்தில் வெற்றியைப்பெற முடியாது.

பேச்சுக்கலையில் வல்லுநர்களாய் இருப்பவர்களுடன் உரையாடுவது நம்முடைய உள்ளத்திற்கு மகிழ்ச்சி தரும். அவர்களுடைய குரல் இசை வெள்ளம் போல் நம்முடைய காதுகளில் கரை புரண்டு ஓடும்.

அதற்கு ஏற்றவாறு பேச்சின் போக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். நமக்குப் பிடித்ததையே பேசி மற்றவர்களுக்குச் சலிப்பை உண்டாக்கி விடக் கூடாது.

மற்றவர் சிரிப்பு நிறைந்த மகிழ்ச்சிகரமான உரையாடலை விரும்புகிறாரா? அல்லது எண்ணத்தை கிளறிவிட்டு சிந்தனைக்கு வேலை கொடுக்கும் உரையாடலை விரும்புகிறாரா? என்பதை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ப உரையாடலின் போக்கை மாற்றினால் நிச்சயமாக வெற்றி பெற இயலும்.

உரையாடலின் நடுவே சிறு நகைச்சுவைகள் இன்ப நிகழ்ச்சிகள் எளிய கதைகள் ஆகியவற்றைக் கூறினால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

சம்பந்தமே இல்லாத நிகழ்ச்சியை சொல்லிவிட்டு நாமே சிரித்துக் கொள்வது கேட்பவரின் மனதை பாதிக்கும்.

நம்முடைய பேச்சு கருத்து நிரம்பியதாக இருக்க வேண்டுமென்று எண்ணி கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே இருந்தால் அது பிறருக்குத் தலை வேதனையாகத்தான் இருக்கும்.

நாம் சொல்லும் சொற்களின் திறன்களை அறிந்து அவற்றால் ஏற்படும் விளைவுகளை உணர்ந்து உரையாட வேண்டும். அதுதான் சிறப்பான முறையாகும்.

# முகத்தோற்றமும் எதிர்காலமும்

## மகளிர்க்கு மட்டும்

**சி**ல பெண்களைப் பார்த்த உடனேயே பிடித்துப் போய் விடுகிறது. அதேபோல சிலரைப் பார்த்தால் பிடிப்பதில்லை. இதற்கு என்ன காரணம்?

வேறொன்றுமில்லை. அவரவர் முகராசி தான்.



தற்போது மற்ற ஜோதிடங்களை விட முகத்தைப் பார்த்து எதிர்காலத்தை பளிச் ஆக்கிடும் முக வெட்டு ஜோதிடம் பிரபலமாகி இருக்கிறது.

ஒரு பெண் மனதில் என்ன நினைக்கிறாள், அவள் எப்படிப்பட்டவள் என்பதை இதன் மூலம் துல்லியமாக கணித்து விடலாம்.

இந்த முக ஜோதிடம் மூலம் நம்மை நாமே பரிசோதித்து கொள்ளலாம். நமது தன்மை, குணநலன்கள் எப்படி இருக்கும் என்பது பற்றியும் எளிதாக தெரிந்து கொள்ளலாம்.

இதோ......

### கண்கள்

பெண்களின் கண்கள் தாமரை மலரைப் போல அழகாக இருந்தால் நலமுடன் இருப்பார்கள். சிறியதாக இருந்தால் பொழுதுபோக்கு கேளிக்கை போன்றவற்றில் நாட்டமுள்ளவர்களாக இருப்பார்கள்.



கண்கள் குண்டு குண்டாக இருந்தால் கணவனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்துபவர்களாக இருப்பார்கள். பூனைக் கண்களாக இருந்தால் எதிலும் முரட்டுத் தனமாக இருப்பார்கள். எதையும் இரக்க உணர்வுடன் பார்ப்பவர்களது வாழ்வில் நிம்மதி நிலைத்து நிற்கும்.

### உதடு

பவளம் போன்ற தோற்றமுள்ள உதடு மிருதுவாகவும் சிறியதாகவும் இருந்தால் அவள் பத்தினியாக இருப்பாள்.

உதடுகளின் பக்கங்களில் முடி முளைத்திருந்தால் முரட்டுத்தனமாக இருப்பாள்.



மேல் உதட்டின் மீது முடி முளைத்திருந்தால் துக்கத்திற்கு ஆளாவாள். உயரமான மேல் உதடு இருந்தால் சண்டைக்காரியாக இருப்பாள். பெரியதாக இருந்தால் குலத்தைக் கெடுப்பாள்.

கீழ் உதடு பெரிதாக தொங்கியபடி இருந்தால் அதிர்ஷ்ட சாலியாக இருப்பாள். கீழ் உதட்டின் உள் பகுதி தாமரை மலர் போன்ற வண்ணத்தை பெற்றிருந்தால் ராஜபத்தினி.

### பல்

பற்கள் சமமாக இருந்தால் ஆரோக்கியமும், ஐசுவரியமும் பெறுவாள். கோணலாக மேலும் கீழும் இருந்தால் நல்லதல்ல. மற்றவரின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.



பற்களுக்கு இடையே இடைவெளி காணப்பட்டாலும் பற்கள் தடித்து இருந்தாலும் துக்கத்தை அடைவாள். உயரமான வரிசை தப்பிய பற்கள் இருந்தால் கூச்சசுபாவம் உடையவளாக இருப்பாள்.

மல்லிகை மொட்டு போல பற்கள் இருந்தால் கணவன் சகலவசதியும் பெறுவான். பற்களில் பழுப்புக்காவி இருந்தால் புருஷனுக்கு களங்கத்தை ஏற்படுத்துவாள்.

பால்போல் வெண்மையோடும் சமமாக பற்கள் அமைந்திருந்தால் சிறந்த பெண்ணாக இருப்பாள்.

### தலைமுடி

நீளமான கருமையான தலைமுடியை கொண்ட பெண்கள் மனநிறைவுடனும் மகிழ்ச்சியாகவும் இருப்பார்கள். வறுமையில் வாழ்ந்தாலும்கூட சூழ்நிலை இன்பத்தை கொடுக்கும். இளம் வயதில் திருமணம் நடக்கவும் வாய்ப்பு உண்டு.

குணமான கைநிறைய சம்பாதிக்கும் கணவர்கள் கிடைப்பார்கள். குடும்ப வாழ்வில் சங்கடம் இருக்காது. நல்ல வாரிசுகளை பெற்றெடுப்பார்கள்.

தலைமுடி குட்டையாகவும் பழுப்பு நிறமாகவும் இருந்தால் அப் பெண்களின் வாழ்க்கையில் இன்பம் துன்பம் மாறிமாறி வரும். திருமணத்திற்குப் பின் நல்ல சூழ்நிலை அமையும்.



நிரந்தர வருமானம் கிடைக்கும். தலைமுடி மிகவும் குட்டையாகவும், சுருட்டையாகவும் இருந்தால் சிறு வயது முதலே பல துன்பங்களை அனுபவிக்க வேண்டிவரும். வருமானம் குறைவாகவே இருக்கும். வாழ்க்கையின் மத்தியப் பகுதிக்குப் பிறகு நிம்மதி கிடைக்கும்.

### நாக்கு

நாக்கு சிறியதாகவும் மழமழப்பாகவும் சிவப்பாகவும், மேடு பள்ளமற்று சமமாகவும் இருந்தால் நல்லது. சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.



நாக்கின் நுனி கூர்மையாக இல்லாமல் அகன்று இருந்தால் நல்லதல்ல. நீளமான நாக்கு இருந்தால் பொய் பேசுவாள்.

### மூக்கு

மூக்கு நீண்டு இருந்தால் நீண்ட ஆயுளையும் செல்வத்தையும் பெறுவாள். குடமிளகாய் போல மூக்கு இருந்தால் தரித்திரம் தான் மிஞ்சும். பள்ளமாக இருந்தால் புருஷனை நிம்மதியாக இருக்க விட மாட்டாள். மிருதுவாக இருந்து துவாரங்கள் சமமாக இருந்தால் வசதி பெற்றவளாவாள். மூக்கில் முடி முளைத்திருந்தால் சண்டை சச்சரவில் ஈடுபடுபவளாக இருப்பாள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கூந்தல் அழகாக இருக்க...



பெண்களுக்கு அழகைக் கொடுப்பதில் அவர்களின் நீண்ட கூந்தலும் பெரும் பங்கு வகிக்கிறது. கருகருவென்று சாட்டை போன்ற பின்னல் அழகாக இருக்கும். கூந்தலை அழகுப்பாரம் என்பார்கள். கூந்தலை மிகத் தூய்மையாகப் பராமரிப்பது மிக அவசியம்.

எப்படிக் கூந்தலைப் பராமரிப்பது என்று தெரியாமல், கூந்தல் அழகாகக் காணப்பட வேண்டும் என்று ஸ்பிரேக்கள், சாயங்களை உபயோகிப்பது, அந்த நேரத்திற்குக் கூந்தலை அழகுபடுத்தினாலும் பின்னர் கூந்தலுக்கு ஆபத்தையே விளைவிக்கும்.

இவர்களது கூந்தல் காய்ந்துபோகும். இது அழகான முகத்தைக் கூட அசிங்கமாக்கி விடும்.

இப்படிக் கூந்தலைக் கெடத்துக் கொண்டவர்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

குளிப்பதற்கு முன் வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெயை எடுத்து விரல் நுனிகளில் தொட்டு முடியின் வேர்ப்பாகத்தில் படும்படி நிதானமாகத் தேய்க்க வேண்டும்.

எண்ணெய் தேய்த்துக் கொண்ட பிறகு 5 நிமிடத்தில் இருந்து பத்து நிமிடம் வரை தலையில் ஒவ்வொரு இடத்தையும் மெதுவாக அழுத்தி மசாஜ் செய்து கொள்ள வேண்டும்.

அதன் பிறகு தலையை அப்படியே விட்டுவிடவேண்டும். ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் எண்ணெயில் தலை ஊர வேண்டும். பின் சீயக்காய் தேய்த்து, தண்ணீரில் தலையை அலச வேண்டும்.

இப்படிச் செய்து வந்தால் காய்ந்துபோன முடிகள் பட்டுப்போல மிருதுவாகி, கருமையாக அழகான தோற்றத்தைக் கொடுக்கும்.

## துணிகளைத் வைப்பது எப்படி?



துணிகளைத் துவைக்க ஆரம்பிக்கும் முன் சில அடிப்படை வேலைகளைச் செய்து கொண்டால் துணிகளை இலகுவாகத் துவைக்கலாம். பாதுகாப்புடன் நீண்ட நாள் உழைக்கவும் வைக்கலாம்.

1. ஆடைகள் பல வர்ணங்களை உடையன. எனவே வெள்ளைத் துணிகளை முதலில் தனியே பிரித்துக் கொள்ளுங்கள். மீதியுள்ள வர்ணத் துணிகளைப் பிரித்துக் கொண்டு இவற்றிலிருந்து தனியே எடுத்துக் கொள்ளுங்கள்.

2. இவை மூன்றையும் வெவ்வேறு வாளிகளில் தேவைப்படும் அளவுக்குத் தண்ணீர் ஊற்றி ஊறப் போடுங்கள்.

3. இத்துணிகள் குறைந்த பட்சம் 15 நிமிடங்கள் தண்ணீரில் ஊற விடவேண்டும்.

4. தண்ணீரில் துணிகளை நனைப்பதற்கு முன்னர் சிறுவர்கள், ஆண்களின் உடைகளில் உள்ள பொக்கட்டுக்களைச் சோதனையிட வேண்டும். இவற்றில் பிளேட், ஊசி போன்றவை இருக்கலாம்.

5. எந்தத் துணியாவது கிழிந்திருந்தால் அதனை முதலில் தைத்துவிட வேண்டும். ஏனென்றால் தைக்கப்படாத துணிகளின் கிழிசல் துவைக்கும்போது பெரிதாகி விடக்கூடும்.

6. இதன்பிறகு ஊற வைக்கப்பட்டுள்ள துணிகளைத் தனித்தனியே எடுத்து, சலவைத்தூள் போட்டு அரைமணிநேரம் ஊற வைத்துத் துவைக்கலாம். சவர்க்காரம் ஆயின் அப்படியே துவைக்கலாம்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KL

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-12-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

திருமதி தி. சந்திரதீஸ்
46, ஆசிரியர் சதுக்கம், உவர்மலை, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.







நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"எதுக்குன்னு கேளேன்."

"எதுக்கு?"

"எங்கேஜ்மெண்டுக்கு. நிச்சயதார்த்தம் பத்தி மெட்ராஸ் முழுக்க இப்பவே பேசிக்கிடுது. அப்பாவை நீ இன்னும் சந்திக்கலை. சாயங்காலம் அவரை வந்து பார்த்துட்டுப்போயிரு, என்ன?"

"ம்."

"எங்கேருந்து பேசறேன் தெரியுமா?'

"தெரியாது."

"சத்தம் கேக்கலை, விர்ர்ன்னு...?"

"கேக்குது."

"நம்ம ப்ரைவேட் ப்ளேன்லேருந்து பேசறேன்."

"அப்படியா?"

"ய ஆர் நாட் இம்ப்ரஸ்டு? இதுக்காகவே 'யு.எச்.எ.ஃப்.' வெச்சுப் பத்து இன்ஜினீயர் ஸ்பெஷல் கனெக்ஷன் கொடுத்திருக்காங்க. லட்ச ரூபா செலவழிச்சிருக்கேன்."

"எனக்கு இதெல்லாம் புரியவே இல்லை."

"சாயங்காலம் அப்பாவைப் பார்க்க வர்றியா?"

"வரணுமா?"

"கட்டாயம். அவர் நைட்டு பாம்பே போயிடறாரு. உனக்கு அவரைப் பிடிக்கும். என்னை மாதிரிதான் ஆசாமி. இல்லை... அவரை மாதிரி நான்! நினைச்சதை அடைஞ்சே தீரணும். அம்மாகிட்ட போன் கொடு..."

"அம்மா... உன்னோட பேசணுமாம்."

"யாரு வைருவா? என்ன வைரு... எப்படி இருக்கேள்?" என்று அம்மா அவ்வப்போது சிரிப்புடன் பேச.. அனிதா அறைக்கு வந்து வெற்றுப்பார்வை பார்த்துக் கொண்டு அவர்களின் தொடர்பற்ற பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"எனக்கு மயில் கழுத்து கலர் பிடிக்கும்னு எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது... ஏதாவது இட்சிணி வேலையா?"

மாலை... சாந்தோம் வீட்டுக்குப் போனபோது, வைரவனின் அப்பா ஹாலில் முழுசாக ஸூட் வெய்ஸ்ட் கோட் எல்லாம் அணிந்து காத்திருந்தார். அனிதா வந்ததும், எழுந்து, "வாம்மா" என்று அவளின் தலையைத் தடவி நெற்றியில் முத்தமிட்டபோது லேசாக விஸ்கி வாசனை அடித்தது. சற்று கறுப்பாகப் பர பரக்கும் கண்களுடன் அவளை நோக்கி சிரிக்கும் போது சிங்கப்பல் தெரிந்தது. ஒரு தங்கப் பல்லும் தெரிந்தது.

வைரவனின் அம்மா இப்போது பிரமிக்கும் செருலியன் நீலத்தில் க்ரேப்சில்க் புடைவை அணிந்து அனிதாவை வந்து கட்டிக்கொண்டாள். அவளிடத்திலும் லேசாக அந்த மணம், கொலோன் வாசத்தையும் மீறி அடித்தது.

"எப்படி இருக்கா பாருங்க மருமவ?"

"ஊர்ல எத்தனையோ பெண்கள் இருக்கறப்ப உன்னைப் போய் பிடிச்சானா எம் மவன்?"

"அண்ணாச்சி... என்ன இது... அவ..." என்றான் வைரவன்.

"நீங்கள்ளாம் பாப்பாரவங்களா?"

தலையாட்டினாள். ஆமென்று.

"நாங்க என்ன ஜாதி தெரியுமா?"

தலையாட்டினாள், இல்லையென்று.

"எங்கப்பச்சி கோயில்ல மோளம் அடிச்சுக்கிட்டிருந்தவரு. வீட்ல கன்னடம் மாதிரி பேசுவம்... தெரியுமில்லை... தாத்தா பேரு வைரவன். எங்கப்பா பேரு வரதராசு. எம் பேரு லட்சுமணன். எல்லாம் போன ஜனரேஷன். இப்ப எல்லாம் தமிழ்தான். மவன் ரொம்ப சுத்துவான். கொஞ்சம் இவனைக் கட்டுப்பாட்டுல வெச்சிரு. ஒரே மவன். பெண்ணா பெத்து தள்ளிட்டா இவ" என்று பைப்பை எடுத்து, அதனுள் கம்பித் திரியை நுழைத்து குடைந்து பழுப்பாக வெளியில் எடுத்து, 'எரின்மூர்' புகையிலையை அடைத்து பற்றவைத்து நீல மேகப் புகை விடுவித்து "என்ன படிச்சிருக்கே?" என்றார்.

"பாட்டனி..."

"முடிச்சிட்டியா?"

"இல்லை, இந்த வருஷம்தான் ஃபைனல்..."

"வைரு... இதை ஏதாவது எம்.பி.ஏ-க்கு டிகிரி முடிச்சதும் அனுப்பிச்சுரு ஃப்ராங்க்கிட்ட சொன்னா போதும்..."

"முதல்ல கல்யாணம் ஆவட்டும் அண்ணாச்சி!" என்றான் வைரவன்.

"மவன் என்னை 'அண்ணாச்சி'ன்னு தான் கூப்பிடுவான். நீ எப்படிக் கூப்பிடப் போற? உங்க பாப்பாரவங்கள்லாம் மாமனாரை எப்படிக் கூப்பிடுவாங்க?"

"'அப்பா'ன்னு..."

"அப்படியே கூப்பிடு!"

"ஏம்மா நகைங்கள்லாம் போட்டுக்கிட்டு வரலை?" என்றாள் வைரவனின் அம்மா.

"கல்யாணத்தின்போது போட்டுக்கலாம்னு..."

"கல்யாணத்துக்கு வேற செட்டு.. இது நிச்சயதார்த்தத்துக்கு. வைரு சொல்லலையா? அன்னிக்காவது போட்டுக்கிட்டு வாங்க. உள்ளே வெச்சுப் பூட்டாதீங்க. பாரும்மா... உங்க அம்மா கையில சொல்லிப் போடு... பழகிக்கணும், இந்த ஃபேமிலில ஊடாட! நகைங்கறது போட்டுக்க.. பூட்டி வெக்க இல்லை! பணம் செலவளிக்க... செலவளிச்சாத்தான் டாக்ஸ் கட்டாம தப்ப முடியும்..." என்றார் லட்சுமணன். புகை விட்டுக் கொண்டே அவளை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இன்னும் என்னால நம்ப முடியலை..."

"என்ன அண்ணாச்சி?"

"இவகிட்ட அப்படி என்னத்தை நீ கண்டுட்டே?"

"சும்மாருங்க" என்று அதட்டினான் வைரவன்.

"கிரேஸி பாய்ஸ்!" என்று வியந்தார்.

"சரி, நான் பாம்பே போறேன்... அதுக்கு முன்னால வாக் போகணும்... வைரு, யாரையாவது அனுப்பி போர்டிங் கார்டு வாங்கி வெச்சிரு.."

பலவித டிபன் தட்டுகள் தள்ளுவண்டியில் வந்தன.

"நான் வெஜ் சாப்பிட மாட்டியே?" என்றார், அனிதாவைப் பார்த்து.

கொண்டு வந்த டிபன் சந்தேகாஸ்பதமாக இருந்தது. அதைத் தொடாமல் டீ மட்டும் குடித்தாள். ஏலக்காய் வாசனை அடித்தது. ஒரு வாய் குடித்து, மீதியை வைத்துவிட்டாள்.

வைரவன் அவளிடம் ஒரு சீட்டைக் காட்டினான்.

'ஒரு முறை நமஸ்காரம் பண்ணிடு' என்று எழுதியிருந்தது.

அனிதா பின்வாங்கி, "உங்க ரெண்டு பேருக்கும் நமஸ்காரம் பண்ணிக்கிறேன்..." என்றாள்.

அவர் ஒதுங்கிக் கொண்டு "இருக்கட்டும்... இருக்கட்டும்..." என்று சொல்லிவிட்டு, "நல்ல பொண்ணு... உள்ளருந்து ஏதாவது கொண்டு வந்து கொடேன்... ஒரு ஜேடு செட்டு நம்ம சச்சவுக்காக வாங்கியாந்தனே... அத எடு..." என்றார். மனைவியிடம்!

"என் மகன் அதிர்ஷ்டக்காரன்... இவளைக் கல்யாணம் கட்டிக்கிட்டப்ப, இவ அப்பன் கடனாத்தான் வெச்சிருந்தான். நானும் லவ் மேரேஜ்தான்... இவங்க தேவர் ஜாதி... கொடுக்கவே மாட்டன்னுட்டாங்க!"

"நான் வந்த அதிர்ஷ்டம் தாங்க உங்களுக்கு காண்ட்ராக்ட் கெடைச்சுது.." என்று வைரவன் அம்மா சொல்ல,

"அப்படித்தான் சொல்லிக்கிட்டுத் திரியறா.. என் உழைப்பை யாரும் சொல்ல மாட்டாங்க, இதெல்லாம் ஒரு லைஃப் டைம்ல சம்பாதிச்சது அனிதா..." என்றார் லட்சுமணன்.

அனிதா "அப்படியா?" என்றாள். மனம் அலைந்தது. 'இந்தச் சூழ்நிலையில் வாழ்நாளா?' என்று அவளுக்கு வியப்பாக இருந்தது. வைரவனின் சகோதரிகளும், கஸின்களும் அவ்வப்போது வந்து அவளைத் தொட்டுப் பார்த்துவிட்டுப் போனார்கள். சங்கிலி நாய் அவளைக் கண்டு வாலாட்டப் பழகிவிட்டது. நாய் எப்படியோ 'அனிதா முக்கியமானவள். அவளைப் பார்த்துக் குரைத்தால் உதை விழும்' என்று தெரிந்து கொண்டு விட்டது!

அபி என்கிற பெண் அவளை அழைத்துக் கொண்டு போய்த் தன் எக்ஸர்சைஸ் சைக்கிளைக் காட்டினாள்.

"இதுக்குள்ள கம்யூட்டர் இருக்குது... நான் தப்பலா இருக்கேன்னு வைரு அங்கிள் தான் ஜப்பான்லருந்து வாங்கி வந்தாரு... உனக்கு மைக்கேல் ஜாக்ஸன் பிடிக்குமா?"

அனிதாவை மறுபடி தன் காரில் கொண்டுவிட்ட போது, வீட்டு வாசலில் வைரவன் அவளை முதன்முறையாக, அவள் தொடைமேல் தொட்டு அழுத்தினபோது அவள் தசைகள் இறுகின. அந்தக் கையை அகற்றினாள்.

"ஏன் அனிதா?"

"அப்புறம்..." என்றாள். கதவைத் திறக்கும்போது அவள் மார்பில் வேண்டுமென்றே தீற்றினான்.

அந்த தினம் வந்தது. அனிதாவை சீதள் பியூட்டி பார்லருக்கு அழைத்துச் சென்றாள். ஒரு சைனாக்காரி அனிதாவின் முகத்தைப் பாத்திரம் போல் அலம்பி, புருவத்தை ட்வீஸரால் வலிக்க வலிக்கத் திருத்தி வில்லாக்கி, முகத்தில் பூனை முடியெல்லாம் நீக்கி, கைகால் நகத்துக்கெல்லாம் சாயம் பூசி, அவள் தலைமுடியைப் பற்றிப் பலவிதமாகச் சர்ச்சித்துவிட்டு, கடைசியில் அதை ஒரு மாதிரி சின்னச் சின்னத் திரிகளாகத் திருகி, வளையம் வளையமாக்கி.. முடிவில் கண்ணாடியில் அனிதா பார்த்துக் கொண்ட போது பிரமித்துப் போனாள். பக்கத்திலிருந்து 'ஃபெமினா' வாசித்துக் கொண்டிருந்த மது, 'வாவ்... யூ லுக் க்ரேட்..." என்றாள்.

"நானா இது?" என்றாள் அனிதா. அவள் முகத்தின் அடையாளமே மாறி விட்டிருந்தது. இந்தச் சாக்கில் சீதளும், மதுவும் ரொம்ப சிநேகமாகி விட்டார்கள்.

"நீ ஸிட்னி ஷெல்ட்டன் படிப்பாயா? ஜாக்கி காலின்ஸ் உண்டா?" என்றெல்லாம் பேசிக்கொண்டு அவர்களும் அலங்காரம் பண்ணிக்கொண்டார்கள்.

அப்பா, அம்மா மற்ற உறவுக்காரர்கள் அனைவருக்கும் வேன் அனுப்பியிருந்தார்கள். அவர்கள் முன்னாலேயே சாந்தோம் வீட்டுக்குப் போய்விட்டார்கள். தெரு திரும்பி ஒரு கிலோ மீட்டர் இருக்கும்போதே, கார்கள் வரிசையாகக் காத்திருந்தன. உள்ளே வாசலிலிருந்தே வீடியோ எடுத்தார்கள். சாயங் காலமே வண்ண விளக்குகள் எரிந்து கொண் டிருந்தன.

"அனிதா... யு ஆர் லேட்..." என்று வைரவன், லேசான சில்க் போன்ற துணியில், யானைத் தந்த வெள்ளை நிறத்தில் ஸூட் அணிந்திருந்தான்.

யார் யாரோ, யார் யாருடனோ பேசிக் கொண்டிருக்க அனிதா நுழைந்ததும் மௌனமாகிவிட்டது!

"இவங்கள்லாம் க்ளோஸ் பிஸினஸ் அசோஸியேட்ஸ்.. இவங்களை ஒவ்வொருத்தரா அறிமுகப்படுத்தி வைக்கவேண்டியது கட்டாயம்..."

[அனிதா வருவாள்...]

# பாப்பா முரசு சிறுகதை

# பீர்பாலின் பேச்சு



அக்பர் சக்கரவர்த்தி மிகுந்த அறிவாளி. அவருக்கு அறிவில் சிறந்தவர்களை மிகவும் பிடிக்கும். அவர்களுக்கு பரிசுப் பொருட்கள் கொடுத்து மிகவும் கௌரவிப்பார். ஆனால், அவருக்கு அவ்வப் போது பல சந்தேகங்கள் வரும். அதையெல்லாம் அவ்வப்போது சரியாக தீர்த்து வைக்க வேண்டும். அப்படித் தீர்த்து வைப்பவர்களுக்கு பொன்னும், பொருளும் கொடுத்து கௌரவிப்பார்.

அக்பர் சக்கரவர்த்தியின் சந்தேகங்களை தீர்ப்பதில் சிறந்தவர் பீர்பால் ஒருவர்தான்.

ஒரு நாள் நன்கு உறங்கிக் கொண்டிருந்த அக்பர் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் தன்னுடைய வாயில் இருந்த பற்கள் எல்லாம் கொட்டிப் போய் பொக்கை வாயுடன் இருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டு கண் விழித்தார். பிறகு தன் முகத்தை கண்ணாடியில் பார்த்து பற்களை தடவிப் பார்த்துக் கொண்ட பிறகே தாம் கண்டது கனவு என்பது புரிந்தது.

இந்த கனவிற்கு என்ன அர்த்தம்? என்று யோசித்து யோசித்துப் பார்த்தார். ஒன்றும் புரியவில்லை. இதன் அர்த்தம் தெரியவில்லை என்றால் மண்டையே உடைந்துவிடும் போல் இருந்தது. மறுநாள், நாட்டில் இருந்த பெரிய ஜோதிடர்கள் அனைவரையும் வரவழைத்து கனவின் பொருள் என்ன என்று கேட்டார்?

அதற்கு ஜோதிடர்கள் அனைவரும் "அரசே! தங்களது நெருங்கிய உறவினர்கள் அனைவரும் இறந்து விடுவர் என்பதே இதன் பொருள்" என்று கூறினர்.

அரசருக்கு மிகவும் கவலையாகிவிட்டது. எனவே ஜோதிடர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் துரத்தினார்.

அப்போதுதான் பீர்பால் அரசவைக்குள் நுழைந்தார். உடனே பீர்பாலிடம் தன் கனவைச் சொல்லி அதன் அர்த்தத்தைக் கேட்டார்.


அதற்கு பீர்பால், "அரசே! தாங்கள் குடுகுடு கிழவரான போதும் சக்கரவர்த்தியாகவே நீண்ட ஆயுசுடன் சீரும், சிறப்புமாக வாழ்வீர்கள் என்பதே அர்த்தம். இதில் கவலைப்பட ஒன்றும் இல்லை" என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்துபோன அரசர், பீர்பாலுக்கு பொன்னும், பொருளும் கொடுத்து கௌரவித்தார்.

குழந்தைகளே! இதற்குதான் எப்போதும் இன்சொல் பேசுங்கள் என்பது. அதாவது சோதிடர்களின் கருத்தையே நாசுக்காக கூறிய பீர்பால் பொன்னும், பொருளும் பரிசாகப் பெற்றார். நீங்களும் யாருடைய மனமும் புண்படாதபடி நல்லதையே பேசுங்கள். நல்லதே கிடைக்கும்.

# பாப்பா முரசு






இந்தக் குட்டிப் பையன் எந்த வழியால் கீழே இருக்கும் இனிப்புக்களை எடுத்துச் சாப்பிட முடியும்?

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.12.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **422**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 420

pG }E p˜ :
சி. தக்ஷாயினி,
சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை.

| | |
|---|---|
| சி. விசித்ரா,<br>அப்பத்தளை த.ம.க. பண்டாரவளை. | எஸ். லங்கீர்த்தன்,<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழு.-04. |
| இ. றுமைஸா,<br>அல்-அக்ஸா ம.வி., நட்பிட்டிமுனை, கலமுனை. | ஏ.விஜயதாஸ்,<br>ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருமலை. |
| வ. திருவானந்தராசா,<br>தேற்றாத்தீவு மகா வித்., மட்டக்களப்பு. | எம்.அ.ஃப்ஸல் முபாரக்<br>எலெக்ஸோ சர்வதேசக் கல்லூரி, கொழு-10. |
| சா. ஸ்டீபன்ராஜ்,<br>முகத்துவாரம் இந்துக் கல்லூரி, கொழும்பு-15. | த. ஜெயசுதன்,<br>புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| ஏ.பீ. இன்திஜா,<br>நாங்கள்ள முஸ்லிம் ம.வித்., துல்ஹிரிய. | ரி. காயத்திரி,<br>பிங்கராவ திமிழ் வித்., நமுனுகுல. |

# இலங்கை

இலங்கையின் தேசிய மரம்- நாகமரம் (மெசுவா நாக சூரியம்)

இலங்கையின் தேசிய மலர்- நீலோற்பலம் (நீல அல்லி மலர்)

இலங்கையின் தேசிய பறவை- காட்டுக்கோழி

இலங்கையின் தேசிய மிருகம்- யானை.

இலங்கையின் தேசிய விளையாட்டு- கரப்பந்தாட்டம்.

இலங்கையின் உயரமான மலை- சிவனொளி பாதமலை, உயரம் 2524 மீற்றர்

இலங்கையின் உயரமான நீர் வீழ்ச்சி- வளவை கங்கையில் அமைந்துள்ள பம்பரகந்தை இதன் உயரம் 240 மீற்றர்

இலங்கையின் உயரமான குன்று- கொக்கல

இலங்கையின் மிக நீளமான ஆறு- மகாவலிகங்கை, நீளம் 335 கிலோ மீற்றர்

இலங்கையின் நீளமான பாலம்- வேலனை புங்குடுதீவுப் பாலம் 3 மைல்கள்

இலங்கையின் பெரிய குளம் அல்லது ஏரி- சேனநாயக்க சமுத்திரம்.

இலங்கையின் பரப்பளவு- 65610 சதுர கிலோ மீற்றர்.

இலங்கையின் நிலப்பரப்பில் கூடிய மாவட்டம்- அநுராதபுரம் 71807 ச.கி.மீ.

இலங்கையின் நிலப்பரப்பில் குறைந்த மாவட்டம்- கொழும்பு 700 ச.கி.மீ.

தொகுப்பு:- ரத்னா.

# நம்பினால் நம்புங்கள்



← ஃபீரிஜ் வொன்ஹோல்பேர்க் (1818-1845) என்ற பெண் தனது 8வது வயதில் ஜெர்மனியில் உள்ள மியூனிச் நகரில் இருந்து இத்தாலிய நகரமான ரோமிற்கு ஆல்ப்ஸ் மலை வழியாக 800 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்றாள். 8 வயதுச் சிறுமி என்பதால் துணைக்கு ஒருவரும் இந்தப் பனிபடர்ந்த மலைப்பாதையில் இவருடன் சென்றார்.

→ ரோமானியாவில் உள்ள பழங்குடி இனத்தவர்கள் தங்கள் கரடிகளை முதுகு வலியைப் போக்கும் விதத்தில் மசாஜ் செய்து கொள்ளப் பழக்கப்படுத்தி உள்ளனர். எனவே தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு இந்தக் கரடிகளே முதுகில் மசாஜ் செய்து முதுகுவலியில் இருந்து நிவாரணம் அளித்துவிடுகின்றன.



↓ ரௌஹெட் என்ற ஃபிரெஞ்சுக்காரர் தன் குதிரையை வாயில் பிரஷ் வைத்துக்கொண்டு அதனால் தன் பெயரைப் பலகையில் எழுதும் விதத்தைப் பழக்கியிருந்தார். அந்தக் குதிரையும் தன் எஜமானரின் பெயரை ஆங்கிலத்தில் அழகாக எழுதியது.



↑ முதலாம் உலகப் போரின்போது பெல்ஜியம் நாட்டு இராணுவம் இயந்திரத் துப்பாக்கிகளை வண்டிகளில் பூட்டிக்கொண்டு போர்க்களத்தில் பயன்படுத்தினர். இந்தத் துப்பாக்கி பூட்டிய வண்டிகளை இழுத்துச் சென்றவை எது தெரியுமா? நாய்கள்.



# நிழலும் நிஜமும்



அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா

கனடாவில் நவீனமயமான மண்டபம் ஒன்றில் திருமணம் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கண்ணைப் பறிக்கும் நிறங்களில் விதவிதமான பலூன்கள் ஐதரசன் காற்றடைக்கப்பட்டதில் நிலைக்குத்தாக எழுந்து நின்று மேசைகளை அலங்கரித்தன. குழந்தைகள் சிலர் அந்த பலூன்களை எடுத்துத் தரும்படி தாய்மாருடன் அடம்பிடித்துக் கொண்டிருந்தார்கள். சிறு பெண்களும் பையன்களும் புது உடைகள் மேனியை அலங்கரிக்க நுனிநாக்கில் ஆங்கிலத்தைப் பிளந்து கட்டிக் கொண்டிருந்தார்கள். முதியவர்கள் தங்களுக்கு ஏற்ற வயதானவர்களுடன் இருந்து இன்பத் தமிழில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். வீடுகளில் ஆங்கிலமே ஆதிக்க மொழியாக இருப்பதால் முழி பிதுங்கியிருந்த அந்த முதியவர்கள் சிறையிலிருந்து விடுபட்ட பறவைகள் போல் சுதந்திரமாக தங்கள் மொழி பேசிக் குதூகலித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது தான் உள்ளே நுழைந்த சரஸ்வதி மூக்குக்கண்ணாடியைச் சரி செய்து கொண்டு நீண்ட காலத் தோழி சிவகாமியைத் தேடி கண்களை மண்டபம் முழுவதும் ஓட விட்டாள். தூரத்தில் யாருடனோ சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்த சிவகாமி சரஸ்வதியைக் கண்டதும் முகம் மலர ஓடி வந்தாள்.

"என்ன சரஸ்வதி அக்கா! அஞ்சாறு மாசம் முந்தி அல்வாய் ஒன்று கூடலுக்கை காணேக்கை வயசு போன மாதிரித் தலையும் நரைச்சு மெலிஞ்சிருந்தியள். இப்ப பாத்தால் பத்து வயசு குறைஞ்ச மாதிரிக் கிடக்கு." ஆச்சரியமாக வாயைப் பிளந்தாள் சிவகாமி.

"உனக்கு என்னைக் கண்டால் பகிடி தான். உவன் பேரப்பொடிச்சி தான் தனக்கு மரியாதை கேடாக் கிடக்கெண்டு தலைக்கு டை பூசி விட்டவன். என்னடி மோனை செய்யிறது? ஊருக்குத் தக்கபடி தானே நாங்களும் இருக்கோணும். அது சரி பிள்ளை, உண்மையாவே வயசு குறைஞ்ச மாதிரித் தெரியிறனே?" சேலை நுனியைக் கையால் திருகியபடி நாணினாள் சரஸ்வதி.

"சத்தியமாச் சொல்லுறனக்கா. உங்களுக்கு அம்பத்தைஞ்சு வயசெண்டால் ஆர் நம்புறது அது சரியக்கா, கடைசியா வந்த 'சித்தி' நாடகம் பாத்திட்டன் எண்டு போனிலை நீங்கள் சொன்னதிலை இருந்து மிச்சக் கதையைக் கேக்க வேணுமெண்டு நெஞ்சு கிடந்து எப்பிடித் துடிக்குது தெரியுமே? அவள் ராதிகா, சாரதா வேசத்துக்கு என்னமாய் நடிக்கிறாள்.. அடாடா... அவளின்ரை பார்வையும்... பேச்சும்... தைரியமும். அது சரியக்கா, அந்தக் காவேரியை இப்பவும் மாமியார்க்காரி கொடுமைப் படுத்திறாளே?" என்று முகம் பரிதாபத்தில் சோர்ந்து போக விசாரித்தாள் சிவகாமி.

"வா பிள்ளை. உதிலை ஒதுக்குப் புறமா இருந்து ஆறுதலாக் கதைபபம். முந்தியெண்டால் 'குலவிளக்கு' நாடகத்திலை அந்த மாமியார் அவள் தாமரைப் பொடிச்சியைப் படுத்தின பாட்டைப் பார்த்து நான் அழுத அழுகையிலை ஒரு குளமே நிரம்பும். ஏன்தான் உப்பிடித் தங்கமான மருமகள்மாரை கொடுமைப் படுத்துகிறார்களோ? எனக்கும் வந்து வாச்சிருக்குதே சனியன்" மருமகளெண்ட பேரிலை ஒரு ராட்சசி." சரஸ்வதிக்கு தனது மருமகளை நினைத்தவுடன் சுருதிமாறிக் குரல் சூடாகியது.

"அட, எனக்குத் தான் ஒரு சோம்பேறி வந்ததெண்டால் உங்களுக்கும் அதே கதிதானாக்கா? ம்... எங்கடை தலை எழுத்து! என்ரை மருமகளிருக்கிறாளே. அடேயப்பா.. குனிஞ்சு ஒரு துரும்பு எடுக்க மாட்டாள். தாய், தகப்பன் கண்டறியாத ஒரு பழக்கம் பழக்கிக் கிடக்கு. அந்தக் காலத்திலை நாங்கள் மாமியாரெண்டால் எப்பிடிக் கதிகலங்கிக் கொண்டு வேலை செய்வமக்கா. இதுகளுக்கு ஒரு பயம், வேண்டாம்... மரியாதையாவது... ம்ஹூம்" என்று தோள்பட்டையை மோவாயில் இடித்தாள் சிவகாமி.

"அதையேன் பிள்ளை கேக்கிறாய். என்ரை மருமோளிருக்கிறாளே அவள் ஏதோ தான் ஒருத்தி தான் உலகத்திலை வேலைக்குப் போறவள் மாதிரியும் மற்றவை காலுக்கு மேலை கால் போட்டுக் கொண்டு வீட்டிலை படுத்துக் கிடக்கிற மாதிரியும் ஒரே அட்டகாசம் அடிக்கடி தலைக்கை இடிக்குது, நாரீக்கை பிடிக்கு தெண்டிறதும், இவன் பொடியன் தேத்தண்ணியை தானே வைச்சுக் கொண்டு போய் பயபக்தியாக் குடுக்கிறதும்... அந்தக் கூத்தை ஏண்டிபிள்ளை கேக்கிறாய். எனக்குப் பத்திக் கொண்டு வாறது. சனி, ஞாயிறெண்டால் மகாராணியார் பத்துப் பதினொரு மணி மட்டுமெல்லே இழுத்து மூடிக் கொண்டு கிடக்கிறாள். பொடியனை என்னடா கண்ராவி இதெண்டு கேட்டால் எட்டு மணித்தியாலமும் நிண்ட நிலையிலை வேலை செய்யிறவள். ரெண்டு நாளைக்கு படுத்தால் என்ன தப்பெண்டு அவளுக்கு வக்காலத்து வாங்குறான். முந்தி எங்கடை மனுசன்மார் எண்டால் தாய்மாரோடை நிண்டு கொண்டு எங்களைப் பாடாய்ப் டுத்துவினம். இப்ப கலிகாலந்தான்" சரஸ்வதி பெருமூச்சு விட்டாள்.

"இந்தக் காலத்துப் பொடியள் உப்பிடித் தானக்கா. கலியாணம் கட்டுமட்டும் அம்மா, அம்மா எண்டு சீலையைப் பிடிச்சுக் கொண்டு சுத்துவாங்கள். மனுசிமார் வந்தவுடனை காரிலைகூட எங்களைப் பின்சீற்றிலை தள்ளிப் போட்டு அவளுகளைத் தானே பக்கத்திலை வைச்சுக் கொண்டு திரியிறாங்கள். பிறகு அவர்கள் எப்படி எங்களை மதிக்கிறது? அது சரியக்கா. எங்கடை மருமக்களின்ரை கண்றாவியைக் கதைச்சால் அது இப்போதைக்கு முடியிற கதையில்லை. எங்கடை தலை எழுத்தை அந்த ஆண்டவனாலேயும் மாத்தேலாது. அந்த நாடகத்திலை வாற தாமரை மாதிரி காவேரி மாதிரி மருமக்களை ஆண்டவன் எங்களுக்கு தரேல்லை. ம்.. இப்ப 'சித்தி' எப்பிடியக்கா போகுது... ஏதும் முக்கிய திருப்பம் இருக்கே? பிறகு தாலி கட்டி முடிஞ்சால் நேரம் வராது." பரபரத்தாள் சிவகாமி.

சரஸ்வதி தேவையான நேரங்களில் முகபாவத்தை மாற்றி குரலை ஏற்றி இறக்கி சித்தி நாடகத்தின் ஒலிபரப்பை சுவாரஸ்யமாகச் சொல்லிக் கொண்டிருக்க, அந்தக் கதையில் தானும் ஒரு கதாபாத்திரமாக ஒன்றிப் போயிருந்த சிவகாமியின் கண்களிலிருந்து ஆறாகப் பெருகிய கண்ணீர் கன்னத்தில் வடிந்து பட்டுச் சீலையின் மார்புப் பகுதியினை நனைத்துக் கொண்டிருந்தது.

---

# 'இராசிக்கத் தெரிந்தவர்கள்'

'எனது இவருக்கு விசர்... என்னுடைய அழகையே இரசிக்கத் தெரியாதவர்.. எமது மகளுக்கு பொருத்தமான மாப்பிள்ளை எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி இவருக்கு எங்கே புரியப் போகின்றது...'

"என்னப்பா... நான் சொல்லுவது கேட்குதா..? காலையில் மங்களமக்கா வீட்டுக்குப் போயிருந்தன்... அவா சொல்லுகிறா தனது மகளை நாலைந்து இடத்தாலை கேட்டு கரைச்சல் பண்ணுறாங்களாம்."

நான் கூறவும் எனது இவர் பலமாக சிரித்துக் கொண்டார்.

"அதிலை என்ன பெருமை இருக்குது. நாலு இடத்தாலை கேட்டு வருகிற அளவுக்கு அந்த பிள்ளை தன்னை... தனது அழகை பிரபல்யப்படுத்தி இருக்குது என்றுதான் எடுக்க வேணும்...!"

'இவருக்கு பெண்பிள்ளைகள் என்றால் கட்டுமட்டாக இருக்கவேணும்.' அதற்காக பிள்ளைகளின் அழகை மூடி மறைத்து வைத்திருக்கக்கூடிய காலமா இது? எப்படியிருந்தாலும் நேர காலத்தோடு சரியான வரனைப் பார்த்து கல்யாணத்தை செய்து வைத்துவிட்டால் பாரம் நீங்கிப் போகும்.

காலையிலிருந்தே இந்த குஞ்சக்காகம் பறந்தடிச்சு கரைஞ்சு கொண்டிருக்குது. நீண்ட நாட்களாக ஒருவருடைய கடிதமும் வரவில்லை தான்.

இவருடைய சகோதரி ஒருத்தி... மாலதி மச்சாள். அவாவுக்கு ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள். விஜயன் மூத்தவன். உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறான். தொழில்தான் சரியாக அமையவில்லை. தோட்டம் துரவு என்று தகப்பனுக்கு உதவியாக இருப்பதோடு 'எச்.என்.டி.ஏ' 'பார்ட் ரைம்' ஆக செய்து கொண்டு இருக்கிறான். குணசாலி. இருந்தாலும் என்ன... ஒரு இரசிப்புத் தன்மை இல்லாத ஆட்கள். ஏதாவது ஒரு சாட்டுப் போக்கைச் சொல்லி இந்த இடத்தை தட்டிக் கழித்து விட வேண்டும்...

இவருக்கும் இவருடைய ஆட்களுக்கும் பெண்கள் என்றால் வெறுமனே சமைத்துப் போடவும்... உடு துணிகளைத் துவைத்துப் போடவும்... நேரம் கிடைக்கின்ற நேரம் இரண்டு பிள்ளைகளை பெற்று போடவும் தான் ஆட்கள் என்ற நினைப்பு! ஒரு இரசனை இருக்கா... யாரிடமும் சொல்லவும் கூட முடியாது... என்னுடைய அழகை இவர் இரசித்ததைக் காட்டிலும் மற்ற மற்ற ஆண்கள் மெச்சி போற்றினதுதான் அதிகம். அவங்களுக்கு இரசிக்கிற தன்மை இருக்குது... மரக்கட்டை போல் இருக்கிற இவரும் ஆண்பிள்ளையா?

என்ன விதத்திலாயிலும் என்னுடைய அண்ணன் மகன் சங்கரைத்தான் எனது மகளுக்கு சேர்த்து வைக்க வேணும். அவன் 'கம்பஸ்' முடித்து வந்திருக்கிறான். கெட்டிக்காரன். எனது மகளினுடைய வடிவுக்கு வசமாகக் கூடியவன். நாளைக்கு நல்ல தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக் கூடிய தகமைகளைக் கொண்டவன்.

எனது இவரும் மகள் வித்யாவும் புறப்பட்டு சென்ற சிறிது நேரத்திலேயே இவருடைய தங்கை மாலதி மச்சாள் வந்தாள். அவா தமையன் இல்லாத நேரம் வந்ததும் எனக்கு வசதியாக போய்விட்டது.

"என்னுடைய மகள் சரியான ஊதாரி பாருங்கோ... முற்கோபக்காரி... எவருடனும் ஒத்துப் போக மாட்டாள். மச்சாள்... உங்களுக்கென்றபடியால் சொல்லுகிறன். இனி உங்களுடைய விருப்பம். பிறகு எங்களைக் குறை சொல்லி வரக்கூடாது."

பெண்ணைப் பெற்ற தாய் நானே எனது மகளைப்பற்றி தூற்றி கூறும் போது, பெண் எடுக்க வந்தவர்கள் அவளை தலையில் தூக்கி வைத்து கொண்டாட அவையளுக்கு என்ன விசரே... மாலதி மச்சாள் மெல்ல நழுவினாள்.

மச்சாள் வந்து போன பின்பும் இந்த குஞ்சுகாகம் ஓய்ந்து போன பாடில்லை... 'ச்சீ... அங்காலை போய்த் தொலை' என்றால் எங்கை கேட்குது.

எனது மகள் வித்யா... 'நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை' என்பார்களே. அச்சொட்டு! செலவு விசயத்திலை சரியான சிக்கனம். பெண்களுக்கு இதற்கு மேலும் வேண்டாம் என்று சொல்லக் கூடிய அளவினதான தோற்றம்... பொறுமை. எவரோடும் ஒத்துப் போகின்ற தன்மை. இவை அனைத்துக்கும் மேலாக 'கம்பஸில்' இடம் கிடைத்திருக்கிறது.



மதியத்திற்கு முன்பாக இவர் வந்து விட்டார். தங்கை வந்து போனமை பற்றி கூறினேன்... 'ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் பாரங்கள் பொறுப்புக்கள்தான் அதிகம்! எங்களுடைய மகளுக்கு வயது இருக்கு. 'கம்பஸ்' கிடைத்திருக்கிறபடியால் அவள் படிக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறாள். நாங்கள் குழப்பியதாக இருக்கக் கூடாது."

நான் சொல்வது இவருக்கு எந்தக் காலத்தில்தான் விளங்கியது... பேசாமல் இருந்துவிட்டார். அப்படி இருக்காவிட்டால் கூட சத்தமிட்டு அதட்டி கூறினேனென்றால் ஒதுங்கி கொள்வார்.

நான் ஏதோ பிழையான காரியங்களா செய்கிறேன். எல்லாமே எங்களுடைய குடும்ப நன்மைக்காகத்தானே.

கணனி வகுப்பு முடிந்து வித்யா வீடு வந்தாள்.

"மாலதி மாமி வீடு வந்தவா பிள்ளை. தங்களுடைய மகனுக்கு பல இடங்களாலையும் கேட்டு வருகினமாம். உன்னுடைய அப்பாவுக்கு நீ படித்து பெரியவளாக ஆக வேண்டுமென்று விருப்பம். எந்த தாய் தகப்பனுக்கு இல்லாத ஆசை."

வித்யாவுக்கு தெரியும்... என்னுடன் கதைத்து சரிக்கட்ட முடியாது என்று மச்சான் விஜயனைப்பற்றி நல்ல அபிப்பிராயம் அவளுக்கு இருக்கின்றதென்பதை அவளுடைய சில கதை பேச்சுக்களில் ஊகிக்கக் கூடியதாக இருந்திருக்கு. விஜயன் உண்மையிலேயே நல்ல குணசாலி. ஒழுங்காக குடும்பம் நடாத்தக் கூடியவன். ஆனால் அழகை ஆராதிக்கத் தெரியாத ஜென்மங்கள்.

எனது மகளை எவன் ஒருவன் கை கழுவி விட்டுத்தான் தொட வேண்டும் என்று நினைக்கின்றானோ அவன்தான் அவளுக்கு மாப்பிள்ளையாக வர தகுதி படைத்தவன்!

இருந்தாலும் சில சமயங்களில் விஜயனுடைய சில தகுதிகள் வித்யாவை எனது அண்ணன் மகன் சங்கருக்கு விவாகம் செய்து வைக்க தடையாக வந்து விடுமோ என்று நான் தயங்குவதுண்டு.

இந்த நாளைய பெண்பிள்ளைகளையும் முற்றிலுமாக நம்பக் கூடாது. விஜயனை வித்யா சந்தித்து பேசிக் கதைக்க... முடிவெடுக்க... நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அது மாத்திரமல்லாமல் வித்யாவுக்கு தந்தை மீதும் அவர் வழி உறவினர் மீதும் அளவு மீறிய அன்பும் பாசமும் உண்டு. தந்தை சொல்வதை சில சமயம் கேட்டும் விடுவாள்!

எதற்கும் ஒருக்கால் மதிய தூக்கத்தை விட்டு விட்டு எட்டி ஒரு நடை நடந்து அண்ணை வீட்டுக்குப் போய் நிலைமையை உறுதிப்படுத்தி கொள்ள வேணும்.

நான் போன நேரம் நல்ல சந்தர்ப்பமாக போய்விட்டது. அண்ணை மச்சாள் மருமகன் மூவருமே வீட்டில் நின்றார்கள்.

"மாமி வருகின்றா" என்று கூறி முதலில் சங்கர்தான் ஆரவாரம் செய்தான்.

"என்ன மருமகனை அங்காலிப் பக்கம் காணேல்லை?" நான் வினாவவும் சங்கர் சிரித்தபடி தலையை தாழ்த்திக் கொண்டான். மச்சாள்தான் கதையைத் தொடர்ந்தாள்.

"தம்பி இறுதியாண்டு பரீட்சை சித்தியெய்தியதோடு அரச திணைக்களமொன்றில் அபிவிருத்தி உதவியாளராக வேலையும் கிடைத்திருக்கு. தம்பிக்கும் இருபத்தியாறு வயதாகுது. பொறுப்புக்களும் இல்லை. அதைப் பற்றித்தான் இப்போ கதைத்துக் கொண்டிருந்தனாங்கள்."

மச்சாளைத் தொடர்ந்து அண்ணை கூறினார், "தங்கச்சி... நீ தனித்து முடிவு எடுக்காதே. மச்சானோடும் ஆலோசி. அவரும் விரும்பினால்தான் கலியாணம். பிரச்சனைகளை விலைக்கு வாங்கக் கூடாது."

மருமகனின் முறை வந்ததும் அவரும் கூறினார். "மாமி... வித்யாவுக்கு 'கம்பஸ்' கிடைத்திருப்பதாக கேள்விப்பட்டேன். அவள் கெட்டிக்காரி என்பதால்தான் எனக்கு அவளில் விருப்பம். ஆனால் பெண்கள் 'கம்பஸ்' போய் என்ன செய்யப் போகின்றார்கள். ஒரு கதைக்கு சொல்லுகிறன்... வித்யா அல்லாமல் நான் வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும் 'கம்பஸ்' அனுமதி கிடைத்தும் 'கம்பஸுக்கு' போகாத திறமைசாலியான பெண்ணைத்தான் விவாகம் செய்வேன்."

சங்கர் சொல்லியதிலும் பிழை இல்லை.

திருமலை வீ.என். சந்திரகாந்தி

வித்யா இன்னமும் நான்கு வருடங்கள் படிப்பை மேற்கொள்ள வேண்டுமென்றால் சங்கருக்கும் முப்பது வயதாகிப் போய்விடும். வயது போன நேரத்தில் என்ன கலியாணம். படித்து... உத்தியோகம் எடுக்கும் வரை பொறுத்திருந்த ஒரு ஆண்பிள்ளை வித்யா போன்ற அழகும் இளமையும் மிக்க ஒரு பெண்ணை உடனேயே சேர எண்ணுவதில் தப்பு என்ன? நான் பதிலிறுத்தேன்..

"சங்கர் சொல்லுறதும் சரிதானே அண்ணை. இந்த விசயத்திலை என்னுடைய அவர் சம்மதித்ததாகவே எடுத்துக் கொள்ளுங்கோ. மற்ற மற்ற கருமங்களையெல்லாம் நான் பார்த்துக் கொள்கின்றேன்."

மாலையில் இவரும் வித்யாவும் இருந்த போதே விசயத்தை விளக்கினேன். இவர் கூறினார். "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே தேடிவரும் என்று முன்னோர் கூறிவைத்தது பகிடிக்கா? மங்களமக்காவின் பெடிச்சியை நாலைந்து இடத்தால் கேட்டு வருவதாக கூறினாயே... அதில் பெடிச்சியின் கட்டுப் பாடில்லாத போக்குத்தான் தெரியுது. ஆனால் சொந்த பந்தத்துக்குள்ளேயே ஒரு பெண்ணை எடுத்துவிடவேண்டும் என்று போட்டி போடுவது அவளது அடக்கம் காரணமானது."

வித்யா தாமரை இலை தண்ணீர் போன்ற சுபாவம் கொண்டவள். எந்த விசயத்திலும்... எந்த இக்கட்டான நிலைமையிலும் தனது விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்ட மாட்டாள். "அம்மா... எனக்கு 'கிளாஸுக்கு' நேரமாகிவிட்டது; நான் போகிறேன்" என்று கூறி புறப்பட்டு விட்டாள்.

மாலையில் இவரும் வெளியே சென்று விட்ட பின்னர் பெண்பிள்ளையொருத்தி சுமாரான உயரம்.. மா நிறம், எமது வீடு தேடி வந்தாள்.

"நான் 'கம்பஸில்' உங்கள் மருமகன் சங்கரோடு கல்வி பயின்றனான். நான் முதலாம் ஆண்டில் இணைந்தபோது அவர் இறுதி வருடத்தில் இருந்தார். அவர் என்னை உயிருக்குயிராய் காதலிப்பதாக நம்பி அதிக அளவு இடம் கொடுத்து சுதந்திரத்துடன் பழகினேன். அவர் இறுதியாண்டுப் பரீட்சை முடித்து பட்டமளிப்பு விழாவையும் முடித்து சென்ற பின்னர்தான் அவரால் பாதிக்கப்பட்ட முன்னைய வருடங்களில் படிக்கும் மாணவிகள் பல உண்மைகளை கூறியதுடன் உங்கள் மகளுக்கும் அவருக்கும் விவாகம் நடக்க இருப்பதையும் தெரிவித்தார்கள்."

காலை முதல் கரைந்தபடி என்னைச் சுற்றி சுற்றி வந்த அந்த குஞ்சுக் காகம் காலிடுக்கில் ஏதோ ஒரு இரையை வைத்து சுவைத்தபடி தன்னை மறந்த சாவதான நிலையில் மூழ்கியிருந்தது.

மருமகன் நன்றாகத்தான் 'கம்பஸ்' வாழ்க்கையை சுவைத்திருக்கிறார். அந்த அனுபவம் தந்த பாடம் காரணமாகவே 'கம்பஸ்' அனுமதிபெற்ற எனது மகளை அங்கு செல்லவிடாது அவர் தடுக்கிறார்...

எனது பாசமிகு கணவரும் அன்புமிகு மருமகன் விஜயனும் அழகை இரசிக்கத் தெரியாதவர்கள் என்று உறுதியாக நம்பியிருந்த நான்...

தூயவளான எனது மகளை துரோகி ஒருவனிடம் மாட்டிவிட இருந்த அவலத்தை எண்ணி ஏங்கி சிலையாக நிற்கிறேன்!

**லீ**மா ரிவால்வரின் குறியை முரளியிடமிருந்து மாற்றாமல் மெதுவாய் நகர்ந்து ஓரமாய் இருந்த ஸ்ட்ரெச்சரை அவனிடம் தள்ளினாள்.

ஸ்ட்ரெச்சரில் முரளியைக் கிடத்தி-காரில் ஏறும்வரை அவனைக் கூடவே தள்ளிப் போகத் திட்டமிட்டுள்ளாள் என்பது இன்ஸ்பெக்டர்க்கு புரிந்தது.

ஸ்ட்ரெச்சர் கிறீச்சிட்டுக் கொண்டு முரளி படுத்திருக்கும் மேஜையை நோக்கிச் செல்ல

கான்ஸ்டபிள் ஒருவர் இன்ஸ்பெக்டர் காதருகே கிசுகிசுத்தார்.

"ஸார்... இப்ப அந்தம்மா மேல பாய்ஞ்சு அட்டாக் பண்ணினா பிடிச்சிடலாம்..."

அதைக் கேட்ட காயத்ரிக்கு பயத்தில் உடம்பு சில்லிட்டு போக- அந்த இன்ஸ்பெக்டர் லீமாவின் மேல் பாய்வது போலவும்- லீமா ஆத்திரத்தில் முரளியைச் சுடுவது போலவும் ஒரு காட்சி அவளுக்குள் சட்டென விரிந்தது.

"வே... வேண்டாம்! என்னோட அண்ணன் சாகக் கூடாது."

உணர்ச்சிவசப்பட்டுக் கத்திக் கொண்டே முரளியின் மேல் பாய்ந்தாள் காயத்ரி.

# ஓடாதே! ஒளியாதே!



லீமா திடுக்கிட்டாள்.

அவள் விரல் அவசரமாய் ட்ரிக்கரைத் தட்டி விட்டது.

காயத்ரி முரளியை முழுவதுமாய் அணைத்துப் போர்த்த-தோட்டா காயத்ரியின் முதுகை ரத்தப் பொத்தலாக்கியது.

திகைத்துப் போய் நின்ற லீமாவை உடனே சூழ்ந்தது போலீஸ் யூனிஃபார்ம்கள்.

இன்ஸ்பெக்டர் கத்தினார்.

"கான்ஸ்டபிள்.. இந்தப் பொண்ணை உடனே ஆஸ்பிடல்க்குக் கூட்டிட்டுப் போக ஏற்பாடு பண்ணுங்க."

ரத்த வெள்ளத்தில் துடிக்கும் காயத்ரியை கான்ஸ்டபிள்கள் தூக்கினார்கள். பதட்டத்தோடு நிவாஸும் உதவினான்.

சந்திரமோகன் மெல்ல இன்ஸ்பெக்டரை நெருங்கினார்.

"இன்ஸ்பெக்டர், இந்த லீமா என்னோட மகளைப் பணயமா வெச்சு என்னைக் கடத்திட்டு வந்து..."

"எல்லாமே தெரியும் டாக்டர்! உங்க மக ஆர்த்தி தான் எங்களை இந்த பங்களாவுக்கு அழைச்சிட்டு வந்தா!"

"ஆர்த்தியா?"

"ஆமா! எலக்ட்ரிக்ஷாக் குடுத்து லீமாவோட ஆட்கள் கிட்டே இருந்து தப்பிச்சு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தாள் ஆர்த்தி. அது மட்டுமில்லை. பெத்த அப்பாவாவே இருந்தாலும், குற்றவாளி குற்றவாளிதான்னு உங்களையும் காட்டிக் கொடுத்திருக்கா..."

அதிர்ந்தார் சந்திரமோகன்.

"இ..ன்..ஸ்..பெ...க்டர்..!"

"அதிர்ச்சியா இருக்கா டாக்டர்? என்ன செய்யறது! சாமர்த்தியமா திட்டம் போட்டிங்க. ஆனா உங்களுக்கு ஆபத்து உங்க மக ஆர்த்தி ரூபத்தில் வந்திருக்கு. விளக்கமாவே சொல்றேன். லீமாவோட ஆட்கள் கிட்டேயிருந்து தப்பிக்க ஆர்த்தி பாத்ரூம் கெய்சரை கழட்டியிருக்கா! அந்த கெய்சர் கன்டெய்னர் சுலபமா கழண்டு வந்திருச்சு. காரணம், அது நீங்க அடிக்கடி கழட்டி மாட்டக்கூடியது! அந்த கன்டெயினர்க்கு பின்புறம் ஒரு ரகசிய அறை வெச்சிருக்கீங்க. தப்பிக்கும் முயற்சியில் அந்த ரகசிய அறையை ஆர்த்தி பார்க்க நேரிட்டது. அதற்குள் இருந்த டாலர் கரன்சிகள், சில ஒப்பந்தக் காகிதங்கள், ரகசிய ப்ராஜெக்ட்கள் இதெல்லாம் உங்களோட மறுப்பக்கத்தை ஆர்த்திக்குக் காட்டிருச்சு..."

ஒரு நிமிஷம் மூச்சு விட்ட இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். "போன மாசம் சான் பிரான்சிஸ்கோவுக்கு செமினார்க்காக நீங்க போனப்ப இந்த 'எலக்ட்ரோ ஐ' ப்ராஜெக்ட்டில் உங்களோட பங்கு வேணும்னு அந்நிய சக்திகள் உங்களை அணுகி இருக்காங்க. முதலில் நீங்க மறுத்தீங்க. இருந்தாலும் பல கோடி ரூபாய்கள் சம்பாதிக்கும் ஆசை உங்க உள் மனசில் இருந்தது. உங்க தயக்கத்துக்குக் காரணம், இந்திய அரசாங்கம் இன்னும் சில நாட்களில் உங்களுக்கு ஒரு விருது அளிச்சுக் கவுரவிக்கப் போகுது. உயர்ந்த விருது. அந்த கவுரவம் இந்த முயற்சியால தடைபடுமோன்னு தயங்கினீங்க. உங்க தயக்கத்தைப் புரிஞ்சிகிட்ட அவங்க ஒரு திட்டம் தீட்டித் தந்தாங்க. அதன்படி நீங்க கடத்தப்படறீங்க. உங்க மகளைப் பணயமா வெச்சு இந்தக் கடத்தல் இருக்கும். இந்தக் கடத்தல் ஒரு நாடகம் தான்ங்கிறது லீமா கோஷ்டிக்கே கூடத் தெரியாது. ஒருக்கால் நீங்க

## கிரைம் சக்கரவர்த்தி
## ராஜேஷ்குமார்

பயப்படற மாதிரி லீமா அசந்தர்ப்பமா பிடிபட்டாலும் உங்க பேர் கெடாது. லீமா கடத்திட்டு போய் கட்டாயப்படுத்தும் போது டாக்டர் என்ன செய்வார்... அவர் மேல எந்தத் தப்புமில்லை... இப்படித்தான் மத்தவங்க முடிவுக்கு வருவாங்க! அவங்க போட்டுக் குடுத்த இந்தத் திட்டம் உங்களுக்குப் பிடிச்சது. நீங்க சம்மதிச்சிங்க. ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போட்டிங்க. அட்வான்சா டாலர் கரன்சிகளை வாங்கினீங்க. ஆனா உங்களோட மோசமான விதி... அந்த ரகசிய சமாசாரங்கள் ஆர்த்தியின் கண்ணில் பட்டுடுச்சு. ஆர்த்தியின் புகாரின் பேரில் இந்த பங்களாவைக் கண்காணிச்சோம். நிறைய ஆயுதங்களோடு ஆட்கள் இருப்பது தெரிஞ்சது. நாங்களும்

## அசத்தல் தொடர் 12

முன்னேற்பாடா ஒரு படையோட வந்து பங்களாவை ஆக்ரமிச்சோம்."

"அ... ஆர்த்தி... எங்கே...?"

"இப்படி ஒரு ஹிப்போக்ரட் அப்பாவோட முகத்தில் விழிக்க நான் விரும்பலை. என்னோட அம்மா எப்பவோ செத்துப் போய்ட்டாங்க. அதைப் போல அப்பாவும் இல்லைன்னு நினைச்சுக்கறேன்னு சொல்லி வரலை."

கலங்கிப் போன முகத்தோடு இன்ஸ்பெக்டரைப் பார்த்தார் சந்திரமோகன். கான்ஸ்டபிள்கள் அவர் கைகளில் விலங்கு மாட்டினார்கள்.

**டா**க்டர் கவலையான முகத்தோடு இன்டென்சிவ் கேர் வார்டிலிருந்து வெளிப்பட்டார்.

இன்ஸ்பெக்டர், நிவாஸ், முரளி மூன்று பேரும் டாக்டரை சூழ்ந்தார்கள்.

"டாக்டர்..."

"முதுகைத் துளைச்ச குண்டு இருதயம் வரை ஆழமா போயிருக்கு. என்னாலான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு பார்த்துட்டேன். முடியலை. ஷி ஈஸ்கவுன்ட்டிங் ஹர் லாஸ்ட் மினிட்ஸ்! அண்ணனைப் பார்க்கணும்னு துடிக்கறா."

உள்ளே பாய்ந்தான் முரளி.

"காயத்ரி பலஹீனக் கண்களை சிரமத்துடன் விரித்தாள். உலர்ந்த உதடுகளைக் கஷ்டப்பட்டு அசைத்தாள்.

"அ... அண்ணா..."

"இப்படிப் பண்ணிட்டியேம்மா...?"

"எ.. எனக்காக எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிட்டீங்க... உங்களைக் காப்பாத்தின சந்தோஷம் போதும் எனக்கு..."

"இப்படி உன்னோட உயிரைக் குடுத்து என்னைக் காப்பாத்தணுமா?"

"நான் உயிரோடு இருந்தாலும் மறுபடி உங்களுக்குக் கஷ்டம்தான். உங்களைப் போல ஏழை அண்ணன்களுக்கு என்னைப் போல தங்கச்சிகள் தாங்க முடியாத சுமைதான்."

"கா...காயத்ரி.."

"அ... அண்ணா.. முப்பது வயசை நெருங்கிட்டு இருக்கிற எனக்கு இது நாள் வரை பல ஆசைகள் இருந்தது. நெத்தி வகிட்டில் குங்குமம் வெச்சிக்கணும்... குளிக்கும்போது தாலிக்கு மஞ்சள் வெக்கணும்.. புருஷன், குழந்தைகள்னு ஒரே குடும்பமா இருக்கணும். இப்படி... எல்லா பெண்களுக்குமே இருக்கற சராசரி ஆசைதான். ஆனா சாகப் போற இந்த நிமிஷத்தில் எனக்கு ஒரே ஒரு ஆசைதான் மிச்சமிருக்கு..."

"சொ... சொல்லு காயத்ரி..?"

துடித்தான் முரளி.

"முதிர் கன்னியாக வாழ்க்கையை முடிச்சிகிட்ட என்னோட கண்களை கண் பார்வையற்ற ஓர் இளம் பெண்ணுக்கு தானமா தர விரும்பறேன். நெத்தி வகிட்டில் குங்குமம்... தழையத் தழையத் தாலி.. கண் நிறைஞ்ச கணவன்... நான் ஏங்கித் தவிச்ச இந்தக் காட்சிகளை அந்த இளம் பெண் மூலமா என் கண்கள் பார்க்குமேங்கற நப்பாசைதான். அண்ணா... இதை மட்டும்.. நி.. நி.. நிறை... வே...த்து..வீ..ங்..."


வார்த்தைகள் முடியும் முன்பு காயத்ரியின் சுவாசம் முடிந்து போனது.

"கா...ய..த்... ரீ... ஈ... ஈ..."

முரளியின் அழுகைச் சத்தம் ஐ.சி. வார்டு மொத்தத்தையும் கனமாய் உலுக்கியது.

(முற்றும்)

அடுத்த வாரம்




## அதிகரிக்கும் முகமூடி மனிதர்கள்



**உ**லகில் தூசியினால் ஏற்படும் வேனிற்காலச் சளிக் காய்ச்சல் வகைகளில் ஒன்றான 'ஹே பீவர்' என்ற காய்ச்சலால் அவதிப்படுவோர் அமெரிக்கா, ஜப்பான், நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வருகின்றனர்.

அமெரிக்கா உட்பட சில நாடுகளில் ரொக்வீட் என்ற மரம் மகரந்தச் சேர்க்கையின்போது ஹோ பீவர் நோயைப் பரப்புகிறது.

ஜப்பானில் செடர் என்ற மரத்தின் பூக்களில் மகரந்தச் சேர்க்கை பெப்ரவரி முதல் ஏப்ரல் வரை நடைபெறுகிறது. அப்போது பரவும் தூசு மற்றும் இளவேனிற் காலக் காற்று மூலம் தும்மல் ஏற்பட்டுப் பலருக்கு தொற்றிக் கொள்கிறது.

இதைத் தடுக்க 80 சதவீத ஜப்பானியர்கள் முகத்தில் முகமூடி போல் மூக்கையும் வாயையும் நன்கு மூடிக்கொண்டே நடமாடுகின்றனர்.

மூக்குக் கண்ணாடி, காற்றைச் சுத்தப்படுத்தும் சாதனம் முதலியவை இருந்தாலும் 150 வகையான டிசைன்களில் வந்துள்ள முகமூடிகள் வசதியாகவும் தூசியை நுகர முடியாதவாறும் பாதுகாப்பாக இருப்பதால் இந்தவகை முகமூடிகள் அதிகளவில் விற்பனையாகின்றன.

## குறைந்துவரும் பெண்கள்

**உ**லகில் ஆயிரம் ஆண்களுக்கு 986 பெண்கள் வீதம் மக்கள் தொகை இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் பெண்களின் வீதம் வெகுவாகக் குறைந்து வருவதாக அறியப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்களுக்கு புதுடில்லியில் 821 பெண்களும் ஹரியானாவில் 861 பெண்களும் பஞ்சாப்பில் 874 பெண்களும் சண்டிகாரில் 773 பெண்களும் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத வாழ்க்கை, திருமணமானாலும் நிம்மதி இல்லாத வாழ்க்கை முதலியவைகளால் இந்தியாவில் பெண் குழந்தைகள் பெற்றுக்கொள்வதைத் தவிர்த்து வருகின்றனர். தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களில் ஆண்களை விடப் பெண்களின் தொகை அதிகமாக இருக்கிறது.

## சர்ச்சைக்குரிய எழுத்தாளரின் புதிய புத்தகம்



**'சா**த்தானின் கவிதைகள்' என்ற சர்ச்சைக்குரிய புத்தகத்தை எழுதியதை அடுத்து ஒட்டுமொத்த இஸ்லாமியர்களின் வெறுப்புக்கு ஆளானவர் சல்மான் ருஷ்டி.

அதுமட்டுமன்றி இவரது தலைக்கு விலை வைக்கப்பட்டதால் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வருகிறார். சில காலத்திற்கு முன் இவர், பத்மா என்ற இளம் வயதுத் தமிழகப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

பல காலம் இலண்டனில் வாழ்ந்த இவர் இப்போது அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வசித்து வருகிறார். இந்தியாவின் மும்பையில் பிறந்தவர் இவர்.

நியூயோர்க்கில் குடியேறியபோது, தமக்கு அங்கு நேர்ந்த அனுபவங்களை வைத்து 'ஃப்யூரி' என்ற பெயரில் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்.

நியூயோர்க் நகரில் ஓசை அதிகம் என்று குறிப்பிட்டுள்ளார் ருஷ்டி. அடிக்கடி ஃபோன் அலறி அமைதியில்லாமல் பண்ணிவிடுவதாகக் கூறுகிறார் ருஷ்டி.

## ரொனால்ட் ரீகன் சாதனை

**அ**மெரிக்க ஜனாதிபதிகளில் அதிக காலம் உயிரோடு இருந்தவர் என்ற சாதனை படைத்தவர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் அடம்ஸ். இவர் 33,119 நாட்கள் (கிட்டத்தட்ட 90 வருடங்கள்) உயிரோடு இருந்து சாதனை படைத்தார்.

இந்தச் சாதனையை இப்போது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ரொனால்ட் ரீகன் முறியடித்துள்ளார். கடந்த 12.10.2001அன்று ரீகன் பிறந்து 33,120 நாட்களாகின.

90 வயதான ரொனால்ட் ரீகன் குடியரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு ஜனாதிபதியானவர். நடிகராக இருந்து ஜனாதிபதியாக உயர்ந்தவர்.

நஷ்மோர் மலையில் புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதிகள் நால்வரின் தலைகள் சிலைகளாக செதுக்கப்பட்டுள்ளன. விரைவில் இவர்கள் நால்வரின் சிலைகளுக்கருகில் ரீகனின் சிலையும் செதுக்கப்படவுள்ளது.

## ஏமாற்றம்



**அ**ண்மைக் காலமாகவே ஆண்கள், பெண்களாக மாறுவதும் பெண்கள் ஆண்களாக மாறுவதுமான பால் மாற்று செயன்முறை உலகெங்கிலும் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இந்த மோகத்தில் சிக்கிய லண்டன் வாசியான சப்ரினா நாக்வி ஜோன்சன் என்ற யுவதி ஒரு உடற்பயிற்சி ஆலோசகர். 18 வயதான இவர் உடல் உறுப்புக்களால் உண்மையிலேயே ஆணாக மாறி விட்டாரா என்பதை பரம இரகசியமாக, வைத்திருக்கிறார். ஆனால் இவரது நடை உடை பாவனை அனைத்தும் இளைஞர்களுடையது போலவே அமைந்துள்ளது.

அண்மையில் இவருக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. மத்திய லண்டனில் உள்ள இரவு நேர விடுதி ஒன்றில் இவர் மது அருந்திக்கொண்டிருந்தார். அங்கு வந்த ஒரு நடுத்தர வயது பெண்மணி சப்ரினாவை தன்னுடன் 'ஒரு பயணம்' போய் வர அழைத்தார். அந்த பெண்ணின் அழைப்பில் இருந்த லாவகம் அது எதற் கான அழைப்பு என்பதை புரிந்து கொண்ட சப்ரினா மறுத்து விட்டாள்.

இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பெண்மணி பிரிதொரு தினத்தில் ஆட்களை வைத்து சப்ரினாவை கடத்திச்சென்று தனது வீட்டில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார்.

வேகமாக சப்ரினாவின் ஆடைகளை களைந்து அந்த பெண் தான் எதிர்பார்ப்பதை அவரிடம் இருந்து பெற முடியாது என்று தெரிந்ததும் கையில் அகப்பட்டதால் அடித்து காயப்படுத்தியுள்ளார்.

# சமாதான சக வாழ்வே இன்றைய தேவை

## அந்த இலக்கை நோக்கி வீறு நடை போடுவோம்,

## எதிர்ப்பு அரசியலில் எங்களுக்கு நம்பிக்கையில்லை

**யா**ழ்குடாநாட்டில் நிலவும் பரபரப்பான சூழ்நிலையிலும் தன்னைத் தேடிவரும் ஆயிரக்கணக்கான மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றுக்குப் பரிகாரம் காணுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையிலும் அமைச்சரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான கே.என் டக்ளஸ் தேவானந்தா விசேட நேர்காணல் ஒன்றுக்கு இசைவு தந்தார். அந்த நேர்காணலில் சூடு பிடித்துக் கொண்டிருக்கும் பொதுத் தேர்தல் பற்றியும் அதில் தமிழ் பேசும் மக்களின் நிலைப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் பற்றியும் அதனோடிணைந்த பல்வேறு விடயங்களுக்கும் அவர் தெளிவாகப் பதிலளித்தார். அந்நேர்காணல் இதோ:-

**கேள்வி:**

மக்கள் குறை நிவர்த்தி சேவையை இப்போது நடத்தியிருக்கின்றீர்கள். அதாவது தேர்தல் நெருங்கும் சமயத்தில் நீங்கள் இக்குறை நிவர்த்தி சேவையை நடத்தியிருக்கின்றீர்கள். இது பற்றிப் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறி, வேறு வழியில் மக்களைத் திசை திருப்பி விடுகிறார்கள். இதுபற்றிய உங்களின் பதில் என்ன?

**பதில்:**

கடந்த மே மாதத்தில் நாங்கள் முதலாவது மக்கள் குறை நிவர்த்தி சேவையை நடத்தியிருந்தோம். அப்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். மேலும் பலருக்கு இச் சேவை தேவைப் பட்டிருந்தது. அதனால் அப்போதே மீண்டுமொரு சேவை அடுத்த சில மாதங்களில் நடத்தப்படுமென அறிவித்திருந்தோம். அந்த அடிப்படையில் தான் நாங்கள் இதை நடத்தியிருக்கின்றோம். ஆகவே, இதற்கு வேறு காரணங்கள் இல்லை.

**கேள்வி:**

அதிகமான மக்கள் இந்தக் குறை நிவர்த்தி சேவையில் உங்களைச் சந்திப்பதற்காகவே வந்தார்கள். உங்களைச் சந்தித்து தங்களது குறையை உங்களிடம் முறையிட்டு அதற்கு உங்கள் மூலமாகத் தகுந்த பரிகாரம் காண வேண்டுமென்றே வந்தார்கள். இந்த விடயத்தை ஒழுங்குபடுத்திவிட்டு நீங்கள் நேரடியாகக் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டதன் காரணம் என்ன?

**பதில்:**

ஏமாற்றம் மக்களுக்கு மாத்திரமல்ல எனக்கும் தான். மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்குள்ள குறைகளை அறிந்து அதற்கு விரைவான தீர்வை காணவேண்டுமென்ற ஆர்வத்துடன் இருந்தேன். ஆனால் துரதிஷ்டவசமாக சிலருடைய அரசியல் துர்நோக்கங்கள் காரணமாக, சுயலாப அரசியல் காரணமாக நான் இந்த மக்கள் குறை நிவர்த்தி சேவையில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

**கேள்வி:**

யாழ் குடாநாட்டில் மின்சாரம் ஒரு பிரச்சனையாக இருக்கின்றது. இதைத் தீர்ப்பதற்கு உங்கள் அமைச்சின் ஊடாக என்ன திட்டத்தை முன் வைத்திருக்கின்றீர்கள்?

**பதில்:**

இன்று இருக்கக்கூடிய மின் உற்பத்தியின் அளவு குடாநாட்டு மக்களுக்குப் போதுமானதாக இல்லை. இருந்தாலும் இருக்கக்கூடிய மின்சாரத்தைச் சரியாக பங்கிடமுடியாமலிருப்பதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் உண்டு. கடந்த வருட எறிகணை வீச்சுக்களின் போது சில இயந்திரங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அதனைத் திருத்துவதற்கு நீண்ட காலம் எடுத்தது. முதலாவது காரணம். தற்போது இருக்கக்கூடிய எரிபொருள் தட்டுப்பாடு பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். எண்ணெய் தாங்கிக் கப்பல் தாக்கப்பட்டுள்ளது பற்றி அறிந்திருப்பீர்கள். எய்தவன் இருக்க அம்பை நோவதுதான் மனிதர்களுடைய குணாம்சம். ஆனால் மக்கள் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். எய்தவன் இருக்க அம்புகளை நொந்து கொண்டிருக்கக்கூடாது. நாங்கள் சமீபத்தில்கூட அமைச்சினுடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறோம். சமீபத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் காரணமாக எங்களால் அதை ஆரம்பிக்க முடியவில்லை. இருந்தாலும் இந்தத் தேர்தல் முடிந்தவுடன் நாங்கள் அதற்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பிக்கலாம் என நம்புகின்றேன். இதற்கு ரூபா 425 மில்லியன் செலவாகும்.

**கேள்வி:**

சமீபத்தில் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இவ்விடயத்தில் நீங்கள் அவதியுறும் மக்களுக்காக என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றீர்கள்?

**பதில்:**

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். வெகுவிரைவில் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்கலாம் என்று நம்புகிறோம். அந்த நேரத்தில் சம்பந்தப்பட்டவர்களும் மக்களுடைய நலன்களைப் பாதிக்காத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால் வன்னிக்கு உணவுப் பொருள் அனுப்பினால் அது புலிகளுக்குப் போய்ச் சேரலாம் என்று சொல்லித் தடுப்பதும், யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினால் அது படையினருக்குப் போய் விடும் என்று சொல்லித் தடுப்பதும் அடிப்படையில் வித்தியாசம் எதுவும் இல்லாதது. "நெல்லுக்கு இறைக்கும் நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்பார்கள். அதற்காக நெல்லுக்கு நீர் இறைக்காமல் விட முடியுமா? எனவே மக்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கே அனைவரும் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**கேள்வி:**

மன்னாருக்கும் குடாநாட்டிற்கும் இடையிலான படகுச் சேவை நடத்தப் போவதாக கூறியிருக்கிறீர்கள். இது இப்போது என்ன நிலையில் இருக்கிறது?

**பதில்:**

இதுவும் எங்களுடைய நீண்டகால முயற்சியில் ஒன்று. நாங்கள் இம்முயற்சியை இன்னமும் கைவிடவில்லை. அது விரைவில் கைகூடும் என்று நான் நம்புகிறேன். இதனூடாக யாழ்ப்பாண விவசாயிகளினுடைய பெரும் குறை உடனடியாகத் தீர்க்கப்படலாம். அதே நேரத்தில் இன்று அரசியலில் கலந்திருக்கும் சில வியாபாரிகள் தங்களுடைய கொள்ளை இலாப நோக்கங்களுக்காக செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம். அதே நேரத்தில் வன்னியில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லையும் கூட கொள்வனவு செய்து யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கலாமென நம்புகிறேன். யாழ்ப்பாண மக்கள் பயன்பெறும் அதே நேரத்தில் வன்னியில் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற மக்களும் கூட அந்தப் பயனைப் பெறமுடியும்.

**கேள்வி:**

யாழ்ப்பாணத்தில் வாழும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் எவை?

**பதில்:**

மீனவர்களுக்கு அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் கடல் தொழிலாளர்களுக்கும், எங்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் இருக்கின்றன. அந்த வகையிலும் ஓர் அரசியல் கட்சி என்ற வகையிலும் அவர்களுடைய தொழில் பிரச்சனை சம்பந்தமாக அடிக்கடி சந்தித்துப் பேசி வருகிறோம். இது தொடர்பாகப் படைத்தரப்பினருக்கும் அழுத்தமாக எடுத்துரைத்து வருகின்றோம். ஆனால் அவ்வப்போது மாற்றங்கள் நிகழுகின்றன. யுத்தத்தின் விளைவான சம்பவங்களால் இத் தொழிலாளர்களுடைய தொழில் பாதிப்புக்கு உள்ளாகிறது. மீனவர்கள் எமது அரசியல் வாழ்வின் ஆரம்பம் தொடக்கம் மிகுந்த அர்ப்பணிப்புடன் எமக்குப் பக்கத் துணையாக தங்கள் பங்களிப்புக்களை நல்கி இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குள்ள பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்க வேண்டுமென்ற துடிப்போடும் முயற்சியோடும் எங்களுடைய சகல நடவடிக்கைகளையும் நாங்கள் செய்து வருகின்றோம். விரைவில் இவர்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. எனினும் இம் மீனவர்களின் தொழில் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கிடையிலான இடைக் காலத்துக்குள் எனது அமைச்சினூடாக அந்த மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:**

காணாமல் போனவர்கள் தொடர்பாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:**

இதுபற்றி நான் முதலில் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். சிலர் தவறான உள்நோக்கத்தோடு செயற்படுகிறார்கள். அந்த நேரத்தில் எவரும் நம்பிக்கையோடு பேச முடியாமலிருந்த நேரத்தில் ஒரு பயங்கரமான சூழல் அல்லது யுத்தச் சூழல் நிலவிய நேரத்தில் எமது கட்சி ஒன்றுதான் முன்வந்து மக்களுடைய சகல விதமான பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அதில் ஒன்றே காணாமல் போனவர்களுடைய பிரச்சனையும். யாரும் பேசப் பயந்து போயிருந்த சூழலில் நாங்கள் தான் பாதிக்கப்பட்டவர்களை அணிதிரட்டி அவர்களை ஒரு சங்கமாக உருவாக்கி அவர்களுடைய குறைகளை வெளியுலகிற்குத் தெரியச் செய்தோம். இப்பிரச்சனையை முன்னெடுத்த போது காணாமற்போகும் சம்பவங்கள் தொடர விடப்படக்கூடாது என்பதும் காணாமற் போனவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈட்டுப் பெற்றுக் கொடுப்பது என்பதும் தான் எமது நோக்கமாக இருந்தது. காணாமற் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம். அதற்காகவே சங்கத்தை உருவாக்கினோம் ஆனால் இந்தச் சங்கத்தைச் சேர்ந்த சிலர் அரசியல் உள்நோக்கங்களுடன் செயற்பட்டபடியினால் நாங்கள் எதிர்பார்த்த முழு இலக்கையும் எட்டமுடியவில்லை. எனினும் காணாமற் போகும் சம்பவங்கள் தொடராமல் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறியிருந்த பெற்றோரை, பாதுகாவலரை ஒன்று திரட்டி ஓரணியாக்கி அவர்களுக்கொரு தன்னம்பிக்கை ஊட்டி சர்வதேச கவனத்திற்கும் அவர்களது பிரச்சனையைக் கொண்டு வந்தோம். ஜனாதிபதியிடம் இச்சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துச்சென்று நேரில் பேசும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். விசாரணை ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. இருந்தாலும் இந்தச் சங்கத்தில் இருக்கும் சிலரின் ஒத்துழைப்பின்மையால் அதாவது அவர்கள் உள்நோக்கத்தோடு செயற்பட்ட காரணத்தினால் முழு இலக்கையும் எட்ட முடியாமல் இருப்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி:**

காணாமல் போனவர்களுக்காக நீங்கள் அமைச்சின் ஊடாக நிவாரணம் எதையும் வழங்கியிருக்கின்றீர்களா?

**பதில்:**

இந்தப் போராட்டத்தில் நான் கூட என்னுடன் நேசமானவர்களையும் தம்பியாரையும் சகோதரியையும் இழந்திருக்கின்றேன். அதைவிட தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவன் என்ற வகையிலும் என்னுடைய அரசியல் நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருந்தவர்கள் என்ற வகையிலும் நானும் பல பேரை இழந்திருக்கிறேன். இழப்புக்களின் பெறுமதியை நானும் உணர்ந்தவன். அந்த வகையில் நான் இதை அணுக ஆரம்பித்தபோது கிடைத்த ஒரு வெற்றி என்னவென்றால் இந்த சம்பவம். தொடராமல் தடுக்கப்பட்டதுதான். எனினும் காணாமல் போனவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் தொடர்பில் நாங்கள் இன்னமும் பூரண வெற்றியை அடையவில்லை.

**கேள்வி:**

காணாமற் போனவர்கள் என்று குறிப்பிடும் பொழுது 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமற் போனவர்கள் அதற்கு முன்பாகக் காணாமற் போனவர்களும் இருக்கிறார்கள் இது தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:**

எங்களுடைய உடனடியான கவனம் 1995ற்குப் பின்னர் காணமல் போனவர்கள் பற்றியதாகவே இருந்தது. ஆனால் 1995க்குப் முன்னர் காணாமற் போனவர்கள் பலர் பற்றிய முறைப்பாடுகள் இருக்கின்றன. அவர்கள் தொடர்பாகவும் எங்கள் கவனத்தை திருப்ப இருக்கின்றோம். இதை வெளிக்கொண்டு வருவதும் இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கவும் எண்ணியுள்ளோம் எது எப்படி இருந்தாலும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எங்களுக்கு இதுவரை ஏற்பட்ட இழப்புக்கள் போதும். இனியும் இழப்புக்கள் தொடர்ந்தால் எமது இனம் தாக்குப் பிடிக்க முடியாது. பட்டதெல்லாம் போதும் இனி அவர்கள் விடியலை நோக்கிச் செல்ல வேண்டும். காத்திருக்க நேரமில்லை. எனவே எவ்வளவு விரைவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியுமோ அவ்வளவு விரைவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர சாத்தியமான அனைத்தையும் செய்ய வேண்டும். இன்று இந்த யுத்தம் அரச படையினருக்கும் புலிகளுக்கும் இடையில்தான் நடைபெறுகிறது. எனவே யுத்தத்தை நிறுத்த அவர்கள் தான் முழுமுயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

எங்களைப்பொறுத்த வரையில் நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியவர்கள் என்பதனால் எங்களுடைய அரசியல் பலத்தைப் பயன்படுத்தி நாங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுத்து பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர முடியும் என்று நம்புகிறோம். அதாவது நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்றதன் மூலமாக அந்த அனுபவங்களூடாக எதிர்கால அரசை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரலாம் என்று நம்புகின்றோம். எனினும் இருகைகள் தட்டினால்தான் ஓசை. எங்கள் சக்தி மக்கள் சக்தி என்ற வகையில் மக்களுக்கூடாக புலிகளுக்கும் இந்தச் செய்தியை எட்டவைத்து அவர்களையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவந்து எவ்வளவுக்கு விரைவாக நாங்கள் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியுமோ அதுவே நல்லது. இந்த யுத்தத்தை முடிப்பதற்கான முழுமுயற்சியையும் எடுப்போம். இதில் நம்பிக்கையோடும் இருக்கின்றேன்.



அது மாத்திரமல்ல கௌவரமான அரசியல் தீர்வை நாங்கள் எட்டுவோம் என்ற நம்பிக்கையும் எங்களுக்குண்டு. எமக்குத் தேவையானது மக்களுடைய பரந்தளவிலான ஆதரவுதான். யார் குற்றினாலும் அரிசியாகலாம் போரை நிறுத்தி கௌரவமான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதில் யார் முயற்சி மேற்கொள்கின்றார்களோ அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு மட்டுமல்ல அவர்களுக்குத் தடையாக இருக்கப் போவதுமில்லை. இது நிச்சயமான உண்மை. ஆனால் வைக்கோற்பட்டறை நாய் என்ற போக்கில் நாம் செயற்படுவதில்லை.

**கேள்வி:**

உங்களின் அரசியல் இலக்கு என்ன?

**பதில்:**

மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி. எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடக்கு கிழக்கு ஒரு அலகு. அதற்கு விசேட அதிகாரங்கள். இது தான் எமது அரசியல் இலக்கு. மற்ற எந்த அரசியல் கட்சியும் முன்வைக்காத அளவு துணிச்சலுடன் இதனை நாம் முன்வைத்துள்ளோம். மெல்லெனப் பாயும் தண்ணீர், கல்லையும் உருக்கிப் பாயும் என்பார்கள். அதுபோல மூன்று அல் லது நான்கு வருடங்களுக்குள் இதனை எட்டுவோம் என்ற நம்பிக்கையுண்டு. இதை நோக்கியே மக்களை அணிதிரட்டுகின்றோம். இம்முயற்சியில் நாம் ஈடுபட்டிருப்பதைக்கண்டு அச்சம் கொண்டுள்ள சக்திகள் ஒரு கூட்டாக சேர்ந்திருக்கின்றன. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மக்களுக்கு சொல்ல விரும்புவது இதுதான். உள்நோக்கங்களோடு வருபவர்களையிட்டு, மிக எச்சரிக்கையாக இருங்கள்.

கடந்த காலங்களில் கூட இவர்கள் பல தடவைகள் பல வழிகளில் மக்களை ஏமாற்றி இருக்கிறார்கள். இன்று ஏற்பட்டுள்ள துன்பகரமான நிலைமைக்கு இவர்கள் தான் காரணம். ஏனெனில் அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு, இவர்கள் செயற்படுகிறார்கள். இப்போதும் அதற்காகத்தான் மீண்டும் வந்துள்ளனர். நான்கு தமிழ் கட்சிகள் கூட்டுச்சேர்ந்திருப்பதை வைத்துக் கொண்டு அவர்களது உள்நோக்கம் ஈ.பி.டி.பி அரசியல் ரீதியாக பலம் வாய்ந்த ஒரு கட்சியாக வந்துகொண்டிருக்கின்றது. ஈ.பி.டி.பி யோடு மக்கள் அணிதிரளுகின்றார்கள் என்ற பயம் காரணமாகத்தான் இந்தக் கூட்டுக்கு அவர்கள் வந்துள்ளார்கள். இதனை நான் மாத்திரம் நினைக்கவில்லை. அவ்வாறுதான் மக்களும் நினைக்கின்றனர். நான் தினமும் நூற்றுக் கணக்கில் மக்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றேன். அவர்களுடைய நாளாந்தப் பிரச்சனைகள் பற்றி அறிந்து கொண்டுதான் வருகிறேன். அவர்களு

(18ம் பக்கம் தொடர்ச்சி...)

17ம் பக்க தொடர்ச்சி

# நாங்கள் வரி, கப்பம் வாங்கும் அரசியல் நடத்தவில்லை அரசாங்கத்திடம் இருந்து பெறுவதை மக்களுக்குத்தான் வழங்குகிறோம்

டைய கருத்துக்கள் மற்றும் மனநிலையை நான் அறிந்தபோது அல்லது அறிகின்றபோது என்னுடைய இந்தக் கருத்து மேலும் வலுப்பெற்று வருவதாகவே உணர்கின்றேன். கபட உள்நோக்கங்களுடன் மக்களை ஏமாற்றி மக்களை மீண்டும் படுகுழியில் தள்ளிவிட இக்கட்சிகள் எடுக்கும் முயற்சியில் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என நம்புகிறேன். இந்த அடிப்படையிலேயே மக்கள் எங்களை நோக்கி அதிகளவில் வந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்களின் நாளாந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டியிருக்கின்றது. அவர்களது முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் அவர்கள் நிச்சயம் எமது ஆதரவாளர்களாக மாறுவார்கள். அது ஒரு பக்கம் எங்களுடைய உண்மையான நோக்கம் என்னவென்றால் வாடிய பயிரைக்கண்டு வாடினேன் என்று சொல்லிக் கொண்டு அரசியல் நடத்தாமல், அந்த பயிர் ஏன் வாடியிருக்கின்றது என்பதை ஆராய்ந்து அதற்கு உரம் போட்டு தண்ணீர் ஊற்றி, அதைப் பாதுகாத்து வளர்த்துவிடுவதைப் போலத்தான், நாங்கள் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். அது எங்களுக்கு அரசியலில் சாதகமாகவும் மாறலாம். ஆனால் இதை விரும்பாதவர்கள் சிலர், எதிராகச் செயற்படுகின்றனர். நான் அடிக்கடி குறிப்பிடுவதைப் போல சவப்பெட்டிக்காரனின் வியாபாரம் போல மக்களின் துன்பத்திலும் துயரத்திலும் இலாபம் தேட முற்படுகின்றனர். இதுதான் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான அடிப்படை வித்தியாசம்.

**கேள்வி:**

நான்கு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்திருப்பதால் அனைத்துத் தமிழர்களும் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள் எனக் கருத முடியுமா?

**பதில்:**

நாங்கள் அப்படி நினைக்கவில்லை. தமிழ் பேசும் மக்கள் சரியான பக்கத்தில் நிற்பார்கள் என்று நம்புகின்றோம். சரியான திசையை நோக்கிப் போவார்கள் என்ற நம்பிக்கையில்தான் இருக்கிறோம்.

**கேள்வி:**

சில தமிழ்க் கட்சிகளின் கூட்டு புலிகள் மீதான தடையை நீக்கக் கோரப்போவதாகக் கூறப்படுகிறதே? புலிகளை தடை செய்தபோது இவர்கள் எங்கே போயிருந்தார்கள்?

**பதில்:**

நான் உங்களிடம் சொன்னது போல முதல் ஒரு போலி அரசியல் அடிப்படையில்தான் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள். இதில் புலிகளுடைய தடையை நீக்குவது என்பதல்ல இங்கு பிரச்சனை. வரலாறுகளை நாங்கள் எடுத்துக்கொண்டால், மோதிக் கொண்டிருந்த போது அல்லது பிரச்சனைப் பட்டுக் கொண்டிருந்தபோது தடைகள் இருந்த போது தான் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. ஆதலால் தடைகள் தான் பேச்சுவார்த்தை நடைபெறத் தடையாக இருக்கிறது என்று நாங்கள் கருதவில்லை. நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் எங்கள் கோரிக்கைகள் இருக்க வேண்டும். ஆனால் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளையே இவர்கள் முன்வைக்கின்றனர். இது அவர்களுடைய இயல்பு. 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போதும், இதுதான் கடைசித் தேர்தல் என்றார்கள். எனினும் இன்றைக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கு முந்தியடித்துக் கொண்டு வருகிறார்கள். அதற்கு மக்களை ஏமாற்றக் கூடிய கொள்கையை வகுத்துக் கொள்கின்றனர். இது தான் உண்மை. இன்று கனடா கூட புலிகளைத் தடை செய்திருக்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா என்ற பல நாடுகள் தடை செய்யும் அளவுக்கு எங்களுடைய நிலைமைகள் போய்க் கொண்டு இருப்பதைத் தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இந்த நேரத்தில் புலிகளுக்கும் நான் ஒரு வேண்டுகோளை அல்லது கோரிக்கையை முன்வைக்கலாம் என்று நினைக்கின்றேன். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல சகோதரப் படுகொலைகளை கைவிட்டு ஒரே குரலில் பேச முன்வருவார்களேயானால் வெகுவிரைவில் இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்று நம்புகின்றேன். சர்வதேச நாடுகள் கூட அத்தகைய சந்தர்ப்பத்திற்காக அல்லது அந்தச் சூழலைப் பயன்படுத்தி பாதுகாத்து இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நாங்கள் அவர்களோடு பேசியபோது அவர்கள் அதைச் சொன்னார்கள். அந்த வகையில், நடைமுறைச் சாத்தியப்பட்ட வகையில் தான் நாங்கள் அந்த பிரச்சனையையும் அணுக விரும்புகின்றோம். இதை விட்டு ஏனைய கட்சிகள் போல, போலி அரசியல் நடத்த அல்லது மக்களை ஏமாற்ற நாங்கள் தயாராக இல்லை.

**கேள்வி:**

சில தமிழ்க் கட்சிகளின் கூட்டுப் பற்றி

**பதில்:**

1977ம் ஆண்டில் வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று 18 ஆசனங்களைக் கைப்பற்றியவர்கள் என்ன செய்தார்கள்? அந்தக் காலகட்டத்தில் இவர்களது வெற்றிக்காக பாடுபட்டவன் என்ற வகையில் என்னால் இக் கேள்வியை எழுப்ப முடியும். 1977ல் முழு ஆசனங்களையும் பெற்றவர்கள் என்ன செய்தார்கள்? கவிழ்த்துக் கொட்டிவிட்டு ஓடி விட்டார்கள். மீண்டும் 1989ல் பொதுச் சின்னம் என்ற போர்வையில் வந்து என்ன செய்தார்கள்? எதையும் செய்யாது விட்டாலும் பரவாயில்லை. இருக்கிற நிலைமைகளை குழப்பி விடவே செய்தார்கள். இதைப் போலவே 2001ல் மீண்டும் வந்திருக்கிறார்கள். ஆகையால் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். சரியானவர்களை அடையாளம் காண வேண்டும். நாங்கள் தேர்தலில் போட்டியிட்டு வென்று, அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் தவற விட்டவர்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்போவதாகக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? எனவே இவர்கள் கொடுக்கப் போவதாகக் கூறும் அழுத்தம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள். அழுத்தம் கொடுப்பதாக இவர்கள் கூறுவது வெறும் வாய்ச்சவடால். அதாவது ஒரு பசப்பு வார்த்தை உதாரணமாக தற்போது இருந்த அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் பத்து ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்த ஜே.வி.பி அரசாங்கத்திற்குக் கைகொடுத்து தன்னுடைய வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தது. அது போல ஏன் இவர்களால் செய்திருக்க முடியாது? இவர்களும் ஒன்பது ஆசனங்கள் வைத்திருந்தார்கள் தானே? அரசோடு பேரம் பேசி இருக்கலாம்.

அவர்கள் நான்கு கோரிக்கைகளை முன்வைத்திருக்கலாம். உடனடி யுத்த நிறுத்தம் செய்யக் கேட்டிருக்கலாம். "மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும்" என்பார்கள். இந்த யுத்தம் நிறுத்தப்பட்டாலே எவ்வளவோ பிரச்சனைகள் தீர்ந்துவிடும். புலிகளோடு பேசச் சொல்லி இருக்கலாம். அதன் மூலம் யுத்தத்திற்கு ஒரு நிரந்தரமான முடிவைக் கண்டிருக்கலாம். மக்களுடைய அரசியல் பிரச்சனைகளுக்கு ஒரு விரைவான கௌரவமான ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பெற்றிருக்கலாம். மக்கள் எதிர்கொள்ளுகின்ற நாளாந்தப் பிரச்சனைகளுக்கு உடனடியான தீர்வை முன் வைத்திருக்கலாம். உங்களுக்குத் தெரியும். தமிழ் பேசும் மக்களுடைய முதற் போராட்டம் "ஸ்ரீ" எதிர்ப்புப் போராட்டமாகவே வெடித்தது. ஆனால் பிரேமதாச ஆட்சியில் எவ்விதமான சத்தமும் சந்தடியுமின்றி வெகு இலாவகமாக அந்த "ஸ்ரீ" நீக்கப்பட்டது. அது போல பல பிரச்சனைகள் தீர்க்கப்படலாம். இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு முதல் இருந்த சிறிலங்கா அரசாங்கத்தினுடைய மனோநிலைகள் அணுகுமுறைகள் என்பன ஒப்பந்தத்திற்கு பின்னர் வெகுவாக மாறிவிட்டதை உணரவேண்டும். சந்தர்ப்பங்களை தமிழர் தரப்பு பிரதிநிதிகள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. "ஸ்ரீ" எவ்வாறு சத்தம் சந்தடி இல்லாமல் நீக்கப்பட்டதோ அதேபோல இலகுவாக பல விடயங்களுக்கு தீர்வினைக் கண்டிருக்கலாம். ஆனால் முழுக்க முழுக்க சுயலாப அரசியலை அடிப்படையாகக் கொண்டு அரசியல் நடத்துவதனால் எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்க்கின்ற படியினால், இன்றுவரை அந்த பரிதாப நிலை நீடிக்கின்றது.

தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் எல்லாம் எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்த்தனவே தவிர, எதிர்ப்பை ஒரு போர் பேசும் சக்தியாக மாற்றி இருப்பவற்றைப் பாதுகாத்துக் கொண்டு பெற வேண்டியவற்றைப் பெறுவதற்காகப் போராடி இருக்க வேண்டும். மாறாக பெற வேண்டியதை பெறாமலும், இருப்பதையும் அழித்துக் கொண்டு போகின்ற அரசியலைத் தான் இன்னும் கடைப்பிடித்து வருகின்றனர்.

ஆனால், நாங்கள் எங்கள் அரசியல் இலக்கை மிகத் தெளிவாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஐக்கிய இலங்கைக்குள் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதுடன் எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடக்கு கிழக்கு ஒரு அலகு அதுவே ஈழ மாநிலம். அதற்கு விசேட அதிகாரங்கள் என்னும் எங்கள் இலக்கைத் தெளிவாக நாங்கள் வகுத்திருக்கிறோம். அதாவது மொத்தமாகச் சொன்னால் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு என்பதை நிலைநாட்டலாம் என்று நம்புகின்றேன். அதனை நோக்கித் தான் எங்களுடைய சகல நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகின்றோம். மிக விரைவில் எங்கள் அரசியல் இலக்கை எட்டலாமென நாம் நம்புகின்றோம். மக்களை இதனை நோக்கித்தான் நாங்கள் அணி திரட்டுகின்றோம். நாங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பதாக கையை உயர்த்துவதாக சிலர் போலித்தனமான உப்புச்சப்பற்ற குற்றச்சாட்டை சுமத்துகின்றனர். நாங்கள் ஏன் கையை உயர்த்துகிறோமென்றால் கையை நீட்டுவதற்காகவே. ஏன் கையை நீட்டுகிறோமென்றால் அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்காக. மக்களுக்கு வழங்குவதற்காகவே அதனைப் பெறுகின்றோம். நாங்கள் வரிவாங்கும் அரசியல் நடத்தவில்லை. கப்பம் வாங்கும் அரசியலையும் நடத்தவில்லை. நாங்கள் அரசாங்கத்திடமிருந்து பெறுவதெல்லாம் மக்களுக்குக் கொடுப்பதற்காகவே. இந்த உறவுதான் எங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலுள்ள உறவு. இதை எமது மக்கள் தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல இலங்கையெங்கும் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்கள் என்ற வகையிலேயே எங்களுடைய அணுகுமுறை இருக்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர். அந்த வகையில் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் விரைவான சமாதான சகவாழ்வு காண்பதற்கும் நான் சார்ந்த கட்சிக்கு மக்களின் பேராதரவு இருக்கும் என்று திடமாகவே நம்புகிறேன்.

**கேள்வி:**

பன்னிரண்டாவது பாராளுமன்றம் எப்படியானதாக இருக்கப் போகிறது?

**பதில்:**

தேர்தல் முடிந்தபிறகுதான் அதைப் பற்றிச் சொல்ல முடியும். எனினும் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு வருகின்ற அரசை அமைப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக உண்டு. ஆனபடியால் அதனைப் பயன்படுத்த வேண்டும். தெற்கைப் பொறுத்தவரையில் இரு பிரதான அரசியற் கட்சிகளுக்கும் அவர்களுடைய வாக்கு வங்கிகளில் பெரிய மாற்றங்கள் இருப்பதாக தெரியவில்லை. ஐம்பதுக்கு ஐம்பது என்ற வகையிலேயே நாட்டின் சூழல்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் வடக்கு கிழக்கு பிரதிநிதிகள் அதனைச் சரியாகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காண்பதற்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் எவையாயினும் மக்களுக்கு பாதகமில்லாத வகையில் யுத்தத்திற்கு விரைவான முடிவைக் கண்டு, மக்கள் கௌரவமாகவும், மனமகிழ்ச்சியுடனும் வாழக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு மக்கள் எங்களுக்கு தங்கள் முழு ஆதரவையும் வழங்குவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

## சிந்தியா பதில்கள்

**★ ஹிரோஷிமா, நாகசாகி தாக்கத்தை அமெரிக்க மக்கள் உணர்ந்திருப்பார்களா?**

பி. ஆர். அசோக்குமார், டிக்கோயா.

அமெரிக்க மக்கள் மட்டுமில்லை, ஆப்கான் மக்களும் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். போதும்! இனி ஆவேசம், பழிக்குப் பழி என்பதெல்லாம் போதும் அசோகரே! தேவர் மகனில் கமல்ஹாசன் சொன்னதுபோல, "வெட்டரிவாளைப் போட்டுட்டுப் போய்ப் படிங்கடா டேய்.....!" இதைச் சொன்னால் உடனே நாயகனில் கமல் சொன்னதுபோல, "அவங்களைப் போடச் சொல்லு நான் போடறேன்" என்று ஆரம்பிப்பீர்கள். ஊஹூம்.... சரிப்படாது.... குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளிலிருந்து நாங்கள் இதை ஆரம்பிக்க வேண்டும்.

✪♠

**★ சிந்தியா! வாழ்க்கை எப்படி ஒரு வளையமாகும்?**

இ. சூரியகுமார், மான்காடு.

"உடனடியாகப் போரை நிறுத்தி, விடுதலைப் புலிகள் மீதான தடையை அகற்றி, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழும் தீர்வைக் கொண்டுவருவோம்" என்று கூறி ஐந்து வருடங்களுக்குப்பின் மீண்டும் வாக்குக் கேட்டுவர நேரும்போது!

✪♠

**★ எனது அபிமான நடிகை ஸ்நேகாவின் முகவரி தர முடியுமா?**

எஸ். சுகந்தன், மாங்கேணி.

28/1, மன்னார் முதலி தெரு, சென்னை. 600 026.

✪♠

**★ தம்முயிரைத் துச்சமென அலட்சியப்படுத்தி நாட்டுக்காகத் தியாகம் செய்கிறவர்களை நினைக்கையில், எனது வாழ்க்கையை நினைத்துக் குற்றவுணர்ச்சி எழுவதைத் தடுக்க முடியவில்லை. உயிரைப் பெரிதாக எண்ணாதவர்கள் இருக்கும் நாட்டில், உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடித் திரிவதையிட்டு, என்னை நான் ஒரு புழுப்போல உணர்கிறேன். நான் என்ன செய்ய முடியும் சிந்தியா?**

முகுந்தன், கொழும்பு-12.

நீங்கள் இளைஞராகத்தானிருக்க வேண்டும். தவறு செய்து உணர்ச்சியாவேசங்களை ஒதுக்கிவைத்துவிட்டுச் சிந்தியுங்கள்!

தம்முயிரை அலட்சியப்படுத்துவது பெரிதல்ல;

பிற உயிரை லட்சியம் செய்வதே பெரிது.

✪♠

**★ பத்திரிகைகளிலும், தமிழ் மக்களிடையே உள்ள செல்வாக்குமிக்க புத்திஜீவிகளாலும் தமிழ் மக்களின் பொது நம்பிக்கையாகவும் உளப்பாங்காகவும் உருவாக்கப்பட்டிருக்கும் போக்கிற்கு மாறானதாகவே சிந்தியாவின் பதில்கள் அமைகின்றன. உங்கள் வழி தனி வழியா?**

எம். வினோதினி, ஹட்டன்.

அப்படிச் சொல்ல முடியாது. 'பொது நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட விதிவிலக்கான உண்மைகளைச் சொல்லி, அந்த சந்தர்ப்பத்தில் மக்களுடைய விரோதியாகவும், காலத்தின் நண்பனாகவும் இருப்பதே 'என் வேலை' என்று வேறு பலரும் சொல்லியிருக்கிறார்கள்.

மக்களின் வோட்டோ அல்லது மனதிற்குப் பிழை என்று தெரிந்தாலும் மக்களிடம் அந்நந்த நேரத்து மகிழ்ச்சிப் படுத்தலுக்கு வேண்டியதைச் சொல்லும் பிரமுகர்த்தனமோ எனக்கு வேண்டாம்.

✪♠

**★ இலக்கியங்களினால் என்ன பயன் என்று சொல்ல முடியுமா?**

ச.ஜேனாதிராஜா, பொகவந்தலாவ.

இந்தக் கேள்விக்கு, வாழ்க்கையின் பயன் என்ன? என்ற கேள்வியைப் பதிலாகத் திருப்பிப் போட்டுவிடலாம். ஆனால் யோசித்துப் பார்த்தால், நாமறியாமலே நம்மை உருவாக்கியிருப்பவை புராணக் கதைகளும், இலக்கியங்களும் இன்னபிற மொழித் தகவல்களும்தான் என்று புரியும். ஜெர்மனிய எழுத்தாளர் கஃப்கா, "நம்முள் உறைந்து கிடப்பதான கடற்பரப்பை பிளக்கும் கோடாரியே ஒவ்வொரு நூலும்" என்கிறார். சரிதான்!

✪♠



**★ என் கனவில் ஒவ்வொரு நாளும் சிம்ரனே வருகிறாள். இந்நிலையில் நான் சிம்ரனைத் தவிர வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வது துரோகம் இல்லையா?**

எஸ். சிவனேசன், கொழும்பு-05.

தினமும் விஜயையே கனவு கண்டுவந்த ஒருபெண் யதார்த்தத்தை உணர்ந்து உங்களை மணமுடிக்க சம்மதிக்கும்போது, நீங்கள் மட்டும் முறுக்கிக் கொள்வதில் எந்த நியாயமும் இல்லை.

✪♠

**★ சிந்தியா! போராளி-தீவிரவாதி இரண்டிற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?**

எம்.பி.எம். அஷ்ரப், யடவத்த.

சொல்கிறவரின் மனது.

✪♠

**★ ரூபவாஹினி அலைவரிசை IIஇல் தற்பொழுது சில தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. ஆனால், விசேட நிகழ்ச்சிகள் என்றாலும் சரி, விளையாட்டு நிகழ்ச்சிகள் என்றாலும் சரி அவற்றை அலைவரிசை IIஇல் போட்டு தமிழ் நிகழ்ச்சிகளை இடைநிறுத்துகிறார்களே, அது ஏன்?**

கே. சங்கீதா, தம்பிலுவில்-01.

சக்தி ரீ.வீயினர் காலை 10 மணியிலிருந்து இரவு 10 மணிவரை தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப ஆரம்பித்து விட்டார்கள். அதைத் தவிர, வேறு எந்த அலைவரிசையையும் தமிழர்கள் பார்த்து விடக் கூடாது என்பதில் மற்ற எல்லா அலைவரிசையினருமே போட்டி போட்டுச் செயற்படுகிறார்கள். அரசாங்க அலைவரிசையினரைப் பொறுத்தவரை, அங்கு பணியாற்றுபவர்களுக்கு வேறொரு நோக்கமும் இருப்பதாகத் தெரிகிறது. காய்ந்த மரத்திற்குத்தான் கல்லடி விழும். யாரும் பார்க்காத ஒளிபரப்பை நடத்தினால், எவரும் அதுபற்றி பேசப்போவதில்லை. இருக்கும் பதவிகளுக்கு ஆபத்தாக புதிதாய் யாரும் நுழையவும் தேவையில்லை. ஆஸ்தான அறிவிப்பாளர்கள், ஆஸ்தான சமையல் காரர்கள் ஆஸ்தான வைத்தியர்களுடன் வயலும் வாழ்வும், அடுப்படியும் சமையலும், மருந்தும் மாத விடாயும்... என்று நாங்களே பார்த்து நாங்களே பாராட்டிக்கொண்டும், தற்செயலாய் பார்த்தவர் யாராவது குறை சொன்னால் கோபப்பட்டும்... அரை மணிநேரச் செய்தியினால் மட்டுமே சேவையைத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தால் போதும் என்றிருப்பவர்களை ஆத்திரப்படாமல் யோசியுங்கள் என்று கேட்டுக் கொள்ளலாம்.

தனியார் தொலைக்காட்சிகள் தமிழர்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்கின்றன என்று ஆதங்கப்படும் அரசியல் சார்பானவர்களிடம் உங்கள் கையிலிருக்கும் இலக்ரோனிக் மீடியாவால் நீங்கள் ஏன் இலையான் துரத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் கேட்க முடியும்.

✪♠

**★ உடனடியாக இப்போது நாட்டு மக்களுக்கு சிந்தியா என்ன சொல்வீர்கள்?**

பாத்திமா முபிதா, ஹபகஸ்தலாவ.

எல்லோரும் வாக்களிக்கச் செல்ல வேண்டும். கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் இருட்டாக வைத்துக்கொண்டு நிகழ்காலத்தில ஆவேசப் பேச்சை மட்டும் கேட்டுக் கிளர்ந்தெழச் சொல்கிற தலைவர்களிடம் கவனமாக இருங்கள். தேர்தல் முடிந்து நாலு மாதங்களின் பின் யார் யார் என்ன செய்துகொண்டிருப்பார்கள் என்பதை இப்போதே உங்கள் அனுபவத்தில் உரைத்துப் பார்த்துக் கொண்டால் போதும்.

✪♠

**★ விரதமிருந்தும், வேறுபல உடலை வருத்தும் செயல்களைச் செய்யும் மேற்கொள்ளப்படும் கடவுள் பக்தி தேவைதானா?**

பி. விக்னேஸ்வரன், ஹட்டன்.

தேவையா இல்லையா என்பது அவரவர் முடிவுசெய்து கொள்ள வேண்டியது. கஷ்டபட்டு விரதமிருந்து, கண்விழித்து, பூமியில் புரண்டு உடலை வருத்திச் சென்று கடவுளைக் காண்பதில் ஒருவிதமான சிலிர்ப்பும், ஏறக்குறைய தெய்வத்தையே சந்திப்பது போன்ற உளவியல் அனுபவமும் ஒருவருக்கு ஏற்படுவது இயற்கையே!

மலைகளிலும், காட்டுப் பகுதி தொலைவிலும் தெய்வங்களை வைத்திருப்பதும், அலகு குத்தி காவடி சுமந்து கால் கடுக்க நடந்து சென்றெல்லாம் தரிசனம் பண்ணுவதும் இந்தக் காரணத்துக்காகவே. கதை, கவிதைகளில் வாசகர் தேடுகின்ற பரவசத்தை, ஒரு பரவச எதிர்பார்ப்பே இத்தகைய வழிபாட்டிலும் தேடப்படுகிறது. அடுத்தவரைப் பாதிக்காமல் இந்தப் பரவசத்தை நாடுவதைப் பழிக்க எந்த நியாயமுமில்லை.

✪♠

# மன்னாதி மன்னன்

**82**

## இராஜ கிளியின் தந்திரோபாயம்

விக்கிரமாதித்த மாமன்னனுடைய பள்ளித்தோழனான விஜயன் என்பவன் விக்கிரமாதித்தன் தனித்திருக்கும் நேரம்பார்த்து அவருடன் போய்ச் சேர்ந்து கொண்டான். விஜயன் விக்கிரமாதித்தனை பல தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி அவருக்குத் தெரிந்திருந்த கூடுவிட்டுக் கூடுபாயும் தந்திரத்தையும் மந்திரத்தையும் கற்றுக் கொண்டான்.

ஆணும், பெண்ணுமாக இரு கிளிகள் ஆனந்தமாக இருக்கின்ற வேளையில் விஜயன் தந்திரமாக ஆண்கிளியைக் கொன்றுவிட்டான். ஆண்கிளி இறந்த துக்கத்தினால் பெண்கிளி மிகப்பரிதாபமாக அழுது புரண்டது. அக்கிளியின் துயரத்தைப் போக்குவதற்காக விக்கிரமாதித்தன் தன் உயிரை இறந்த ஆண் கிளியின் உடலுக்குள் செலுத்தினார். பழையபடி ஆண்கிளியும் பெண்கிளியும் மகிழ்ச்சியுடன் ஒன்று சேர்ந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் உயிரற்றுக்கிடந்த விக்கிரமாதித்த மன்னனுடைய உடலுக்குள் தனது உயிரைப் புகுத்தினான். மன்னனின் உடலெடுத்த விஜயன் உடனடியாகவே தன்னுடைய உயிரற்ற உடலுக்கு தீமூட்டி எரித்துவிட்டான். சற்றும் தாமதியாமல் விஜயன் விக்கிரமாதித்த மாமன்னருடைய உருவில் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தைப் போய் அடைந்தான்.

காடாறுமாதம் என்ற கெடுமுடியாமல் விக்கிரமாதித்த மாமன்னன் உஜ்ஜயினி மாகாணப் பட்டணம் வருகிறார் என்பதை அறிந்த மந்திரி பட்டி ஏதோ சூழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்றறிந்து அந்தப் புரத்திலுள்ள மகாராணிமாரை எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.



அமைச்சர் பட்டி நகர எல்லைவரை சென்று போலி விக்கிரமாதித்தனை வரவேற்று அரண்மனைக்கு அழைத்து வந்தார். அங்கு வந்ததும் போலி விக்கிரமாதித்தன் உடனடியாகவே அந்தப் புரத்துக்குள் செல்ல முயன்றான். ஆனால் அரசிகளோ தாங்கள் பன்னிரண்டு மாதங்கள் விரதம் இருப்பதாகவும் அக்கால கட்டத்திற்குள் அந்தப் புரத்திற்குள் ஆண்வாடையே கூடாது என்று கூறி போலி விக்கிரமாதித்தனை தடுத்து விட்டனர்.

இதற்கிடையில் அமைச்சர் பட்டி தனது சகோதரனும் மாமன்னருமான விக்கிரமாதித்தனுக்கு என்ன நடந்ததோ என்றறிவதற்காக நாலாபுறத்திலும் ஏவலாளர்களை அனுப்பி வைத்தார்.

கிளியுருவில் ஏனைய கிளிகளுடன் திரிந்த விக்கிரமாதித்த மன்னன் ஆயிரம் கிளிகளை ஒன்று சேர்த்து அவற்றுக்கு தலைவராக அமர்ந்து கொண்டார். இத்தகைய துன்பம் வந்தாலும் கிளிகள் யாவும் ஒன்றாகவே இருக்கவேண்டும் இரைதேடச் செல்வதாக இருந்தாலும் ஒன்றாகவே போய்வர வேண்டும் என்று கிளிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இந்தக் கிளிகள் குடியிருந்த காட்டுக்கு வந்த ஒரு வேடன், ஏராளமாக ஒரே மரத்தில் தங்கியிருந்த கிளிகளைப் பார்த்து அவையனைத்தையுமே ஒரே சமயத்தில் பிடித்துக் கொண்டால் அவற்றை நல்ல விலைக்கு விற்றுவிடலாம் என்று திட்டமிட்டான். இரை தேடுவதற்காக விக்கிரமாதித்தனான ராஜ கிளியின் தலைமையில் ஆயிரம் கிளிகளும் ஒன்றாகப் பறந்து செல்வதை வேடன் கவனித்தான். அவை திரும்பி வருவதற்கு முன்னரே பெரியதொரு வலையை விரித்து மரம் சூழக் கட்டிவிட்டான். வலை கட்டப்பட்ட சங்கதி தெரியாமல் எல்லாக் கிளிகளும் மரத்தில் வந்து அமர்ந்து கொண்டன.

தனக்கு வாய்த்த தருணம் இதுதான் என்று கருதிய வேடன் இழு சுருக்கின் மூலம் பொறியொன்றை இயக்கி ஏற்கனவே கட்டப்பட்டிருந்த வலைக்குள் அத்தனை கிளிகளும் ஒன்றாகவே அகப்படுவதற்கு வழி செய்தான். தாங்கள் மோசம் போய் விட்டதை உணர்ந்த கிளிகள் இராஜகிளியாகிய தங்கள் தலைவன் காட்டிய தவறான வழியினால் ஒன்றாகவே வேடன் வலையில் அகப்பட்டு விட்டோம் என இராஜ கிளியைத் திட்டத் தொடங்கின. இராஜகிளி அனைத்துக்கிளிகளையும் அமைதியாக இருக்கும்படி கூறியது.

"நாம் எல்லோரும் ஒன்றாக அகப்பட்டுள்ளோம் எனவே தனக்கு நல்ல யோகம் ஏற்பட்டிருக்கிறது என்று வேடன் மகிழ்ச்சியில் இருக்கிறான். அவன் ஒவ்வொரு கிளியாக பிடித்து தன் கூடைக்குள் சேர்ப்பான். அதற்கு முன்னர் நீங்கள் அனைவரும் இறந்து விட்டதாக அவன் நம்பும்படி பேச்சு மூச்சற்றுக் கிடவுங்கள். வேடன் ஒவ்வொரு கிளியையும் எடுத்து உயிர் இருக்கிறதா என்று பார்ப்பான். உயிரில்லை என்று அறிந்ததும் ஒவ்வொரு கிளியாகப் பிடித்து நிலத்தில் போடுவான். அப்படிப் போட்டதும் நீங்கள் எவரும் எழுந்து பறந்துவிட முயலக்கூடாது. அவ்வாறு நீங்கள் செய்தால், தன்னை ஏமாற்றுவதற்காக கிளிகள் நாடகமாடுவதாக வேடன் கருதிவிடுவான் அதனால் ஏனைய கிளிகள் அனைத்திற்கும் ஆபத்து ஏற் பட்டுவிடும். ஒவ்வொரு கிளியும் கீழே ஏறியப்படும் போது கேட்கும் சத்தத்தைக் கொண்டு ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணுங்கள். ஆயிரமாவது கிளி நிலத்தில் வீழ்ந்ததும் அனைவரும் எழுந்து பறந்து விடலாம்"

இவ்வாறு இராஜகிளி கூறியது. அனைத்துக் கிளிகளும் கண்களைக் மூடிக் கொண்டு செத்த கிளிகளைப் போல் வலைக்குள் கிடந்தன. இராஜகிளி கூறியதுபோல் வேடன் ஒவ்வொரு கிளியாக எடுத்துப்பார்த்தான். அவை ஒவ்வொன்றும் இறந்து கிடப்பதைக்கண்டு பெரு ஏமாற்றம் அடைந்தான். ஒவ்வொரு கிளிய ாக எடுத்து பரிசோதனை செய்துவிட்டு 'தொப்பு தொப்பு' என்று கீழே போட்டான் இவ்வாறு தொளாயிரத்து தொன்நூற்றொம்பது கிளிகளையும் தரையில் போட்டான். ஆயிரமாவது கிளியை எடுத்து பரிசோதித்துப் பார்க்கும் போது வேடனுடைய இடுப்பில் சொருகியிருந்த அவனுடைய கத்தி தொப்பென்று கீழே விழுந்தது.

நிலத்தில் வீழ்ந்து கிடந்த ஏனைய கிளிகளுக்கு கீழே விழுந்த கத்தியும், கிளிதான் என்று எண்ணத் தோன்றியது உடனடியாக எல்லாக் கிளிகளும் எழுந்து பறந்தன. இறந்து போனதாக தான் கருதிய கிளிகள் இறந்து போய்விட்டதாக தன்னை ஏமாற்றிவிட்டன என்று வேடன் கடுங்கோபமுற்றான். அவனுடைய கையில் ஆயிரமாவது கிளியாக இராஜகிளி இருந்தது. அந்தக் கிளியையும் இறந்துவிட்ட கிளியாகவே அவன் கருதவில்லை. அக்கிளியின் கழுத்தை முறுக்கி பிய்த்துக் எறிவதற்காக முயற்சித்தான். இராஜகிளியாக இருந்த விக்கிரமாதித்தனுக்கு நடந்த தவறு தெரிந்து விட்டது. உடனே கண்விழித்து 'வேடர்களுக்கு அதிபதியான வேடராஜாவே நீ என்னை ஒன்றும் செய்யாதே என்னை உயிருடன் விட்டுவிட்டால் உன்னை ஏமாற்றிய அந்தக் கிளிகளை விற்று நீ பெறப் போகும் பணம் எவ்வளவோ அதனை விட பலமடங்கு பணம் நான் உனக்கு சம்பாதித்து தருகிறேன்' என்று சொன்னது.

கிளியின் கதையைக் கேட்ட வேடன் அதனை நம்புவதா, இல்லையா என்று பலவாறு யோசித்தான். 'ஒரு கிளி இத்தனை அழகாக பேசுவதால் இந்தக்கிளியின் வார்த்தைகளை நம்பலாம்.' என்று திடப்படுத்திக் கொண்டான். அப்போது கிளி மீண்டும் வேடனுடன் உரையாடியது. என்னை நகரத்திற்குள் எடுத்துப் போய் அங்கே நன்றாகப் பேசக்கூடிய கிளியொன்று என்னிடம் விற்பனைக்கு இருக்கிறது. இக்கிளியை வாங்கி, தங்கள் வர்த்தக நிலையத்தில் வைத்திருப்பவர். பல மடங்கு லாபம் சம்பாதிப்பார் என்று கூறும். அந்த நகர வர்த்தகர்களுக்குத் தலைவனான செட்டியாரிடம் என்னைக் கொண்டு போய்க்காட்டு அவர் கிளியின் விலை என்ன என்று உன்னிடம் கேட்பார். கிளியே அதன் விலையைச் சொல்லும் என்று செட்டியாரிடம் கூறு என்று வேடனிடம் கிளி கூறியது.

## இராஜகுமாரன்

வேடனும் கிளி கூறியபடி வர்த்தகர்களுக்குத் தலைவரான செட்டியாரிடம் கிளியைக் கொண்டு போய்க் காட்டினான். செட்டியாரிடம் கிளியே தன்னுடைய விலை ஆயிரம் பொன் என்று கூறியது. இதனைக் கேட்ட செட்டியார் அதிர்ந்தே போனார். 'ஒரு சாதாரண கிளிக்கு ஆயிரம் பொன் கொடுக்க முடியுமா' என்று இரைந்தார். ஆனால் கிளியோ 'செட்டியாரே சாதாரண கிளியைப் போல் என்னையும் கருதி விடாதீர்கள். உங்கள் கடையில் நடைபெறும் வியாபாரத்திற்கு நானே பொறுப்பாக இருப்பேன். ஒவ்வொரு பொருளுக்கும் நானே விலை கூறி விற்பேன். ஆகவே பணத்தை ஒரு பொருட்டாக கருதாமல் வேடர் தலைவரிடம் ஆயிரம் பொன்னைக் கொடுத்து என்னை உங்கள் வசமாக்கிக் கொள்ளுங்கள். அதன் பிறகு உங்கள் வியாபாரம் எவ்வாறு பெருகுகிறது என்பதனையும் பாருங்கள். என்று கிளிகூறியது.

செட்டியார் மறுபேச்சின்றி ஆயிரம் பொன்னை எடுத்து வேடனிடம் கொடுத்து கிளியை பெற்றுக் கொண்டார்.

(தொடரும்)

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................. ஒப்பம்:..................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

**அபிமான வாசகர் போட்டியில் பத்தாவது:**
**தேர்தல் கூட்டுக்கும் கள்வர் கூட்டுக்கும் அடிப்படை ஒற்றுமை என்ன?**
**முடிவுத் திகதி நவம்பர் 30**

*போனவாரம் தமிழ்க் கட்சிக்கூத்தணியின்ர நாட்டுக் கூத்தைப் பார்த்து அதிர்ந்து போயிருப்பியள். உந்தாக்களின்ர கூத்தை முழுசாப்பார்க்க முடியாம மேடையில அடிதடி துவங்கிட்டுதென்றதால பாதியில நிறுத்த வேண்டியதாப் போச்சுதெண்டு மனவருத்தம் உங்களுக்கு மட்டும்தான் எண்டு நினைக்காதையுங்கோ... இருந்தாலும் பாருங்கோ இவையின்ர கூத்தை விடவும் அட்டகாசமான ஆட்டங்களை எங்கட யூ.பி.காட்டிக் கொண்டிருக்கிறார்.*

*மகேஸ்வரரின்ர தேர்தல் பிரசாரத்துக்கு உதவி புரியாவிட்டால் இந்த காதில பூ நன்றிகெட்டவனா ஆகிடுவான் பாருங்கோ. அதனால யாழ்ப்பாணத்துல யூ.பி.யார் செய்யிற பிரசாரத்துக்கு நானும் கொஞ்சம் உதவலாம் எண்டு வெளிக்கிட்டன்.*

*வாக்குறுதி வழங்கிறதில மகேஸ்வரர் வித்தியாசமானவர் தெரியுமே... பொதுவா வேலை தருவம், வீடுகட்டித் தருவம் எண்டு சொல்லுறதுதான் மற்ற அரசியல்வாதிகளின்ர வழக்கம். ஆனால் நம்ம ஆள் கொடுக்குற முதல் உறுதி மொழி என்ன தெரியுமே... தான் வெற்றி பெற்றால் அபிவிருத்தித் தொண்டர்கள், சமூர்த்தி அலுவலர்கள் என்று குடாநாட்டில வேலை செய்யிற அத்தனை பேரையும் வேலையை விட்டு நீக்கிடுவேன் என்பதுதான் வித்தியாசமான ஸ்டைல் பாருங்கோ...*

*குடாநாட்டில யூ.பி.நடத்தின தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒண்டில ஓரமா உட்க்கார்ந்து அவரின்ர பேச்சை கேட்டனான். என்ன ஒரு அரசியல் சாணக்கியம் தெரியுமோ... ரணில் பிச்சை வாங்கோணம்!*

*மேடையோரமா யானையில வந்திறங்கினார் யூ.பி. மேடையை சுற்றும் முற்றும் பார்த்து விட்டு சுமார் பத்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்த மைதானத்தை நோக்கி தனது பேச்சை ஆரம்பித்தார்..*

*"அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே... நான் மற்ற அரசியல்வாதிகளைப் போன்ற சாதாரணமானவன் அல்ல. ஏனையவர்கள் ஒப்புக்காகவென்றாலும் மக்களுக்கு கொடுப்பதைப் பற்றித்தான் பேசுகிறார்கள். நான் அப்படியல்ல எனது கட்சி வெற்றிபெற்றால் இளைஞர்கள் கஷ்டப்பட்டு பெற்ற வேலைகளை பிரித்தெடுக்க முடியுமான வரை பாடுபடுவேன். பலர் வேலை இல்லாமல் இருக்கும் போது என் வியாபாரத் தேவைகளுக்கு வேலைக்கு ஆள்பிடிப்பது கஷ்டமாக இருக்காது என்ற தூர நோக்கு சிந்தனை என்னிடம் இருக்கின்றது.*

*யாழ்ப்பாணத்தில் தேவைக்கு அதிகமாக கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை உடனடியாக நிர்மூலம் செய்ய வேண்டும். அப்படி செய்தால் எப்போதாவது ஒரு காலத்தில் அவற்றை மீண்டும் கட்டும் போது அந்த கட்டட ஒப்பந்தத்தை எனக்கு பெற்றுக் கொள்ள முடியும். இதெல்லாம் நான் எனக்காக செய்வதென்று நினைத்துக் கொள்ளாதீர்கள். இளைஞர்களுக்கு வியர்வை சிந்தி உழைக்க தொழில் தேவை. இப்போது இருக்கும் கோவில் குளங்களை உடைத்தெறிந்து விட்டு புதிதாய் கட்டும் போது எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்? எத்தனை சீமெந்து மூட்டைகள் விற்கலாம் என்று யோசியுங்கள்!*

*எனது தேர்தல் விஞ்ஞாபனத்தை உங்கள் முன் சமர்ப்பித்திருக்கிறேன் நான். ஐ.தே.க.வில் வோட் கேட்டாலும் என் வழி தனி வழிதான். என் தேர்தல் விஞ்ஞாபனம் தனியானதுதான். ஐ.தே.க.வின் உண்மையான விஞ்ஞாபனத்தில் நான்பல புதிய விடயங்களை புகுத்தியிருப்பதையிட்டு நீங்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை. இதுவரை காலமும் தமிழ்த் தலைமைகள் ஐ.தே.க. சொன்னபடிதான் கேட்டன. ஆனால் நான் என் இஷ்டப்படிதான் ஐ.தே.க.வை வழி நடத்துவேன்.*

*அன்பார்ந்த வாக்காளர்களே! சில கட்-அவுட்களை தீ வைத்தது என் கொள்கைகளுக்கு முரணானது என்று சிலர் கூக்குரலிடுகின்றனர். ரணில் சொன்னதை நான் பகலிலே புரிவேன் அவர் சொல்லாததையும் இரவிலே புரிவேன். எனக்கு அசிட் வீசுவதற்கு நம்பர் பிளேட் இல்லாத வாகனங்கள் ஓடித்திரிவதாக நான் அடிக்கடி கூறுவதற்குப் பயந்து யாரும் என் கூட்டங்களுக்கு வராமல் இருக்கத் தேவையில்லை. அது சும்மா ஒரு கற்பனை மட்டும்தான். சயனைட்டை தொங்கவிட்டுக்கொண்டு திரிவதாகவும், வயிற்றில் குண்டை கட்டிக் கொண்டு திரிவதாகவுமெல்லாம் எதிர்வரும் நாட்களில் கூற இருக்கிறேன். இவைகளுக்கு எவரும் பயப்படத்தேவையில்லை!*

*பாதை திறப்பதைப்பற்றி கடந்த வருடம் சொன்னதையே இம்முறையும் சொல்கிறேன். அடுத்த தடவையும் அதையேதான் சொல்வேன். நான் பிளைட்டில் போய் வருகிறேன் என்பதற்காக பாதை திறக்கும் விஷயத்தை மறந்து விட்டேன் என்று நினைக்காதீர்கள்.*

*வேறுயாரும் சண்டை பிடித்து அல்லது பேச்சு வார்த்தை நடத்தி தரை வழிப் பாதையை திறப்பார்களானால் அது நான் சொல்லித் தான் திறக்கப்பட்டதாக அறிக்கைவிட எப்பொழுதும் தயாராகவே இருக்கிறேன். அந்த அறிக்கை முன்பக்கத்தில் பிரசுரிக்க வழமைபோலவே என் உதயச்சினேகிதர்கள் காத்திருக்கிறார்கள் என்பதையும் கூற விரும்புகிறேன்."*

*(கண்ணை விழித்துப் பார்க்கிறார் யூ.பி.பத்துப் பேரில் 9 பேர் எப்போதோ எழுந்து போயிருந்தார்கள். ஒருவர் மட்டும் பேயறைந்தாற் போல் மேடையை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்.)*

*"நீயொருத்தனாவது என் பேச்சை முழுசாக..." என்று யூ.பி. வாயை திறக்கும் போது "நீங்கள் கையில பிடிச்சிருக்கிற மைக் என்னுடையது ஐயா... அத வாங்கிட்டு போகலாமென்று தான்...!"*

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)










↑ சிறார்களை மகிழ்விக்கும் வோல்ட் டிஸ்னி 1994ல் தயாரித்த 'லயன் கிங்' என்ற அனிமேஷன் படம் தான் உலகிலேயே அதிகம் விற்பனையான வீடியோ பிரதி என்ற சாதனையைப் படைத்துள்ளது.

வோல்ட் டிஸ்னியின் 32வது தயாரிப்பான 'லயன் கிங்' மனிதர்களின் பாத்திரங்கள் அல்லாமல் மிருகங்களை வைத்து உருவாக்கப்பட்ட முதல் அனிமேஷன் படமாகும்.

இந்த 'லயன் கிங்' வீடியோ பிரதிகள் உலகம் முழுவதும் 557 இலட்சம் (சுமார் 5 1/2 கோடி) வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பசும் சோலையாகக் காட்சியளிக்கும் இடத்தின் மத்தியில் எரிமலை ஒன்று, வெடித்து நெருப்பைக் கக்கிய பின் அடங்கிப் புகை மண்டலமாக அளிக்கும் காட்சிதான் இது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள தீவுகளில் ஒன்றான லுசோன் தீவில் உள்ள எரிமலைதான் இது. கடந்த சில மாதங்களுக்கு முன் இருதடவைகள் வெடித்துத் தன் சீற்றத்தை வெளிக்காட்டியது இந்த எரிமலை.

இந்த அபாயத்தில் இருந்து தப்பிக்க சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் தமது வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் போய்த் தங்கினர். இப்படி இடம்பெயர்ந்தவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணங்களை வழங்கியது. ↓







↑ இந்தியாவில் நவராத்திரி காலம் பெருமளவிலும் களை கட்டி விடுகிறது. இலங்கையிலும் தான்.

இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் நவராத்திரி விழாவில் துர்க்கை வழிபாடு விரிவாக இடம்பெறுகிறது.

இங்கு படத்தில், விதவிதமான ஆபரணங்களினால் அலங்கரிக்கப்பட்ட ஆதிபராசக்தியின் சொரூபத்தைக் காணலாம். அண்மையில் நவராத்திரி விழாவின்போது இந்த அலங்காரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வப் புதல்வி தர்மிஷா 17.11.2001

யாழ்ப்பாணம் பருத்தித்துறை கப்பர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ராமமூர்த்தி-சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வி தர்மிஷா தனது முதலாவது பிறந்த தினத்தை 17.11.2001 அன்று லண்டனில் (Sherwood Avenue) உள்ள அவரது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார்.


அவரை அன்பு அம்மா, அப்பா, உறவினர்கள் மற்றும் அப்பா, அம்மாவின் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடும் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: எஸ். நருலேஸ்வரன்

படத்தில் காணப்படும் சிறுமிகள் இருவரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கண்ணிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா தொடுத்துள்ள தாக்குதலில் இந்த அப்பாவிச் சிறுமிகள் சிக்கித் தமது கால்களை இழந்துள்ள அவலம் ஏற்பட்டது.

இவர்கள் இருவரும் இப்போது பாகிஸ்தானின் ஹைதராபாத்தில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ↓




## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

29.11.2001

திருகோணமலையைச் சேர்ந்த யோகேந்திரன்-சாந்தினிதேவிகா தம்பதியினரின் செல்வப் புதல்வி பிரதிக்ஷா தனது முதலாவது பிறந்த தினத்தை கனடா ரொறன்ரோவில் உள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா(இலங்கை), தாத்தா, அம்மம்மா (கனடா) விஜிமாமா, பாரதி மாமி, விமாஜினி மச்சாள், விதுஷாஷ் மச்சான் (கனடா), சுதா சித்தா, சந்திரா சித்தி (கனடா) ரவிந்திரன் பெரியப்பா, விமலா பெரியம்மா, சஞ்சீவ் அண்ணா (இலங்கை) விஜயகுமார் மாமா(லண்டன்) ரோகினி அத்தை, விது மச்சான், அஜய் மச்சான், சரண் மச்சான் (இலங்கை) சுரேந்திரன் பெரியப்பா, ரேனு பெரியம்மா, அஜந்தன் அண்ணா, சதானசிகா அக்கா (இலங்கை) ஜெயனி அத்தை, நிசாந்தினி அத்தை (இலங்கை), ஜொனதீபல் ஜெயபாலராஜா பெரியப்பா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பிரதிக்ஷா குடும்ப ஸ்ரீ பத்ரகாளி அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



செல்வி யோகேந்திரன் பிரதிக்ஷா (பிரதி)

தகவல்: க. யோகேந்திரன் மொன்றியல்.



இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ் 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்தாபனத்தால் பேராலியகொடவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச. 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.